உ

# 12 இராசிகளுக்கும் ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவநாடி மூலம் பாடல் வடிவில் உதித்த பரிகாரங்கள்-பலன்கள் : 2014-2017



# சனிப்பெயர்ச்சி

## பாக்கியம் உள்ளவர்கள் மட்டுமே படித்துப் பலனடைய முடியும்

பரிகார ஆலய தொலைபேசி எண்களுடன் முழு விவரங்கள் அடங்கியுள்ளது

திருக்கணித பஞ்சாங்கம் 02.11.2014 . 25.01.2017
வாக்கிய பஞ்சாங்கம் 16.12.2014 . 20.11.2017

**( திருக்கணிதப்படி கணிக்கப்பட்டது )**

திருக்கணித ரீதியாக சனிப்பெயர்ச்சி பலன்கள் கணிக்கப்பட்ட போதிலும், இது **'திருநள்ளாறு'** வாக்கிய சனிப்பெயர்ச்சி பலன்களுக்கும் பொருந்தும். அதிக வித்தியாசம் இருக்காது. இப்பலன்கள் **'வாக்கியம்'** மற்றும் **'திருக்கணிதம்'** இரண்டு முறைகளுக்கும் பொருந்தும் வண்ணம் மிகத்துல்லியமாகக் கணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது



**இதழின் தனிச்சிறப்பு**

**ஜோதிட இதழின் வரலாற்றிலேயே முதன் முதலாக நட்சத்திரங்களுக்கு ஏற்ப ஜீவநாடி மூலம் மிகத் துல்லிய பரிகாரங்கள் – பலன்கள்**


பலன்களைக் கணித்து வழங்குபவர்

'ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்' 'ஜீவநாடி கலையரசு'

**P. D. ஜெகதீஸ்வரன்**

துணை ஆசிரியர்: திருவருள் சக்தி M.C.A., M.Phil



பதிப்புரிமை பெற்ற வெளியீட்டாளர்:

**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**

நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு,
புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Ph : 044 2811 6770 | Cell: 72999 21880/ 72990 21880
E mail : apsarapublications@gmail.com



**WARNING**

This Special issue Book should not be reproduced by any means or translated into any language in whole or part. All Rights reserved only © by the Publishers.

# கணிப்பாளரின் கருத்துரை

**அன்பான வாசகர்களுக்கு வணக்கம்,**

இராகு கேது பெயர்ச்சியுடன் சனி வக்ர நிவர்த்தி பலன்களின் பரிகாரங்கள் அடங்கிய புத்தகம் விற்பனையில் சாதனை படைத்தது மட்டுமல்லாமல் பல நல்ல வாசகர்களை எனக்கு உருவாக்கித் தந்துள்ளது என்றே சொல்ல வேண்டும். ஜீவநாடி என்பது எவரோ ஒருவருக்கு அல்லது சிலருக்கு மட்டுமே 100% சிறப்பாக வரும். அதில் ஒருவன் அடியேனும் எனும் பெயர் பெற்று புகழோடு விளங்கி வரும் இந்த நாளில் சனிப்பெயர்ச்சி பலன்களை ஜீவநாடியுடன் இணைத்து எழுதி மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மிகப்பெரும் மகிழ்ச்சியினை அடைகின்றேன்.

சனிபகவான் நமது கர்ம வினையை அனுபவிக்க வைப்பவர் என்பதால் அவரது சஞ்சாரப் பலன்கள் பொதுவாக எதிர்மறைப் பலன்களாகவே எடுத்தியம்பப்பட்டுள்ளது. எனவே அதைக் கண்டு அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. காரணம் காக்கும் முருகப்பெருமான் ஸ்ரீஞானஸ்கந்த மூர்த்தியும், அந்த சித்தர்களும் ஜீவநாடி சுவடியில் வந்தும், உள் மனதில் உள் நின்று உணர்த்தியும், கவிகளாகவும் பாடல்களாகவும் 27 நட்சத்திரத்திற்கு 36 ஆலயங்களை கை காட்டிக் கொடுத்துள்ளார்கள். சனியின் தாக்கம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் 7½ சனி, அஷ்டமச் சனி, கண்டகச்சனி, அர்த்தாஷ்டமச் சனி, மங்குச் சனி, பொங்குச் சனி, மாரகச் சனி என மலை போல் பல சனிகள் கூடி மாசான பலன்களைத் தந்து மகிழ்ச்சியைக் குறைக்க நினைத்தாலும் நமது ஜீவநாடியில் வந்துள்ள ஆலயப் பரிகாரங்களை முறையாகச் செய்தாலே எண்பது சதவீதம் கெடுபலன்கள் குறைந்து விடும். எமது தவ வலிமையாலும் எனது குருநாதர்கள் ஆலாம்பாளையம் ஸ்ரீசக்திவேல் அடிகளார் மற்றும் திருவண்ணாமலை ஸ்ரீவகாப் ஜோதி அக்பர் சுவாமிகள், மதுரை தெய்வத்திரு ஸ்ரீமத் ஜெயவீர தேவா ஆகியோரின் வழிகாட்டுதல்கள் மற்றும் ஆசியாலும் மாறாத பலன்களை மக்களுக்குத் தந்து அதிசயம் பல காட்டிடும் ஜீவ நாடியைப் படிக்கும் சக்தியைக் கைவரப் பெற்றோம். 16 வயது முதல் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியைப் பூஜித்து ஜீவநாடியில் வந்த வாக்குகளை மக்களுக்கு சொல்லி மலை போல வந்த துன்பங்களை எல்லாம் பனி போல் மாற்றிய அதிசயங்கள் ஏராளம். அற்புதங்கள் தாராளம் சொல்லில் அடங்கா சூட்சும நிலைகள், எண்ணில் அடங்கா நிகழ்வுகள் ஏராளம். பயன் அடைந்து பாராட்டியவர்கள் ஏராளம்.

நம் நாட்டு மக்கள் அனைவரும் நம்மைத் தேடி வந்து நாடி கேட்பது என்பது இயலாத காரியம் என்பதால். நாம் இந்த புத்தக வாயிலாக தேடிச் சென்று சேவை செய்யவே இராகு கேது பெயர்ச்சி வெளிவந்தது. அதே போல் அதே மாறாத எண்ணத்துடனும், மனநிறைவுடனும், பொருளாசையின்றி அருளாசையில் அற்புதமாக உங்கள் கையில் தவழ்ந்து கொண்டு இருக்கிறது இந்த சனிப்பெயர்ச்சி புத்தகம்.

**ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்**
**P.D. ஜெகதீஸ்வரன்**
**துணை ஆசிரியர்**
**திருவருள் சக்தி**
**செல்: 96596 90395**



இதில் விசேஷமாக பல விதிகளை அனுசரித்து கடுமையான நேர சூழ்நிலைகளை எல்லாம் அனுசரித்து ஒவ்வொரு இராசிக்கும் உரிய பலன்களை நாடியில் வரும் செய்திகளை நலமாக எடுத்து நட்சத்திர ரீதியான பரிகாரங்களை எழுதியிருக்கிறேன். இது ஏதோ எதுகை தட்டி, மோனை முட்டி இலக்கண மரபு மீறி எழுதப்பட்ட பாடல்கள் என நினைக்க வேண்டாம். ஸ்ரீகந்தப் பெருமான் எம்முன் நின்று உணர்த்திய விஷயங்களை அவரது மொழியில் தர முடிவது 100% கடினம். அதே சமயம் அவர் நினைப்பதை உணர்ந்து அப்படியே தானாக எழுதும் முறையில் (Autometic writing) எழுதப்பட்டதால் எதுகை, மோனை போன்ற இலக்கண விதிகளுக்கு அப்பாற்பட்டும், எது வந்ததோ அதை அப்படியே எழுதியும், வாசகர்களுக்கு வழங்கி இருக்கிறேன்.

வாசகர்கள் பலர் எம்மை நேரில் சந்திக்க ஆவலாக இருக்கிறார்கள். தொலைபேசியில் பல முறை முயன்றும் என்னிடம் பேச முடியவில்லை என்று வருத்தப்படுகிறார்கள். காரணம் எமது பணி எந்த விதத்திலும் பாதிப்படையக் கூடாது என்று கருதுவதாலும் நேரமின்மையாலும் அனைவரிடமும் அலைபேசியில் பேச முடிவதில்லை நேரிலும் நாடி படிக்க முடிவதில்லை. அதையும் மீறி சில தீவிர வாசகர்கள் நேரடியாக அமாவாசை அன்று நமது ஸ்ரீஞானஸ்கந்த மூர்த்தி ஆலயத்திற்கு வந்து பூஜையில் கலந்துக் கொண்டு ஐயா உங்களைப் பார்த்ததே சந்தோஷம் என விபூதி வாங்கிச் செல்கிறார்கள். தற்போது கூட்டம் கூடிக் கொண்டே போவதால் அமாவாசைக்கு வருபவர்கள் அனைவரையும் தனிப்பட்ட முறையில் கவனிக்க முடிவதில்லை. இது ஒன்றும் தற்பெருமைக்குச் சொல்லவில்லை. எனது தனியாத ஆதங்கத்தை அன்புடன் அறிவித்துக் கொள்கிறேன். எனவே வாசகர்கள் இன்னும் 2½ ஆண்டுக்கு ஜீவநாடியில் வந்த பரிகாரங்களை மட்டும் கடைபிடித்தால் போதும்.

ஒரு சில ஆலயங்கள் எட்டுமுறை போக வேண்டும், ஒன்பது முறை சென்று ஓயாமல் தரிசிக்க வேண்டும் என வந்திருக்கும். ஒரு முறை உடனடியாக தரிசனம் செய்துவிட்டு சனி விருச்சிக இராசியை விட்டு தனுசு இராசிக்கு செல்லும் 2½ ஆண்டுக்குள் மீதமுள்ள தரிசனங்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் சென்று தரிசிக்க வேண்டும். இது எல்லா நட்சத்திரங்களுக்கும் பொருந்தும். சென்ற

முறை ஆலயங்களைப் பற்றிய விபரங்கள் தெரியாமல் வாசகர்கள் தடுமாற்றம் அடைந்ததால் இந்த முறை தொலைபேசி எண்ணுடன் ஒரு தனிப் பட்டியலே தந்திருக்கிறேன். அதை வாசகர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அதே போல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இன்றைய கால சூழ்நிலையில் எந்த ஓர் ஆலயத்தையும் இணையத்தில் கொடுத்தால் எல்லா விஷயங்களையும் இணையம் சொல்லி விடும். படிக்காதவர்கள் கூட இந்த புத்தகத்தை இணையம் வைத்திருப்பவரிடம் கொடுத்தால் இன்டர்நெட் மூலம் ஆலயம் பற்றிய அத்துணை செய்திகளையும் அறிந்துக் கொள்ளலாம். எனவே நாடி படிக்கவோ ஆலயம் பற்றிக் கேட்கவோ அதிகம் என்னைத் தொடர்பு கொள்ளும் அவசியம் இருக்காது என நினைக்கிறேன். காரணம் அனைவருக்கும் நாடி படிக்கும் நேர அவகாசம் இப்போது இல்லை என்பதே வருத்தமான செய்தி.

2.11.2014 ஞாயிற்றுக்கிழமையன்று ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கு சனிபகவான் தனது துலாம் வீட்டு உச்ச நிலை சஞ்சாரத்தைப் பூர்த்தி செய்துக் கொண்டு விருச்சிக இராசிக்கு விசாகம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் இருந்து 4ஆம் பாதத்திற்குப் பெயர்ச்சியாகிறார். இது திருக்கணிதப் பஞ்சாங்கப்படி பெயர்ச்சியாகும். நிலை, பலன்களைப் பொறுத்த வரை திருக்கணிதம் மற்றும் வாக்கியம் ஆகிய இரு பஞ்சாங்கங்களுக்கும் பொருந்தும்படி கணிக்கப்பட்டுள்ளது. சனியை மட்டுமல்லாமல் குரு, இராகு, கேது போன்ற முக்கிய கிரகங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பலன் எழுதப்பட்டுள்ளது.

### நாட்டிற்கு நாடி சொல்லும் செய்தி

சனிப்பெயர்ச்சி இந்த நாட்டிற்கு என்ன செய்யும் என்ற கேள்வியை எழுதி ஸ்ரீஞானஸ்கந்த மூர்த்தி பாதத்தில் வைத்துப் பூஜித்து 8 வகையான நைவேத்யம் படைத்து ஜீவநாடியை சகஸ்ர நாமத்தால் அர்ச்சனை செய்து 27 முறை ஆலயத்தை சுவடியை எடுத்துக் கொண்டு வலம் வந்து பலன் கேட்கப்பட்டது. பின்வரும் பாடல் உதித்தது.

**"தேளேறி வருகின்ற மந்தன்**
**திரவிய லாபம் தரும்**
**புதிய போர் வரும்**
**புண்ணிய ஷேத்ர பாதிப்பாகும்**
**புதுப்புது வியாதி வரும்**
**பூரிப்படையும் வளர்ச்சி வரும்**
**பெண்களுக்கு தீது வரும்**
**தீயாலே விபத்து வரும்**
**கடலிலே சீற்றம் வரும்**
**கட்சிகள் பூசலாகும்**
**அரசியல் ஓங்கி நின்று**
**அதிகாரம் சிறப்படையும்**
**ஆட்சி நிலை ஸ்திரமாகும்**
**அனைத்து தொழிலும் உயரும்**
**புதுப்புது சோதனைகள்**
**புத்துணர்ச்சி பெற்று வரும்**
**பரிகாரம் ஒன்று தான்**
**பசியாற அன்னமிடு**

**ஆசி! ஆசி! ஆசி!**

— ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவநாடி

பொருள் விளங்கும் என நினைக்கிறேன். புதிய புதிய சவால்களை நாடு சந்திக்கும் நிலையை தவிர்க்க ஒரே பரிகாரம் அன்னதானம் செய்வது தான். எனவே மக்கள் அன்னதானத்தை அடிக்கடி செய்து நாட்டிற்கு சுபிட்சம் வர பிரார்த்தனை செய்யுங்கள். ஓம் ஸ்ரீஞானஸ்கந்த மூர்த்தி அருளால் சுபிட்சம் அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!

**குறிப்பு: வாசகர்கள் புதன், வியாழன் மட்டும் இரவு 8 மணி முதல் 10 மணி வரை அமாவாசை தவிர்த்து தொடர்புக் கொண்டு தொலைபேசியில் பேசலாம். செல்: 96596 90395**

வாசகர்கள், இங்கு கொடுக்கப்பட்டுள்ள அந்தந்த ஆலயங்களின் தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு கோவில் முகவரி, செல்லும் வழி பூஜை முறைகள், ஸ்தல வரலாறு பூஜை நேரங்கள், திறக்கும் நேரங்கள் ஆகியவற்றை அறிந்துக் கொண்டு அந்தந்த ஆலயங்களை தரிசனம் செய்யச் செல்லலாம். இன்னும் கூடுதல் தகவல் தேவை எனில் இணைய தளத்தில் தேடி அறிந்துக் கொள்ளலாம். எனவே ஆலயங்கள் தொடர்பான சந்தேகங்களை என்னிடமோ பத்திரிகை அலுவலகத்திலோ கேட்பதை முடிந்த அளவு தவிர்ப்பது நல்லது. அலுவல்கள் அதிகம் உள்ளதால் சரியான பதில் கிடைக்காமல் நீங்கள் ஏமாறக் கூடாது என்பதற்காக இதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மிகக் கடுமையான வேலைச் சுமையாலும் இரவு பகல் பாராது உழைத்து இந்தப் பணியைச் செய்திருக்கிறேன். இது இறையருளால் மட்டுமே நடக்கின்ற காரியம் என படிக்கின்ற அனைவரும் உணர்ந்துக் கொள்வீர்கள் என நினைக்கிறேன். எவர் ஒருவர் தமது வாழ்நாளில் இந்த 36 ஆலயங்களையும் தரிசனம் செய்கிறாரோ அவர் மன்னன் போன்ற வாழ்வை அடைவார் என்கிறது ஜீவநாடி இந்த 2½ ஆண்டு மட்டுமல்லாது வாழ்நாளில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்த ஜீவநாடியில் சொன்ன ஆலயங்களை தரிசித்து மகிழலாம். தரமான வாழ்வு கிட்டும் என்பதை அனுபவத்தில் 100% உணர்ந்து கொள்ளலாம். வியாபார நோக்கில் இது வெளியிடப்பட்டதல்ல. சுயவிளம்பரம் தேடிக்கொள்ள இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவில்லை. சேவை மனப்பான்மை ஒன்றிலேயே இது செயல்படுத்தப்பட்டதை வாசகர்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக உறுதி அளிக்கப்படுகிறது. இதைபடித்துப் பயன்படுத்தி பாக்யம் பெற்றோர்கள் வாழ்த்தே எங்களை வழிநடத்தும் ஆசானாகும். அடுத்த அடி எடுத்து வைக்க அடிகோலும் தாசனாகும். மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகும். நிரந்தரமற்ற பொருளீட்ட பல வழிகள் இருந்தாலும் அருளீட்ட இதுவே தெய்வத்திற்கு செய்திடும் சேவையாகும். தெய்வத்தின் அருள் கிடைத்து விட்டால் வாழ்வில் தேடிச் செல்ல ஒன்றுமில்லை. முக்திக்கு வழியே பக்தியாகிறது அப்படிப்பட்ட பக்தியே முக்திக்கு கொண்டுச் செல்லும். மாபெரும் சக்தியாகிறது.

# ஜீவ நாடியில் சொல்லப்பட்டுள்ள பரிகார ஸ்தலங்களின் விபரங்கள்

| நட்சத்திரம் | ஆலயம் | ஊர் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| *1. அசுபதி* | திருவஹிந்திபுரம் | கடலூர் | **04142–287515** |
| *2. பரணி* | ஆஞ்சநேயர் | நாமக்கல் | **04286–233999** |
| *3. கிருத்திகை 1* | கடம்பர்கோவில் | குளித்தலை, திருச்சி | **04323–225228** |
| *4. கிருத்திகை 2,3,4* | சென்னிமலை | ஈரோடு மாவட்டம் | **04294–250223** |
| *5. ரோகிணி* | ஆதிதிருவரங்கம் | விழுப்புரம் | **04153–293677** |
| *6. மிருகசீருஷம் 1,2* | கிருஷ்ணர் | உடுப்பி | **0820–2520598** |
| *7. மிருகசீருஷம் 3,4* | சிக்கல் | நாகப்பட்டினம் | **04365–245452** |
| *8. திருவாதிரை* | சிவன் | சீர்காழி | **04364–270235** |
| *9. புனர்பூசம் 1,2,3* | மடப்புரம் | திருவாரூர் | **94434 36393** |
| *10. புனர்பூசம் 4* | திருப்பாதிரிப்புலியூர் | கடலூர் | **04142–236728** |
| *11. பூசம்* | மலைக்கோட்டை | திருச்சி | **04312–704621** |
| *12. ஆயில்யம்* | புன்னைநல்லூர் மாரியம்மன் | தஞ்சாவூர் | **04362–267740** |
| *13. மகம்* | திருச்செங்கோடு | நாமக்கல் | **04288–255925** |
| *14. பூரம்* | ஞானஸ்கந்த மூர்த்தி கோவில் | ஈரோடு அந்தியூர் | **98658 48488** |
| *15. உத்திரம் 1* | மூகாம்பிகை | கொல்லூர், கர்நாடகா | **08254–258488** |
| *16. உத்திரம் 2,3,4* | இளையனார் வேலூர் | காஞ்சிபுரம் | **97896 35869** |
| *17. அஸ்தம்* | திருவானைக்காவல் | திருச்சி | **0431–2230257** |
| *18. சித்திரை 1,2* | உத்தமர் கோவில் | திருச்சி டோல்கேட் | **0431–2591466** |
| *19. சித்திரை 3,4* | சூரசம்ஹார மூர்த்தி | திருச்செந்தூர் | **04639–242221** |
| *20. சுவாதி* | சுகவனேஸ்வரர் கோவில் | சேலம் | **0427–2450954** |
| *21. விசாகம் 1,2,3* | சிவன்மலை | திருப்பூர், காங்கேயம் | **04257–220680** |
| *22. விசாகம் 4* | வாராஹி | தஞ்சை பெரியகோவில் | **04362–274476** |
| *23. அனுசம்* | தென்குடித்திட்டை | தஞ்சாவூர் | **04362–252858** |
| *24. கேட்டை* | திருவெண்காடு | நாகப்பட்டிணம் | **04364–256424** |
| *25. மூலம்* | எட்டுக்குடி | நாகப்பட்டிணம் | **04366–245426** |
| *26. பூராடம்* | மருதமலை | கோயம்புத்தூர் | **0422–2422490** |
| *27. உத்திராடம்* | மஞ்சுநாத் கோவில்,கத்ரி | கர்நாடகா, மங்களூர் | **0824–2214176** |
| *28. உத்திராடம் 2,3,4* | கமலசிலை | கொல்லூர் அருகில் கர்நாடகா | **08259–277221** |
| *29. திருவோணம்* | ஸ்ரீரங்கபட்டினம் | கர்நாடகா | **(0)98445 76853** |
| *30. அவிட்டம் 1,2* | சிவசைலம் | திருநெல்வேலி குற்றாலம் | **04633–237131** |
| *31. அவிட்டம் 3,4* | தயவு ஆஸ்ரமம் | திருவண்ணாமலை | **99448 00220** |
| *32. சதயம்* | திருமலை முருகன் | பண்பொழில், திருநெல்வேலி | **04633–237131** |
| *33. பூரட்டாதி 1,2,3* | திருப்புனவாசல் | புதுக்கோட்டை | **04371–239212** |
| *34. பூரட்டாதி 4* | ஸ்ரீஞானஸ்கந்த மூர்த்தி | ஈரோடு, அந்தியூர் | **98658 48488** |
| *35. உத்திரட்டாதி* | ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் | ஆஸ்ரமம், திருவண்ணாமலை | **04175–236999** |
| *36. ரேவதி* | பேரையூர் நாகநாதர் | புதுக்கோட்டை | **04322–221084** |

உ
மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வு )

மகிழ்வித்து மகிழ்

No. 7, லைட் ஹவுஸ் காம்பளக்ஸ்,
4 ரோடு, சேலம் - 636 009.

No. 3-A, சன்னிதானம்,
P. 54 விஷாகா, 6th- அவன்யூ,
அண்ணாநகர், சென்னை-40.



**Cell : 98427-10545, 93677-10545** Web : mahaguru.co.in

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

**இதுவரை எங்கு பார்திருப்பினும், எவ்வளவு பரிகாரம் செய்தும் பலன் இல்லையா?**
**குருஜி ஐயாவிடம் வாருங்கள் உங்கள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க...**
**உங்கள் வாழ்வில் வசந்தம் மலர்ந்திட...**

## உங்கள் பிரச்சனைக்கு சித்தரின் ஆலோசனை

- கணவன் மனைவி பிரச்சனை
- வட்டிகட்டட கடன் வாங்கும் நிலையில் பணக்கஷ்டம்
- வேலை செய்யும் இடத்தில் அதிகாரிகல் தொல்லை
- செய்வினை, ஏவல், பில்லி, சூன்யம் போன்ற உங்கள் கண்களுக்கு தெரியாத துர்சக்திகளால் உங்கள் வாழ்வில் பிரச்சனை
- விரும்பியவரை திருமணம் செய்ய இயலாத நிலை
- கலைதுறையில் பிரகாசிக்க
- கல்லியில் மேம்பட்டு அதிக ஞாபக சக்தி பெற / நல்லமதிப்பெண்பெற
- மாமியார் / மருமகள் இராசி ஆகிட
- செய்வினையால் வீட்டில் தரித்திரம், சண்டை, நிம்மதியின்மை
- தொழில் சரியில்லாமை / கடன் தொல்லை நீங்க
- எவ்வளவு பரிகாரம் செய்தும் திருமணம் நடைபெறாமல் இருந்தல்
- உங்கள் மணத்திற்கு பிடித்தவர் உங்களை விரும்பிட
- அரசியலில் பிரகாசிக்க / ரியல் எஸ்டேட் துறையில் வெற்றி பெற
- இடு மருந்து எடுக்க

**இப்படி எந்த கஷ்டங்கள் இருந்தாலும் சித்தர்களின் அருளினால் முழுமையான தீர்வுபெற சித்தரை சந்தியுங்கள்.**

## சித்தரின் மகா யந்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஐஸ்வர்ய யந்திரம் | - 2,700/- | இராஜ குபேரயந்திரம் | - 47,700/- |
| செய்வினை பில்லி சூன்ய நீக்கிடயந்திரம் | -3,700/- | செல்வ கஜயோகயந்திரம் | - 37,700/- |
| கணவன் மனைவி வஸ்ய யந்திரம் | - 3,700/- | பில்லி சூன்ய செய்வினை கட்டும் யந்திரம் | - 27,700/- |
| காதலர் திருணம் ஆக வஸ்ய யந்திரம் | - 7,700/- | இராஜவஸ்ய யந்திரம் | - 17,700/- |
| காரிய சித்தி யந்திரம் | - 2,700/- | சத்ருநாசி யந்திரம் | - 3,700/- |

## சித்தரின் தாந்ரீக அஞ்ஞணம்

| | | | |
|---|---|---|---|
| மகாலட்சுமி அஞ்ஞணம் | - 1,700/- | நீண்டபோக ஆலிங்க அஞ்ஞணம் | - 1,700/- |
| சத்ரு நாசி அஞ்ஞணம் | - 1,700/- | வீர்யவிருத்தி சம்போக அஞ்ஞணம் | - 1,700/- |
| கணவன் மனைவி சேர அஞ்ஞணம் | - 2,700/- | மாமியார் மருமகள் வஸ்ய அஞ்ஞணம் | - 2,700/- |
| சரஸ்வதி அஞ்ஞணம் | - 1,700/- | வியாபார விருத்தி அஞ்ஞணம் | - 1,700/- |
| இராஜவஸ்ய அஞ்ஞணம் | - 5,700/- | வழக்கு வெற்றி பெற அஞ்ஞணம் | - 5,700/- |
| நவ கிரஹ தோஷ நிவர்த் அஞ்ஞணம் | - 2,700/- | ஜன வஸ்ய அஞ்ஞணம் | - 2,700/- |

**ரூபாய். 1000/- அனுப்பி 5 கேள்விகளுக்கு தபால் / Online மூலம் பதில் பெறலாம்.**

## சித்தரின் ஒழுக்கம் கலந்த கண்டிப்பான பயிற்சிகள் (ஆண்/பெண்) நேரிடைபயிற்சி (அ) தபால் மூலம் பயிற்சி

- கர்ணா யட்சிணி வாக்கு வஸ்யம்
- லித்திகா யட்சிணி வாக்கு வஸ்யம்
- நருத்ரா யட்சிணி வாக்கு வஸ்யம்
- மஹா காளி அன்னை வாக்கு வஸ்யம்
- மோஹினி வஸ்யம்
- ஜின் வஸ்யம்
- எகிப்து கடவுள் வஸ்யம்
- எகிப்து தேவதை வஸ்யம்
- மலையாள மாந்ரீகம்
- ருத்ரா மாந்ரீகம்
- பகவதி மாந்ரீகம்
- முஸ்லீம் மாந்ரீகம்
- அரபிக் மாந்ரீகம்
- ஆஞ்நேயர் வாக்கு வஸ்யம்
- முனீஸ்வரர் வாக்கு வஸ்யம்
- யந்திர விபூதி வஸ்யம்
- ரைடர் ட்ராட் பயிற்சி
- காஸ்மிக் ரெய்கி (up to master level)
- வஸ்ய வாஸ்து
- வளமான எண் கணிதம்
- நெற்றிகண் திறந்திட - ஆஸ்ட்ரோ ட்ராவல்
- சித்தர்கள் தரிசனம் - ஜோதி தீட்சை

கடன் தொல்லை தீர
செல்வம் நிலையாக
இருக்க வீட்டில்,
தொழில் ஸ்தாபணத்தில்,
அலுவலகத்தில்
வைக்க ஸ்ரீஸ்வர்ணஆகர்ஷன
மூலிகை வேர்
ரூ 1700/- மட்டும் அனுப்பி
ஐஸ்வர்யத்தை பெற்றிடுங்கள்

**இங்கு தேவையற்ற ஆசைவார்த்தகைள் / இலவச பொருட்கள் கிடையாது.**
**ஒழுக்கத்திற்கும், கண்டிப்புக்கும் உட்பட்டவர்களுக்கு மட்டும் பயிற்சி. பலர் வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றியவர்.**

வெளிநாட்டினர் தபால் மூலம் கலைகள் கற்கலாம் / ஆலோசனை பெறலாம். செல் : 0091-93677-10545
**கலைகள், யந்திரம், அஞ்ஞனம் விபரங்கள் பெற ரூ. 320/- M.O** செய்யவும்.

**ஒவ்வொரு வாரமும் சென்னை, பெங்களூர், சேலம், மலேசியா, சிங்கப்பூரில் சந்திக்கலாம்.**

**சித்தரை தரிசிக்க முன்பதிவு மிகவும் அவசியம்**

**E Mail : gurusaranam5@gmail.com**



ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. ஜெகதீஸ்வரன்
செல்: 96596 90395

சனி சூரியகுடும்பத்தில் சூரியனிலிருந்து ஆறாவதாக அமைந்துள்ள ஒரு கோள். சூரியக்குடும்பத்தில் இது இரண்டாவது பெரிய கோளாகும். வளி அரக்கக் கோள்கள் நான்கில் சனியும் ஒன்றாகும். சனிக்கோள் ஐதரசன் வளிமத்தால் முதன்மையாகவும் ஈலியம் மற்றும் ஒருசில தனிமங்களால் சிறிய அளவிலும் நிரப்பப்பட்டுள்ளது. இது பாறை மற்றும் பனிக்கட்டியாலான சிறிய உள்ளகமும் அதைச் சுற்றி தடிமனான உலோக ஐதரசன் அடுக்கும் அதன் மேலாக வளிம அடுக்கும் கொண்டது. சனியில் காற்றின் வேகம் வியாழனை விடவும் அதிகம், அதாவது 1800 கிமீ/மணி வரையிலும் இருக்கக்கூடும். சனிக்கோளின் சிறப்பான வளையங்கள், பெரும்பான்மையாக பனித்துகள்களாலும் பாறைக்துகள்கள் மற்றும் தூசிகளாலும் ஆனவை. சனியின் நன்கறிந்த நிலவுகள் மொத்தம் 61. இதைத் தவிர, சுமார் 200 நிலவுக்குட்டிகள் சனிக்கு உள்ளன. சனிக்கோளின் மிகப்பெரிய நிலவான டைட்டன் புதன் கோளை விடவும் பெரியது. சூரிய மண்டலத்திலேயே மிகப்பெரிய நிலவான வியாழனின் நிலவான கானிமீடுக்கு அடுத்தது இந்த டைட்டன். சனி சூரியனில் இருந்து 1.400.000.000 கிமீ (869,000,000 மைல்) தூரத்தில் உள்ளது. இது சூரியனின் சுற்றுப்பாதையில் ஒருமுறை சுற்றி முடிக்க அல்லது ஒரு சனி ஆண்டு என்பது பூமியின் 29.6 ஆண்டுகள் ஆகும். சனி ரோமன் கடவுளான சாட்டர்னஸ் நினைவாக பெயரிடப்பட்டது. எனவே சனி கோளின் சின்னம் அரிவாள் சின்னம் ஆகும். சனி கிரகத்தில் தண்ணீர் உள்ளதா என விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இந்த ஆய்வு கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில்

# சனிபகவான்

## சஞ்சார நிலை விளக்கங்கள்

ஜெர்மனியைச் சேர்ந்த வானியல் விஞ்ஞானிகள் பால் ஹார்டாக் தலைமையில் ஆய்வு மேற் கொண்டனர். அப்போது சனி கிரகத்தில் தண்ணீர் இருப்பதைக் கண்டறிந்தனர். சனி கிரகத்தை சுற்றி பல சந்திரன்கள் உள்ளன. அது முழுவதும் ஐஸ் கட்டியினால் மூடப்பட்டுள்ளது. இதனால் சனி கிரகத்தில் மழை பெய்து அதன் மூலம் தண்ணீர் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது. மேலும் அங்கு ஆவி நிலையில் தண்ணீர் இருப்பதும் தெரியவந்துள்ளது. இவை சனி கிரகத்தை சுற்றி வட்டவடிவில் உள்ளது. இது அந்த கிரகத்தின் சுற்றளவை விட 10 மடங்கு பெரியதாக உள்ளது. இதனால் இங்கு தண்ணீர் இருப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஜோதிட விதிப்படி ஒருவர் பிறக்கும் நேரத்தில் சந்திரன் எங்கு சஞ்சரிக்கின்றாரோ அதையே அவரின் ஜென்ம இராசியாகக் கணக்கில் கொள்கிறோம். ஜென்ம இராசியை வைத்து பலன் கூறுவதே கோட்சாரப் பலன் ஆகும். பொதுவாக நாம் அன்றாடம் வானொலியிலும் தொலைக்காட்சிகளிலும், செய்திதாள்களிலும் பார்க்கும் பலன்கள் அனைத்தும் கோட்சார ரீதியாக கூறப்படும் பொதுப் பலன்களே ஆகும்.

கோட்சார ரீதியாக ஒவ்வொரு கிரகங்களின் நிலையையும் ஆராயும்போது ஓர் இராசியில் அதிக காலம் தங்கக் கூடிய கிரகமாக சனி பகவானே இருக்கிறார். சனி என்ற பெயரைக் கேட்டாலே எல்லோர் மனதிலும் ஒருவித பய உணர்வு இருக்கத்தான் செய்கிறது." சனியைப் போல கொடுப்பாரும் இல்லை. சனியைப் போல கெடுப்பாரும் இல்லை" என்றே கூறலாம்.

சனி பகவான் 12 இராசியை சுற்றிவர 30 வருடங்கள் எடுத்துக் கொள்கிறார். அதனால் தான் 30 வருடம் வாழ்ந்தவரும் இல்லை, 30 வருடங்கள் தாழந்தவரும் இல்லை என்ற பழமொழி உள்ளது. பொதுவாக ஒருவருக்கு சனியின் முதல் சுற்று மங்குச் சனி என்றும் இரண்டாவது சுற்று பொங்குச் சனி என்றும் கூறுவர். குறிப்பாக சனி பகவான் 3,6,11இல் சஞ்சரிக்கும் காலங்களில் எல்லா வகையிலும் முன்னேற்றமான பலன்களை ஏற்படுத்துவார். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி, பொருளாதார மேன்மை, குடும்பத்தில் சுபிட்சம் தொழில் வியாபார உத்தியோக ரீதியாக உயர்வுகள் உண்டாகும். எந்த எதிர்ப்புகளையும் சமாளிக்கக் கூடிய வலிமை வல்லமை, உடல் நிலையில் ஆரோக்கியம் போன்ற அனுகூலமான நற்பலன்கள் உண்டாகும்.

ஆனால், சனி பகவான் 1,2,4,7,8,12 ஆகிய ஸ்தானங்களில் சஞ்சரிக்கும்போது அதிகப்படியான சோதனைகளை உண்டாக்குவார். குறிப்பாக 12,1,2இல் சஞ்சரிக்கும் காலங்களை ஏழரைச் சனி என்று கூறுவார்கள். ஜென்ம இராசிக்கு 12இல் சஞ்சரிக்கும் காலத்தை விரையச் சனி என்றும் 1இல் சஞ்சரிக்கும் காலத்தை ஜென்ம சனி என்றும் 2இல் சஞ்சரிக்கும் காலத்தை குடும்பச் சனி, பாதச் சனி என்றும் கூறுவார்கள்.

இக்காலங்களில் உடல் நிலையில் பாதிப்புகள் குடும்பத்தில் பிரச்சனைகள் நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடுகள், தொழில் வியாபாரத்தில் நெருக்கடிகள், உத்தியோகத்தில் தேவையற்ற அவப்பெயர் உண்டாகும். பொருளாதார நெருக்கடிகளைக் கொடுக்கும். தேவையற்ற விரயங்கள் உண்டாகும்.

**சனி 4இல்** சஞ்சரிக்கும் காலங்களை அர்த்தாஷ்டம சனி என்கிறோம். இக்காலங்களில் தேவையற்ற அலைச்சல் டென்ஷன் சுக வாழ்வு சொகுசு வாழ்வில் பாதிப்பு உண்டாகும்.

**சனி 7இல்** சஞ்சரிப்பதை கண்டச் சனி என்கிறோம். இக்காலங்களில் உடல் நிலையில் பாதிப்பு, கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு, நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடு, கூட்டுத் தொழிலில் வீண் பிரச்சனைகள், விரயங்கள் உண்டாகும்.

**சனி 8இல்** சஞ்சரிக்கும் போது, அஷ்டமச் சனி உண்டாகிறது. இக்காலங்களில் அதிகப்படியான சோதனைகளையும் எதிர்கொள்ள நேரிடும். உடல் நிலையில் பாதிப்பு, நெருங்கியவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

குறிப்பாக சனி பகவான் சாதகமற்று சஞ்சரிக்கும்போது சிலருக்கு அதிகப்படியான பாதிப்புகளை ஏற்படுத்தும். சனி ஜெனன காலத்தில் நீசம் பெற்றிருந்தாலும் அஷ்டமச் சனி, ஏழரைச் சனி காலங்களில் பிறந்திருந்தாலும் பாதிப்புகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானமான 10இல் சனி சஞ்சரிப்பதும் நல்லதல்ல.

பொதுவாக மேற்கூறிய ஸ்தானங்களில் சனி சாதகமற்ற பலன்களை ஏற்படுத்தும் என்றாலும் ஜெனன காலத்தில் ஆட்சி உச்ச வீடுகளாகிய மகரம், கும்பம், துலாத்தில் அமைந்திருந்தாலும் சனியின் நட்சத்திரங்களாகிய பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் சனியால் அதிகப்படியான பாதிப்புகள் ஏற்படாது.

**5இல் சனி:** சனிபகவான் 5ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் போது ஓரளவுக்கே நற்பலன்களை வழங்குவார். பூர்வீக சொத்துக்களாலும் புத்திர வழியிலும் சிறு சிறு பிரச்சினைகள் தோன்றி மறையும் என்றாலும் பெரிய கெடுதல்கள் ஏற்படாது.

**கண்டச் சனி:** சனிபகவான் ஜென்ம இராசிக்கு சமசப்த ஸ்தானமான 7ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் காலங்களை கண்டச்சனி என்பார்கள். கண்டச் சனி காலங்களில் உடல் ஆரோக்கிய ரீதியாக பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகளை

ஏற்படுத்தும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை குறையும். உற்றார், உறவினர்களிடையே தேவையற்ற பகைமையும் உண்டாகும். நண்பர்களே எதிரிகளாக மாறுவார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்களும் கூட்டணிகளால் வீண் பிரச்சினைகளைச் சந்திப்பார்கள்.

**அஷ்டமச் சனி:** சனிபகவான் ஜென்ம இராசிக்கு அஷ்டம ஸ்தானமான 8ஆம் வீட்டில் சஞ் சரிக்கும் காலங்கள் அஷ்டமச்சனி காலங்களாகும். இக்காலங்களிலும் எதிலும் கவனமாக செயல்படுவதே நல்லது. அஷ்டமச்சனி காலங்களில் உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்படும். குடும்பத்திலுள்ளவர்களாலும் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடைகள் நெருங்கியவர்களிடையே பகையுணர்வு போன்ற யாவும் உண்டாகும்.

**9இல் சனி:** சனிபகவான் பாக்கிய ஸ்தானமான 9ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் போது ஓரளவுக்கு மேன்மை, பூர்வீக சொத்துக்களால் அனுகூலம் போன்றவை உண்டாகும். தொழில் வியாபாரம் போன்றவற்றில் அனுகூலம் வெளியூர் வெளிநாடுகள் மூலம் சாதகப் பலன்கள் ஏற்படும்.

**ஜீவனச் சனி:** சனிபகவான் 10ஆம் வீட்டில் சஞ்சரிப்பது ஜீவனச் சனியாகும். தொழில் ஸ்தாபனம் 10ஆம் வீடு என்பதால் தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு நிறைய நெருக்கடிகள் போட்டி பொறாமைகள் உண்டாகும். உத்தியோகஸ்தரர்களுக்கும் வீண் பழிச்சொற்கள் உயர்வுகளுக்கு தடைகள் ஏற்படும். தொழில் உத்தியோகம் செய்பவர்கள் ஜீவனச்சனி நடைபெறும் காலங்களில் மிகவும் கவனமுடன் செயல்படுவது நல்லது.

**ஏழரைச் சனி:** ஏழரைச் சனி 3 பிரிவுகளாக அமைந்துள்ளது. அதாவது, விரயச்சனி, ஜென்மச்சனி, பாதச்சனி.

**விரயச் சனி:** விரயசனி என்பது சனி பகவான் ஜென்ம இராசிக்கு 12இல் சஞ்சரிக்கும் காலங்களாகும். இக்காலங்களில் உடல் நிலையில் சோர்வு மந்த நிலை எதிலும் சுறுசுறுப்பாக ஈடுபட முடியாத சூழ்நிலை உண்டாகும். உற்றார் உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உறக்கமின்மை, குடும்பத்தில் எதிர்பாராத வீண் விரயங்கள் உண்டாகும். வரவுக்கு மீறிய செலவுகளும் ஏற்படும்.

**ஜென்மச் சனி:** சனிபகவான் ஜென்ம இராசியிலேயே சஞ்சாரம் செய்வது ஜென்மச் சனியாகும். இக்காலங்களிலும் உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு வயிறு சம்பந்தப்பட்ட கோளாறு. ஜீரணமின்மை உறவினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். பண வரவுகளிலும் இடையூறுகள் உண்டாகும்.

**பாதச்சனி:** சனிபகவான் குடும்பஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வது பாதச்சனியாகும். இக்காலங்களில் கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் நெருங்கியவர்களை இழக்கக்கூடிய நிலை. பண வரவில் இடையூறுகள் போன்றவை ஏற்பட்டு குடும்பத்தில் நிம்மதி குறையும்.

கோட்சார ரீதியாக சனியின் தாக்கத்தை அனுபவிக்காதவர்கள் இருக்கவே முடியாது என்றே கூறலாம். "சந்தைக் கூட்டத்தில் செருப்பை வீசினாலும் சனியன் பிடித்தவன் தலையில் சரியாக விழும்" என்பது பழமொழி. மாளிகையில் வசிக்கும் மன்னரைக் கூட மண் குடிசைக்கு தள்ள வைக்கக் கூடிய வலிமை சனிக்கு உண்டு. சனி இறைவனையே விட்டு வைப்பதில்லை என புராணங்கள் புலப்படுத்தி கூறுகின்றன.

சிறு வயதில் உண்டாகக் கூடிய ஏழரைச் சனியை மங்குச்சனி என்று மத்திய வயதில் வரக் கூடிய ஏழரை சனியை பொங்குச்சனி என்றும் கூறுவர். ஏழரைச் சனி ஒருவரது வாழ்வில் 3ஆவது சுற்றாக வருவது மரணச் சனியாகும். கோட்சார ரீதியாக சனி 1,2,4,7,8,10,12இல் சஞ்சரிக்கும் காலங்களில் சாதகமற்ற பலன்களை வழங்குவார் என்றாலும் சனி ஜென்ம ஜாதகத்தில் ஆட்சி உச்சம் பெற்றிருந்தாலும் சனியின் இராசியான மகரம் கும்பத்தில் பிறந்தவர்களுக்கும் சனி யோகாதிபதியாக விளங்கக் கூடிய ரிஷபம் துலாத்தில் பிறந்தவர்களுக்கும், சனியின் நட்சத்திரங்களான பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் கோட்சார ரீதியாக வரக் கூடிய அர்த்தாஷ்டமச் சனி, கண்டச்சனி, அஷ்டம்ச்சனி மற்றும் ஏழரைச் சனி காலங்களில் அவ்வளவாக பாதிப்புகள் ஏற்படுவதில்லை.

சனி பகவான் ஜென்ம ஜாதகத்தில் நீசம் பெற்றோ, பலவீனமாக அமையப் பெற்றோ, பிறக்கும் போதே ஏழரைச் சனி, அஷ்டமசனி போன்றவற்றில் பிறந்தவர்களுக்கு கோட்சார ரீதியாக சனி சாதக மற்றும் சஞ்சரிக்கும் காலங்களில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது.

சனிபகவான் தரும் பாதிப்புகளில் இருந்து விடுபட ஸ்ரீ ஞான ஸ்கந்தர் ஜீவ நாடியில் சொல்லப்பட்டுள்ள பரிகாரங்களைக் கடைபிடித்து அதன்படி நடைமுறையில் நடந்துக் கொண்டால் கெடுபலன்கள் குறைந்து நற்பலன்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புண்டு. நலமே விளைக, வளமே கூடுக

ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் - ஜீவநாடி கலையரசு

**P.D.ஜெகதீஸ்வரன்**

ஸ்ரீ ஞானஸ்கந்தாஸ்ரமம், மலைக்காரன் தோட்டம், புதுக்காடு, G.S காலனி அஞ்சல், அந்தியூர் வழி, ஈரோடு மாவட்டம், Pin: 638 501

**Cell: 98658 48488**



# பதிப்பாசிரியரின் பரிந்துரை

அன்பான வாசக பெருமக்களுக்கு வணக்கம் - வாழ்த்துக்கள்

''திருவருள் சக்தி'' ஆன்மிகப் பணியில் கடந்த 9 ஆண்டுகளாகவும் ''குருவருள் ஜோதிடம்'' கடந்த 6 ஆண்டுகளாக ஜோதிடச் சேவையிலும் அருந்தொண்டாற்றி அனைவரிடமும் பாராட்டுகளும், சீராட்டுகளும் ஒருங்கேப் பெற்று இன்று முன்னிலை வகித்து தன்னிலைப் பெற்று உலா வருகின்றன. அப்ஸரா நாவல் அண்மையில் வெளியிடப்பட்டு அனைவரிடமும் தனிப்பெருமை பெற்று தரணியில் தலைநிமிர்ந்து பீடு நடையுடன் பவனி வந்துக் கொண்டிருக்கிறது.

அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் சார்பில் சமீபத்தில் வெளியிடப்பட்ட குருப்பெயர்ச்சி, சனி வக்ர நிவர்த்தி, இராகு - கேது பெயர்ச்சி பலன்கள் - பரிகாரங்கள் ஜீவநாடி மூலம் உதித்த பரிகாரங்கள் 100 சதவீத உத்திரவாதத்துடன் வெளியிடப்பட்டு, வாசகர்களின் அமோக ஆதரவுடன் சிறந்த விற்பனைக்கு வித்திட்டு சீர்தூக்கி நிலை நிறுத்தப்பட்டதால்தான் இப்போது ''சனிப்பெயர்ச்சி பலன்கள் பரிகாரங்கள்'' சிறப்பு இதழ் உங்கள் கரங்களில் தவழ்ந்துக் கொண்டு இருக்கிறது.

சனிப் பெயர்ச்சி பலன்கள் பரிகாரங்கள் கணித்து வழங்கியவர் ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் - ஜீவநாடி கலையரசு P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள். ஏற்கெனவே உங்களுக்கு அறிமுகமானவர். மிகத் துல்லியமான கணிப்பில் தெள்ளத் தெளிந்த நீரோடை போல் தொகுத்து வழங்கியுள்ளார். ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவநாடி மூலம் ஒவ்வொரு இராசியினருக்கும், நட்சத்திர வாரியாக முறையான பூஜைகளை ஆகம விதிப்படி கடைப்பிடித்து ஸ்ரீ ஸ்கந்தனை உபாசித்து அதன் மூலம் கிடைக்கப் பெற்ற பரிகாரங்கள் இதில் சொல்லப்பட்டுள்ளன. அதை ஒழுக்கத்துடன் ஆச்சார அனுஷ்டானங்களை உள்ளன்புடன் கடைப்பிடித்து வந்தால் 100% பலன்கள் கிடைக்கும் என உத்திரவாதம் கொடுக்கப்படுகிறது. முறையான பரிகாரங்களே தரமான வாழ்வுக்கு நிரந்தரமாகும். பரிகாரங்களுக்கு உரிய கோயில்களுக்குச் செல்வதற்கு ஏற்ப தொடர்பு' கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் தொகுத்து நட்சத்திர வாரியாக இதில் கொடுக்கப்பட்டு உள்ளன. சனி பகவானின் தாக்கத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள பல வழிமுறைகள் வகைப்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளன. அவைகளைச் சீராகப் பயன்படுத்தித் துன்பங்கள் நீங்கி வளமான வாழ்க்கைக்கு வழி வகுத்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். உங்கள் நிம்மதியின் பெருமுச்சு, எங்கள் உழைப்பின் உயிர் மூச்சு.

திரு P.D. ஜெகதீஸ்வரன் அவர்களைத் தொடர்புக் கொள்ள முடியவில்லை என்ற பெரும்பாலான வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப, அவர்களை தொடர்புக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளது. இதனைப் பயன்படுத்தி வாசகர்கள் பலனடைந்தால் எங்களுக்கு கிடைத்த பெருமையாகக் கருதுகிறோம். அவரை புதன், வியாழன் மட்டும் இரவு 8 மணி முதல் 10 மணி வரை அமாவாசையைத் தவிர்த்து தொடர்புக் கொண்டு பயனடைய வேண்டுகிறோம். செல்: 96596 90395 அமாவாசையன்று பூஜையில் கலந்துக் கொண்டு கீழ்க்காணும் முகவரியில் நேரில் சந்திக்கும் வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டு பலன் பெறலாம்.

**ஸ்ரீ ஞானஸ்கந்தாஸ்ரமம்,** மலைக்காரன் தோட்டம், புதுக்காடு, G.S.காலனி அஞ்சல், அந்தியூர் வழி, ஈரோடு மாவட்டம் PIN: 638 501. செல்: **98658 48488.**

ஜோதிட உலக வரலாற்றிலேயே முதன்முதலாக ஜீவநாடி மூலம் நட்சத்திற்கு ஏற்ப பரிகாரங்கள் எடுக்கப்பட்டு உங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன என்பதை பெருமையுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பலன் பெறுவது உங்கள் பாக்கியம். துன்பத்தில் துவண்டு விடும் ஆத்மாக்கள் இன்பத்தை எய்தினால் எங்களுக்கு கிடைத்திடும் புண்ணியம். துன்பப்படும் ஜீவன்கள் இன்பத்தை அடையச் செய்வதே இறைவனுக்கு செய்திடும் சேவை. அனைத்திற்கும் மேலாக ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைபிடித்தால் வாழ்வில் உயர்ந்த நிலையை எட்டிப் பிடித்து விடலாம்.










நலமே விளைக! என்றும் வளமே பெருகுக!

என்றும் இறைபணியில்

**சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜ்**

ஆசிரியர்: திருவருள் சக்தி, குருவருள் ஜோதிடம்...



# மேஷம்




அன்பான மேஷ இராசி நண்பர்களே கவர்ச்சியான தோற்றமும், வாக்கினிலே வசீகரித்து இழுக்கும் திறமை தங்களுக்கே உரியது என்று சொன்னால் அது மிகையாகாது. நல்ல வாக்கு சாதுர்யம் கொண்டவர்கள். தங்களுடைய வாக்கு வளத்தினை பயன்படுத்தி தமது கருத்துகளுக்கே முதல் அங்கீகாரம் கிடைக்கப் பாடுபடுவீர்கள். பொதுவாகவே அதிக இரக்க குணம் கொண்டவர்களாக திகழ்வீர்கள். உங்களின் இராசியின் அதிபதி செவ்வாய் என்பதால் கௌரவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். எந்தவித இடையூறுகளையும் பொறுமையாகத் தாங்கி அதனை முடித்து விடுவீர்கள். அகங்கார குணமும், சுயேச்சையான சுபாவமும் தான் உங்களுடைய மைனஸ். இதனால் நேசிப்பவர்களைக் கூட அடிக்கடி வெறுப்புகளுக்கு உள்ளாக்க நேரிடும். இதனால் மனதில் அடிக்கடி கவலைகள் தோன்றி மன அமைதியை இழக்க நேரிடலாம். இருப்பினும் தைரியமும், அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்கள் திகழ்வதால் அனைத்து பிரச்சனைகளையும் எளிதில் சமாளித்து விடுவீர்கள்.

| மதிப்பெண்கள் |
|---|
| 40 / 100 |

இதுவரை உங்கள் இராசிக்கு 7ஆம் இடமான திருமணம், கூட்டுத்தொழில், நண்பர்களைக் குறிக்கின்ற ஸ்தானத்திலிருந்து சனிபகவான் திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.54(pm) மணிக்கு உங்கள் இராசிக்கு 8ஆம் இடமான ஆயுள், விபத்து, கண்டம் ஆகியவற்றைப் பற்றிக் குறிக்கின்ற விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16.12.2014 அன்று பெயர்ச்சி ஆகி 8ஆம் இடத்திற்கு அஷ்டமச் சனியாக அமரப் போகிறார்.

7ஆம் இடத்தில் இருந்து கண்டங்களைக் கொடுத்த சனி பகவான் மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து அஷ்டமசனியாக இடம் பெயருகிறார். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு, கூட்டுத் தொழிலில் சங்கடங்கள், உத்யோகம் பார்ப்பவர்களுக்கு உடன் பணிபுரிபவர்களால் தொல்லைகள், உடலிலே ஆரோக்கிய குறைவு போன்ற எண்ணற்ற சங்கடங்களை கண்டகச் சனி 7ஆம் வீட்டிலிருந்து ஏற்படுத்தினார். இப்போது 8ஆம் வீட்டிற்கு இடம் பெயர்ந்து அஷ்டமச் சனியாக மாறப் போகிறார். இதன் மூலம் வரும் ஏற்றங்கள் எண்ண இறக்கங்கள் என்ன என்பதனைப் பற்றி இனிக் காண்போம்.

இயற்கையிலேயே உங்கள் இராசிக்கு சனி பகவான் அசுபர். அப்படிப்பட்ட சனி பகவான் உங்கள் இராசிக்கு மேற்படி தேதியில் அஷ்டமச்சனியாக மாறப் போகின்றார். இனி உங்களுக்கு விபரீத இராஜயோகம் என்றே கூறலாம். இதுவரை ஆயுளைக் கெடுக்க முற்பட்ட சனிபகவான் இனி ஆயுளைக் கூட்டுவார் கெட்டவர் கெட்டில் கிட்டிடும் இராஜயோகம் என்று கூற்றுக்கு இணங்க 7ஆம் இடத்தில் சஞ் சரித்த சனிபகவான் இனி 8ஆம் இடத்தில் ஏறக்குறைய இரண்டரையாண்டு காலம் சஞ் சரிக்க உள்ளார். கண்டகச் சனி அஷ்டமச் சனியாக மாறினாலும், சோதனைகளும், வேதனைகளும் குறையுமா என்பது ஐயமே.வம்பு. வழக்குகளைக் குறிக்கின்ற 8ஆம் இடத்திற்கு சனி இடம் பெயருவது நலமில்லாத சூழ்நிலையே உருவாக்கும். அதிலும் கவனம் தேவை. சொந்த தொழில் செய்பவர்கள் அதிக இலாபத்தினை எதிர்பார்க்க முடியாது. எதிலும் மந்த நிலையே ஏற்படும். உத்யோகம் பார்க்கின்றவர்களுக்கு தனது மேலதிகாரிகளால் சில பிரச்சனைகள் ஏற்படலாம். பெண்களால் பிரச்சனைகள் ஏற்படும். தாயின் உடல் நிலை பாதிக்கும். மனைவியுடன் வாக்கு வாதம் செய்வதை தவிர்க்கவும். மற்றவர்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு முன்பு யோசித்து செயலபடவும். தேவையில்லாத வம்பு வழக்குகளில் மாட்டிக் கொள்ள நேரிடலாம். சனிபகவான் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் காலம் நலமில்லாத நிலையே ஏற்படுத்தும் எனக் கூறலாம். படித்து முடித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்காமல் தடுமாறலாம். தற்காலிகமாக வேலை கிடைத்தாலும் அதனை நிலைத்து வைக்க முடியாமல் தடுமாறுவார்கள். புதிதாக வேலை தொடங்க நினைத்தாலும் தேவையில்லாத தடைகள் தான் சந்திக்க நேரிடும். எதிலும் அதிக கவனம் தேவை. இல்லையெனில் நஞ் சிடமே அதிகமாக மிஞ்சும் நிலை ஏற்படும். பணத் தட்டுப்பாடுகள் ஏற்படலாம். கொடுக்கல்

வாங்கலில் பிரச்சனைகள் ஏற்படும். கடன் தொல்லை அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பில் அதிக கவனம் கொண்டு படித்ததால் மட்டுமே தான் விரும்பிய மதிப்பெண்கள் கிடைக்கும். உரிய காலத்தில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து முடிக்காமல் தடுமாறும் நிலை ஏற்படும். உடலில் உபாதைகள் உண்டாகும். ஆரோக்கிய குறையாடு ஏற்படும். சிலருக்கு அறுவை சிகிச்சை செய்ய நேரிடலாம். நெருங்கிய உறவினர்களிடையே சுமூக நிலை குறையும். கணவன்—மனைவியிடையே கருத்து வேறுபாடு நிலவும்.

8ஆம் வீடான அஷ்டமத்தில் சனி அமர்வதால் பேச்சில், செயலில் எச்சரிக்கை தேவை. எதிர்மறை எண்ணங்கள் வீண் பேச்சு ஆகியவற்றை தவிர்ப்பது நல்லது. அலைச்சல் அதிகமாகும். சொத்துக்கள், வாங்குவதில் விற்பதில் வில்லங்கள் ஏற்படும். உணவு விஷயத்தில் அதிக கட்டுப்பாடுகள் தேவை.

சொந்தத் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு அஷ்டம சனியாக அமைவதால் புதிய முயற்சியில் வெற்றி கிடைக்க சற்று தாமதம் ஆகும். வேலையின்றி இருப்பவர்கள் தொழில் ஆரம்பிக்கலாம். வீண் விரையம் நீங்கி சேமிக்கவும் வாய்ப்புக்கள் உண்டாகும். திடீர் வருமானம் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. தொழில் விஷயமாக ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம். எல்லா வகையிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது குதுகலத்திற்கு நல்லதே.

பணியில் இருப்பவர்களுக்கு இந்த அஷ்டமச்சனி சக ஊழியர்களிடம் உள்ள நட்பினைக் கெடுக்க வைக்கும். வீண் அலைச்சல் ஏற்படும். வெளியூர் பயணம் எதிர்ப்பார்த்த அளவு உயர்வினை தருவது சிரமம். புதிய பதவிகள் கிடைக்க அதிக முயற்சிகள் தேவைப்படும்.

கலைஞர்கள் அஷ்டமச்சனியில் போராடும் காலம் என்று கூட கூறலாம். தாங்கள் இந்த துறையில் கோலூன்ற அதிக அளவில் முயற்சி செய்தால் மட்டுமே ஓரளவு பலனை பெற முடியும்.


மாணவர்கள் தாங்கள் நினைத்தவாறு அதிக மதிப்பெண்கள் தேர்வில் பெற கடின முயற்சி செய்ய வேண்டும். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் என்ற பழமொழிக்கு இணங்க அதிக கவனமும், கடின உழைப்பும் விடா முயற்சியும் தேவை.

விவசாயிகளுக்கும் 8ஆம் இட அஷ்டமசனியில் அதிக லாபமில்லாத சூழ்நிலையே உருவாக நேரிடலாம். பருவ மழைகள் பொய்த்துப் போனதால் விவசாயத்தில் தடுமாற்ற நிலையே ஏற்படும்.

பெண்களுக்கு சனிபகவான் 8ஆம் இடத்தில் உலவுவதால் வளர்ச்சிப் பாதையில் வெற்றி நடை போடுவார். கணவர் குடும்பத்தாரின் அன்பு முழுமையாக கிடைக்கும். புதுமணத் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

## சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

விருச்சிக இராசியான 8ஆம் வீட்டில் இருந்துக் கொண்டு சனிபகவான் உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான ரிஷப இராசியினையும், 5ஆம் இடமான சிம்ம இராசியினையும், 10ஆம் இடமான மகர இராசியினையும் தனது 3,7,10ஆம் பார்வையாகப் பார்த்து பல மாற்றங்களைத் தரப் போகின்றார். குரு தனது 5ஆம் இடம் பார்வையாக 13.7.15 வரைபார்க்கிறார். குரு பார்க்கும் வரையில் அஷ்டமச் சனியில் கவனம் தேவையில்லை.




**சனிபகவான் குடும்பஸ்தானமான 2ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

குடும்பம், இளமைக் கல்வி, வாக்கு, பேச்சு, பணம் ஆகியவற்றைக் குறிக்கின்ற ஸ்தானம் 2ஆம் வீடு சனிபகவான் தனது அஷ்டமத்தால் உங்கள் கௌரவம், புகழ், செல்வாக்கில் குறைகள் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. பணத்தட்டுப்பாடுகள் அதிகமாகி மனதில் கவலைகள் ஏற்படும். எனவே அதிகக் கவனம் தேவை.

**சனிபகவான் பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

தாய்மாமன், புத்தரபேறு, குலதெய்வம் ஆகியவற்றை குறிக்கும் இடம் 5.ம் இடம். எனவே பூர்வீக சொத்தில் பிரச்சனைகள் ஏற்படும். நெருங்கிய உறவுகளிடம் சச்சரவுகள் ஏற்படும். புத்திரர்கள் வழியில் நெருக்கடிகள் உருவாகும்.

**சனிபகவான் தொழில் ஸ்தானமான 10ஆம் வீட்டை பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

தொழிலில் பிரச்சனைகள் அதிகரிக்கும். வீண் விரையங்கள் ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகமாகும். நண்பர்கள் விரோதம் பாராட்டுவார்கள். இலாபங்கள் குறைந்து காணப்படும்.

**சனிபகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை குருவின் நட்சத்திரத்தில் சஞ்சாரப் பலன்கள்:**

*குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் பெண்களுக்கு தேக . ஆரோக்கியம் குறை ஏற்படும். குடும்ப வாழ்வில் வீண் சச்சரவுகள் ஏற்படும். சுப காரியங்கள் தடைபடும். கணவனால் நிம்மதி இருக்காது. புத்திரர்கள் வழியில் சிறுசிறு தொல்லைகள் உண்டாகும். வீண்பழி சொல்லிற்கு ஆளாகக் கூடும். கவனம் தேவை.*

**சனிபகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

*சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சஞ் சரிக்கும் காலம் வாழ்வினில் ஏற்ற இறக்கங்கள் அதிகம் காணப்படும். இக்காலத்தில் கலைத்துறையில் இருப்பவர்கள் மட்டுமே அதிகம் பலனடைவார்கள்.*

**சனிபகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை புதனின் நட்சத்திரமான கேட்டையில் சஞ்சரிக்கும் காலம்:**


*புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலம் மாணவர்கள் மிக கடினமான முயற்சி செய்தாலும் எதிர்பார்த்த அளவு அதிக முன்னேற்றம் இருக்காது. நல்ல நண்பர்களுடன் நட்பு பாராட்டுவது நல்லது.*

## சனி வக்கிரப்பலன்கள்

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2016 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.**

*உங்கள் இராசிக்கு 10, 11க்கு அதிபதியாக விளங்கி தொழில் மற்றும் இலாப ஸ்தானத்தை ஆதிபத்தியமாகக் கொண்டே சனி வக்ரம் பெறும் பொழுது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாகனத்தை அதிவேகமாக இயக்க வேண்டாம். சட்டம் தொடர்பான வேலைகளை செய்யும் போது அதிகக் கவனம் தேவை. 12ஆம் இட அதிபதி வக்கிரம் அடைவதால் வீண் செலவுகள் குறையும். பணங்கள் பல வழியில் வந்து கை கொடுக்கும்.*

*மேஷ இராசியினருக்கு அஷ்டமச் சனி காலம் என்பதால் சோதனை காலம் என்றே சொல்ல வேண்டியுள்ளது.*



*செவ்வாய்க்கிழமை செவ்வாய் ஹோரையில் சுப்பிரமணிய திரிசதி அர்ச்சனை செய்து வேல் பூஜை செய்து ஸ்ரீஞானஸ்கந்தர் ஜீவநாடியைப் பூஜித்து இந்த அஷ்டமச் சனி மேஷஇராசிக்கு என்ன செய்யும் என வாக்கு கேட்கப்பட்டது. ஜீவநாடியில் முருகப் பெருமான் பின்வருமாறு உரைத்தார்.*

**"ஆனதொரு அஷ்டமம் தன்னிலே**
**ஆகாத வகையாக மந்தன் வரும் நேரம்**
**மனதிலே மகிழ்ச்சி குறையும்**
**மணவாழ்வு சிக்கலாகும்**
**மாசறுமே கடன் வரும்**
**கஷ்டங்கள் உருவாகும்**
**வம்போடு வழக்கு வரும்**
**வியாஜ்ஜியம் வந்து நீங்கும்**
**வகையருளும் முறையாக**
**வியாதி வரும் விபத்து வரும்**
**குடும்பத்தில் குணமில்லா**
**நிலை காட்டும்**
**குல தெய்வ ஆசி குறையும்**
**முறையாக நட்சத்திர**
**பரிகார முறை கேள்"**

**– ஸ்ரீ ஞானஸ்கந்தர் நாடியில் முருகப் பெருமான் வாக்கு**

**பொருள்:** *மேஷ இராசிக்கு அஷ்டமச் சனி விருச்சிக வீட்டில் சஞ்சரிப்பதால் அது ஆகாத காலம் என்றே சொல்ல வேண்டும். மனதில் மகிழ்ச்சி குறையும். குடும்பத்தில் கணவன்—மனைவி உறவு கெடும். புதிய கடன்கள் உருவாகும். கஷ்டங்கள் ஏற்படும். கோர்ட், கேஸ் என அலைய வேண்டிய சூழல் ஏற்படும் நோய்கள் ஏற்பட்டு உடல் ஆரோக்யம் கெடும். வண்டி வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. விபத்துக்கள் ஏற்படுகின்ற வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சிறு சிறு சிக்கல்கள் ஏற்படும் காலம் காலமாக வழிபட்டு வருகின்ற குல தெய்வத்தின் ஆசி குறையும் இதில் இருந்து விடுபட்டு விடிவு காண நட்சத்திரமுறைப்படி பரிகாரம் கேள் என்று முருகன் உரைத்தார்.*

**பரிகாரம்:** *அசுபதி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம் முடிய மேஷ இராசியில் இருப்பதால் அசுபதி நட்சத்திரம் அன்று சூரிய உதய காலத்தில் நாடி படிக்கப்பட்டது. நட்சத்திர வாரியாக பாடல் வந்தது*

பரிகாரமும் வந்தது.

**அசுபதியில் பிறந்தவர்கள்:** அசுபதி நட்சத்திரமன்று சூரிய உதய காலத்தில் ஸ்ரீஞானஸ்கந்தர் ஜீவநாடியைப் பூஜித்து வாக்கு கேட்கப்பட்டது. அதில் பின்வரும் பரிகாரம் வந்தது.

**"குதிரை முகம் கொண்டதொரு கடவுள்**
**குறைவிலா நலம் தருவார்**
**உடன் லட்சுமி உண்டு ஹயக்ரீவராம்**
**திருவஹிந்திபுரம் சென்று வா**
**திருப்பம் வரும் திரும்பதிரும்ப**
**மும்முறை போ ஜெயமாகும்!"**

**பொருள்:** கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவஹிந்திபுரம் எனும் ஆலயத்தை அசுபதி நட்சத்திரம் வரும் நாளில் மூன்று முறை தரிசனம் செய்ய 2½ ஆண்டுகள் வரும் அஷ்டமச்சனியால் வருகின்ற பாதிப்பு நீங்கி திருப்பம் வரும். இதை அனுபவத்தில் 100% உணர்ந்துக் கொள்ள முடியும். இந்த ஆலயம் கடலூரிலிருந்து பண்ருட்டி செல்லும் வழியில் உள்ளது. கடலூரில் இருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ளது.

**பரணியில் பிறந்தவர்கள்:** பரணியன்று சூரிய உதயத்தில் வாக்கு கேட்கப்பட்டது பின்வரும் பரிகாரம் வந்தது.

**"நாமமது கொண்ட மலை**
**நரசிம்மர் உள்ள மலை**
**நாமகிரி எனும் தாயும்**
**நலமது அருளும் மலை**
**நாளெல்லாம் நின்றருளும்**
**நற்குரங்கு நின்றமலை**
**நான்கு பரணி செல் நலமாகும்"**

**பொருள்:** நாமக்கல் ஆஞ்சநேயரையும் நாமகிரித் தாயாரையும் நரசிம்ம சுவாமியையும் நான்கு முறை பரணி நட்சத்திரத்தன்று தரிசனம் செய்ய 100% நன்மை ஏற்படும். இதை அனுபவத்தில் உணரலாம். நாமக்கல் பேருந்து நிலையத்தின் அருகில் இந்த ஆலயம் அமைந்து உள்ளது.

**கிருத்திகை 1இல் பிறந்தவர்களுக்கு:** கிருத்திகையன்று உபவாசம் இருந்து நாடி கேட்கப்பட்டது.

**"குளித்தலை கடம்பீசனை**
**கிருத்திகை எட்டுமுறை**
**கண்டுவா குறைபோம்**
**பல மாற்றம் வரும்**
**பகை நீங்குமே"**

**பொருள்:** திருச்சி அருகில் உள்ள குளித்தலை கடம்பர் கோவிலை எட்டு கிருத்திகை வழிபட்டு வர 100% நன்மை ஏற்படும் என்பது நிச்சயம்.




**வெள்ளை தழும்புகள்**

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தில் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி தோலின் அசல் நிறத்தை அடைந்து விடுகிறது. ஆயிரக்கணக்கானோர் பயனடைந்துள்ளனர். நீங்களும் நோயின் முழு விவரத்தையும் எழுதி ஒரு முறை அவசியம் பரிச்சித்து பார்க்கவும். மருந்து விலை ரூ.510/- பெற விரும்புவோர் உடன் நேரில் வரவும் அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**ரகசிய நோய் மருந்து**

எமது மருந்து உபயோகித்தால் நித்திரையில் ஸ்கலிதம், சிறு நீர். மலம் கழிப்பதற்கு முன். பின் சக்தி வீணாதல், சிறுநீர் சம்பந்த நோய், சீக்கிர ஸ்கலனம், உயிர் அணு குறை, கனோரிய ஸிபிலிஸ் போன்ற நோய் அடியோடு அழிக்கப்பட்டு நிரந்தரமாக குணமாகிவிடும். உடலில் ஒப்பற்ற சக்தி ஓட்டம் பெற்று பாலுணர்ச்சியில் முன்னேற்றம் காணப்படும். ஆயிரக்கணக்கானோர் பயனடைந்ததாகும். பெற விரும்புவோர் நோய் விவரம் வயதுடன் எழுதவும்.

**மருந்து ஒரு கோர்ஸ் விலை ரூ. 625/— முழு கோர்ஸ் ரூ. 900/—**

**ஆண்மை குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரம் இலவசம் - புத்தம் புதிய கண்டுபிடிப்பு**

திருமணத்திற்கு முன் அல்லது பின் ஏற்பட்ட ஆண்குறி தளர்ச்சி, நரம்பு வீரியமின்மை அல்லது வளர்ச்சியின்மை, மெலிவு, வளைவு, முதலான குறைபாடுகள் இருந்தால் எமது புத்தம் புதிய கண்டுபிடிப்பில் உருவான ஆண்குறி குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரத்தின் உபயோகத்தால் எப்பேர்பட்ட எவ்வயதுடையோரின் ஆண்குறி குறைபாடும் நிச்சயம் நிரந்தரமாக குணமடைந்துவிடும். இந்த இயந்திரம் ஒரு மெசின் போன்றதாகும். இதை உபயோகிப்பது மிக மிக எளிதாகும். இதன் உபயோகத்தால் 100% பயன் கிட்டுவது உறுதியாகும். விளம்பரத்திற்காக இந்த இயந்திரம் இலவசம். இன்றே அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு இயந்திரம் பெற்று பயனடைவீர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**VAIDYAR N.RAMESH NAIDU**
**PAKKAM DHARNAMPET-GUDIYATHAM, (VELLORE) 632601.**
**CELL-9865415652, 9994486669**




தெய்வீக சிந்தனையும், தெளிவான எண்ணமும், பகட்டான தோற்றமும் கொண்ட ரிஷப இராசி அன்பர்களே உங்கள் இராசியின் அதிபதி சுக்கிரன். எனவே ஆடம்பர பொருட்களில் அதிக அக்கறை உள்ளவர்களாகத் திகழ்வீர்கள். தனது பேச்சின் மூலம் அனைவரையும் சாமர்த்தியமாகவும், சாதுர்யமாகவும், வேடிக்கையாகவும் பேசிக் கவரும் தன்மை கொண்டவர்களாக இருப்பீர்கள். அனைவரிடத்திலும் அன்பாக பேசி எளிதில் பழகப்படுத்திக் கொள்ளும் திறமை உங்களுக்கு உரிய ஒன்றாகும். தற்பெருமைக்கும் புகழ்ச்சிக்கும் ஆசைப்படாதவர்களாக இருப்பீர்கள். பிறருக்கு ஓடி வந்து உதவுவதில் தன்னலம் கருதாது செயல்படுவீர்கள். நீங்களாக எந்த வம்புக்கும் செல்லாதவர்கள் யார் வம்புக்கு வந்தாலும் தைரியமாக துணிவுடன் ஓட ஓட விரட்டும் துணிவு கொண்டவர்கள். சந்திரன் உங்கள் இராசியில் உச்சம். எனவே குளர்ச்சியான உடல் அமைப்பினை பெற்றுக் காணப்படுவீர்கள். எனவே குளிர்ச்சிக்கு உண்டான சனி உங்களுடனே ஒட்டிக் கொண்டு இருக்கும். இதுவரை உங்கள் இராசிக்கு 6ஆம் இடமான துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இனி, காம, களத்திர கூட்டுத் தொழில் ஆகியவற்றைக் குறிக்கும் 7ஆம் இடமான விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இப்பெயர்ச்சியின் மூலம் சனிபகவான் வாழ்வில் ஏற்றங்களையும் மாற்றங்களையும் எவ்வாறு தரப் போகிறார் என விரிவாகக் காணலாம்.

**மதிப்பெண்கள்**
**50**
**100**

இதுவரை உங்கள் இராசிக்கு 6ஆம் இடமான கடன், எதிரி, வழக்கு, நோய் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானத்தில் இருந்து சனிபகவான் திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக் கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கு உங்கள் இராசிக்கு 7ஆம் இடமான காம, களத்திர ஸ்தானத்திற்கு இடம் பெயருகின்றார். வாக்கியப்படி 16.12.2014 அன்று 7ஆம் இடத்திற்கு கண்டக சனியாக இடம் பெயருகிறார்.

6ஆம் இடத்திலிருந்து நோய்கள், கடன் தொல்லைகள், வம்பு, வழக்குகள் ஆகியவற்றைக் கொடுத்த சனி பகவான் இனி மேற்கண்ட தேதியிலிருந்து 7ஆம் வீடான விருச்சிக இராசிக்கு இடம் பெயர்ந்து சிற்சில ஆதாயங்களைத் தரப் போகின்றார். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துக் கொள்ளவும்.

இதனால் கௌரவம் குறைய வாய்ப்புகள் அதிகம் உண்டு. சகோதர சகோதரிகளின் தடைபட்டு வந்த திருமணக் காரியங்கள் நடைபெறும் வாய்ப்புகள் அதிகம். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் எதிர்பார்த்த அளவு உதவிகள் கிடைக்க வாய்ப்புகள் உண்டு. நீண்ட தூரப் பயணங்கள் மேற்க் கொள்வீர்கள். பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று மகிழ்வீர்கள். வண்டி வாகன சேர்க்கைகள் ஏற்படும். முன் பின் தெரியாதவர்களுக்கு தேவையில்லாமல் ஜாமீன் கொடுத்து சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம். மிக கவனமுடன் நடந்துக் கொள்வது நல்லது.

கூட்டுத் தொழில்களின் மூலம் புதிய பிரச்சனைகள் உருவாக நேரிடலாம். எனவே கவனமுடன் செயல்படுவது நல்லது. திருமண தடைகள் ஏற்படும். கணவன்—மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் நிலவும். உடல் நலத்தில் அதிக அக்கறைக் கொள்வது நல்லது. நுரையீரல் மற்றும வயிறு சம்பந்தமான நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. வண்டி வாகனத்தில் செல்லும்போது கவனமுடன் செல்வது மிகவும் நல்லது. விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். படித்து முடித்த இளைஞர்கள் வேலை கிடைக்காமல் அவதிப்படுவார்கள். பணத்தட்டுப்பாடுகள் ஏற்படும். நண்பர்களுக்கிடையே கொடுக்கல் வாங்கலில் அதிக பிரச்சனைகள் ஏற்படும்.

சொந்த தொழில் செய்பவர்கள் வேலையாட்களின் மூலம் தேவையில்லாத பிரச்சனைகள் ஏற்படும். சொன்ன நேரத்தில் வேலையினை முடிக்க முடியாமல் தடுமாறுவீர்கள். கூட்டுத் தொழில் மூலம் சக நண்பர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படும்.

பணியில் இருப்பவர்களுக்கு பணி


மாற்றுதல் கிடைக்கும். மேலதிகாரிகளால் சில பிரச்சனைகள் ஏற்பட நேரிடலாம். புதிய பதவிகள் கிடைக்க அதிக முயற்சியும், முன்னேற்றமும் தேவைப்படும். மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற நினைத்தாலும் இந்த சனியின் பெயர்ச்சியினால் நினைத்த அளவு மதிப்பெண் பெறுதல் என்பது சற்று கடினமே. அன்றைய பாடங்களை உடனே படித்தலின் மூலம் அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்புகள் அதிகம்.

விவசாயிகளுக்கு இந்த சனியின் சஞ்சாரம் நலமில்லாத நிலையே ஏற்படுத்தும். மானாவரி பயிர்களை பயிரிடலாம். அதன் மூலம் ஓரளவு பணத் தட்டுப்பாடுகள் குறைந்து செலவிற்கு கை கொடுக்கும்.

## சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

சனி பகவான் விருச்சிக இராசியான 8ஆம் வீட்டில் இருந்துக் கொண்டு உங்கள் இராசியினையும், சிம்மம் மற்றும் மகர இராசியினையும் 3,7,10ஆம் பார்வையாகப் பார்த்து பல மாற்றங்களைத் தரப் போகிறார்.

குரு பார்வைப்படும் வரையில் சனிப் பெயர்ச்சியில் அதிக கவனம் தேவையில்லை என்ற போதிலும் 13.7.2015க்கு மேல் அதிக கவனம் தேவை.




**சனிபகவான் 1ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

ஜென்ம இராசியையும், தன்னைப் பற்றியும் குறிக்கின்ற ஸ்தானத்தை சனிபகவான் பார்ப்பதால் குண நலன்களில் குறை ஏற்படும். கண்டகச் சனியினால் நல்லவர்களும் எதிரியாக பாவித்து செயல்படும் நிலை ஏற்படும்.

**சனிபகவான் சுகஸ்தானமான 4ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

சனிபகவான் சுகஸ்தானமான 4ஆம் வீட்டைப் பார்ப்பதால் சுகத்தில் குறை ஏற்படும். தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை தேவை. வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு இலாபம் கிட்டுவது கடினமே. வீடு.நிலம் வாங்குவது மற்றும் விற்பதில் பிரச்சனைகள் ஏற்படும். எனவே அதிக கவனம் தேவை.

**சனிபகவான் பாக்கியஸ்தானமான 9ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

மேற்படிப்பு மற்றும பாக்கியம், பக்தி தந்தை ஆகியவற்றைக் குறிக்கும் 9ஆம் இடத்தை பார்ப்பதால் செல்வாக்கு புகழ் குறையும். தந்தையின் உடல் நிலையில் அதிக அக்கறை தேவை. மேற்படிப்பு படிப்பவர்களுக்கு சில தடைகள் வரும் நிலை ஏற்படும். எனவே கடின முயற்சி ஏற்படும்.

**சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை குருவின் நட்சத்திரத்தில் சஞ்சாரப் பலன்கள்:**

உத்யோகத்தில் கவனம் தேவை. தொழில் செய்யும் இடத்தில் கூடுதல் எச்சரிக்கை தேவை. கூட்டாளிகள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. எந்த புது முயற்சியாக இருந்தாலும் யோசித்து செயல்படுவது நன்மை பயக்கும். துரித முயற்சி வெற்றி தரும்.

**சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

புதிய வண்டி வாங்குதல் மற்றும் பழைய வண்டி வாகனம் ஓட்டுவதிலும் எச்சரிக்கை தேவை. தொலைதூர பிரயாணங்கள் தவிர்ப்பது நல்லது. பக்தி கூடும். பக்குவம் ஏற்படும். எதிரிகளை அடையாளம் கண்டுக் கொள்வீர்கள்.

**சனி பகவான் 27.12.2015 முதல் 24.1.2017 வரை** புதனின் நட்சத்திரமான கேட்டையில் சஞ்சரிக்கும் காலம் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குதுகலம் கூடும் குழந்தை பாக்கியம் கிட்டும். கணவன் . மனைவி அன்பு சீர்படும். பூர்வீக சொத்தில் இருந்த வில்லங்கம் நீங்கும்.

## சனியின் வக்கிர பலன்கள்:

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2016 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ் சரிக்கின்றார்.**

உங்கள் இராசிக்கு 9,10க்கு அதிபதியாக விளங்கி பாக்கியம் மற்றும் தொழில் ஸ்தான அதிபதி வக்கிரம் அடைகின்றார். சனிபகவான் வக்கிரம் ஆகும் பொழுது கூடுதல் கவனம் தேவை. உங்கள் இராசிக்கு 10ஆம் இட அதிபதி சனி வக்கிரம் அடைந்து தொழிலில் அதிக பாதிப்பினை ஏற்படுத்தும். வேலையாட்கள் மூலம் அதிகப் பிரச்சனை ஏற்படும். அதிக இலாபத்தை எதிர் பார்க்க முடியாது. 9ஆம் இடமான பாக்கியஸ்தானத்தை அதிபதி வக்ரம் அடைவதால் பக்தி குறையும். தந்தையின் உடல் நிலையில் குறைவு ஏற்படும். வெளியூர், வெளிநாடு பயணங்களில் தடைகள் ஏற்படும்.

*ரிஷப இராசிக்கு சனிபகவான் 7இல் சஞ்சரித்து கண்டகச் சனியாக வந்து கஷ்டங்கள் பலன் தருவதால் வெள்ளிக்கிழமை சுக்கிர ஹோரையில் மஹாலெட்சுமி அஷ்டகம் 8 முறை பாராயணம் செய்து ஸ்ரீஞானஸ்கந்தர் ஜீவநாடியைப் பூஜித்து வாக்கு கேட்கப்பட்டது பின்வரும் பாடல் வந்தது.*

**பொருள்:** *ரிஷப இராசிக்கு 7இல் மந்தன் என்று சொல்லப்படும் சனி பகவான் வரும் நேரம் எல்லாவற்றிலும் ஏமாற்றம் வரும். எதற்கெடுத்தாலும் எதிர்ப்புகள் பல வரும். கணவன், மனைவி உறவு சீர்கெடும். திருமணத்தடை வரும். எல்லாக் காரியங்களிலும் தடை வந்து பக்குவத்தை பரிசோதிக்கும். எனவே உரிய பரிகாரம் தேட வேண்டும் என ஸ்ரீஞான ஸ்கந்த மூர்த்தியாகிய முருகப் பெருமான் உரைத்தார். பரிகாரங்கள் நட்சத்திர வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.*

### கிருத்திகை 2,3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

*கிருத்திகையன்று உபவாசம் இருந்து ஜீவநாடி படிக்கப்பட்டது. பின்வரும் பாடல் வந்தது.*

**"சிரகிரி வேலவனை**
**சிரம் தாழ்த்தி வணங்கி**
**பின்னாக்கு சித்தனையும்**
**பிரியமுடன் சேவித்து**
**வரவேணும் வேலனுக்குந்த**
**ஆறு சஷ்டி செய்**
**சிறப்பாகும் சீராகுமே!"**

**பொருள்:** *ஈரோடு மாவட்டம் சென்னிமலை முருகனையும் அங்குள்ள பின்னாக்கு சித்தரையும் ஆறு சஷ்டி சென்று வழிபட 100% நன்மை ஏற்படுவதை அனுபவத்தில் உணரலாம்.*

### ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்

*புதன்கிழமையன்று சுதர்ஸன காயத்ரி மந்திரம் 1008 முறை ஜபித்து நாடி படிக்கப்பட்டது. பின்வரும் பரிகாரம் பாடலாக வந்தது.*

**"ஆதி திருவரங்கம் எனும்**
**அற்புத ஆலயத்தை**
**ஐந்து ஏகாதசி தவறாமல்**
**தரிசிக்க வேணும்**
**தரணியில் தரமான வாழ்வு**
**தடையில்லா நிலை**
**அத்துனையும் கிட்டும்**
**சத்தியமே ஆசி!"**

**பொருள்:** *விழுப்புரத்தில் உள்ள ஆதி திருவரங்கம் எனும் பெரிய இரங்கநாத சுவாமியை ஐந்து முறை ஏகாதசி திதி வரும் நாளில் தரிசனம் செய்ய வேண்டும். 100% நன்மை கிட்டும்.*



### மிருகசீருஷம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

*புதன் கிழமையன்று ஹரே கிருஷ்ண மந்திரத்தை 108 x 16 முறை ஜபித்து துளசி பூஜை செய்து நாடி படிக்கப்பட்டது. ஞானஸ்கந்தர் ஜீவ நாடியில் பின்வரும் பரிகாரம் வந்தது.*

**"உயர்வான தெய்வம்**
**உள்ளத்தூய்மை தரும்**
**உள்ளன்போடு சேவி**
**உடுப்பியெனும் சேக்ஷத்ரம்**
**உத்தமமாம் சேவை**
**ஹரே கிருஷ்ண மந்திரம்**
**அங்கமர்ந்து ஐநூறு முறை**
**அன்புடனே ஜபித்துவா**
**ஐயமதில்லாமல்**
**அற்புத வாழ்வு கிட்டும்**
**அபூர்வம் பல நடக்கும்**
**ஆசிகள் கிட்டும்**
**அத்துணையும் சித்திக்குமே**
**ஆசி! ஆசி! ஆசி!**

**பொருள்:** *கர்நாடகா மாநிலத்தில் உள்ள உடுப்பி எனும் கிருஷ்ணர் ஸ்தலம் சென்று 500 முறை ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே எனும் மந்திரத்தை அங்கு ஆலயத்தில் அமர்ந்து ஜபம் செய்ய 100% நலம் கிட்டும் என்பது சத்தியம்.*




அன்பான மிதுன இராசி அன்பர்களே, விருந்து, விழா, வளம், வாய்ப்பு, சந்தோஷம், போன்ற குதூகல நேரங்களில் தன்னையே மறந்து சந்தோஷிக்கும் மனம் உடையவர் நீங்கள் கலைக்கும் ஆடம்பர வாழ்விற்கும், சினிமா, பொழுதுபோக்கு ஆகியவற்றில் அலாதி பிரியம் உள்ளவர்களாக இருப்பீர்கள் . உங்கள் இராசியின் அதிபதி புதன். எனவே சிறியதாக இருந்தாலும் கூட பெரியதாக எண்ணி ஆழ்ந்து, ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன் படைத்திருப்பீர்கள். உங்களின் இராசிக்கு அதிபதியான புதனுக்கு ஜென்ம பகையாகவும், பாதகாதிபதியாகவும் குரு சஞ்சரிக்கும் இக்கால கட்டத்தில், சனி பகவானின் இந்தப் பெயர்ச்சிப் பலன்கள் எந்த வகையில் ஏற்றத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும் என இனி காணலாம்.

உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் துலாம் வீட்டில் இருந்த சனி பகவான் கீழ்காணும் தேதிகளில் நோய், கடன்கள், எதிரிகளைக் குறிக்கின்ற ஸ்தானமான 6ஆம் வீட்டிற்க்கு இடம் பெயருகின்றார். கெட்டவர் கெட்டிடில் விபரீத இராஜயோகம் ஏற்படும் என்ற ஜோதிட பழமொழிக்கு ஏற்ப வருகின்ற திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக் கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கு உங்கள் இராசிக்கு 6ஆம் இடமான விருச்சிக இராசிக்கு இடம் பெயருகின்றார். 16.12.2014 வாக்கியப்படி விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார்.

பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய 5ஆம் இடத்தில் இருந்துக் கொண்டு துக்கம், கொஞ்சி விளையாட இல்லையொரு பிள்ளை என்ற ஏக்கம், பொது விவகாரங்களில் பிரச்சனை, பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள், வம்பு வழக்குகள், நெருங்கிய உறவினர்களிடையே இருந்த மனக் கசப்பு ஆகியவற்றை வாரி இரைத்த சனி பகவான் இனி மேற்குறிப்பிட்ட தேதிகளில் எதிரிகளை இணங்கண்டு கொள்ளவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், வழக்குகளில் வெற்றி பெறவும் 6ஆம் இடத்திற்கு இடம் பெயருகிறார்.

பொன்னனவனாம் குரு பகவானும் நல்லதை நவில பெயர்ச்சியாகியிருக்கும் இந்த நிலையில், இந்த சனி பகவானின் 6ஆம் இட சஞ்சாரம் மேற்கொண்டு பல நல்ல அரிய பலன்களை அள்ளித் தரும் என்று சொன்னால் அது மிகையாகாது. என்னதான் சனிபகவான் தான் இருக்கின்ற வீட்டினை பலப்படுத்தினாலும், பார்வைபடும் வீடுகளை கெடுக்கும் என்பதே நிதர்சனம்.

சனிபகவானின் 6ஆம் இட சஞ்சாரத்தால் நண்பர்களைப் போன்று நடித்து வந்த எதிரிகளைக் இனங்கண்டு கொள்வீர்கள். வியாபாரத்தில் ஓரளவு ஏற்றம் ஏற்பட்டு கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். இதுவரை இழுபறியில் இருந்த வம்பு வழக்குகள் உங்களுக்கு சற்று சாதகமான முடிவுகளுடன் முடிவடையும். நீண்ட நாள் நோயினால் அவதிப்பட்டு வந்தவர்கள் உடல் நிலையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும்.

| மதிப்பெண்கள் |
|---|
| 70 / 100 |

சொந்த தொழில் செய்பவர்களுக்கு இதுவரை வேலையாட்களுடன் இருந்து வந்த பிரச்சனைகள் விலகும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். இதுவரை இருந்து வந்த இடர்பாடுகள் நீங்கி தொழிலில் முன்னேற்றங்கள் ஏற்படும். தொழில் சம்பந்தமான வெளிநாடு வாய்ப்புகள் தேடி வரும். புதிய காண்ட்ராக்ட்டுகளில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

பணியில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளுடன் இருந்து வந்த சச்சரவுகள் விலகும். சிலருக்கு உயர்பதவி கிடைக்கவும் அதிகமான வாய்ப்புகள் உண்டு. வீண் அலைச்சலைத் தடுக்கலாம்.

கலைத்துறையில் இருப்பவர்களுக்கு இது ஒரு பொன்னான காலம். குரு பகவானின் ஆசியும் அதிகமிருப்பதால் ஓரளவு உழைத்தால் கூட அதிக பலனைப் பெறலாம்.


மாணவர்கள் சற்று முயற்சி செய்து படித்தால் அதிக அளவில் மதிப்பெண்கள் பெறலாம். சனிபகவான் மறதியை கொடுப்பவர். எனவே தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற அன்றைய பாடங்களை அன்றே படித்து முடித்தால் தேர்வு நேரத்தில் சுமை குறையலாம்.

பெண்களுக்கு தேக ஆரோக்கியம் கிட்டும்.

கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். ஒற்றுமை அதிகமாகும். உற்றார் உறவினர்கள் தேடிவந்து நட்பு பாராட்டுவார்கள். கொஞ்சி விளையாட இல்லையொரு பிள்ளை என்ற நிலை மாறி குழந்தைப் பேறு கிடைக்கும்.

## சனி பகவானின் பார்வைப் பலன்கள்

சனி பகவான் 5ஆம் வீடான துலாம் இராசியிலிருந்து மேற்கண்ட தேதிகளில் 6ஆம் வீடான விருச்சிக இராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். இந்த சனி பகவானின் இரண்டரை ஆண்டுகால பெயர்ச்சியால் மிதுன இராசியில் 3,8,12ஆம் பார்வையாக சிம்மம், மகரம், ரிஷபம், ஆகிய வீடுகளை தனது பார்வைப் பலனை வீசுகின்றார். சனிபகவான் தான் இருக்கும் வீட்டினை பலப்படுத்தினாலும், பார்வைப் படும் வீடுகளை கெடுக்கும் என்பதில் ஐயமில்லை. குரு பார்வை தொன்னூறு சதவீதம் கிடைத்தாலும் கூட, குரு பெயர்ச்சிக்குப் பின் அதிக கவனம் தேவை.




### சனி பகவான் தைரியஸ்தானமான் 3ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

இளைய சகோதரன், சகோதரி, தைரியம், புகழ், ஆகியவற்றைக் குறிக்கின்ற ஸ்தானமான 3ஆம் இடத்தை சனி பகவான் பார்ப்பதால் இளைய சகோதரன் சகோதரியிடம் மனக் கசப்புகள் ஏற்படும். புகழ் செல்வாக்கு ஆகியவற்றில் குறை ஏற்படும். பொது இடங்களில் பேசும் போது அதிகக் கவனம் தேவை. உறவினர்களிடம் எச்சரிக்கையாகப் பேசுவது மனக்கசப்பைக் குறைக்கும்.

### சனி பகவான் 8ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

வம்பு, வழக்குகள், விபத்து, கண்டம், ஆயுள் பாதிப்பு ஆகியவற்றைக் குறிக்கின்ற ஸ்தானம் 8ஆம் இடம் இந்த 8ஆம் இடத்தில் சனி பார்வை படுவது நலமில்லாத நிலையே. தேவையற்ற பொது காரியங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். வண்டி வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கையாகச் செல்லவும். சிலருக்கு அறுவை சிகிச்சை செய்யும் நிலையும் ஏற்படலாம் கவனம் தேவை.

### சனி பகவான் விரையஸ்தானமாகிய 12ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

சனிபகவான் தனது 10ஆம் பார்வையாக 12ஆம் வீடான ரிஷப இராசியினைப் பார்கிறார். பொதுவாக 12ஆம் இடம் வெளிநாடு, விரையம், தூக்கம் ஆகியவற்றை குறிக்கின்ற ஸ்தானமாகும். எனவே சிலருக்கு வெளிநாடு தொலைதூர பயணங்கள் ஆகியவை தடைபடலாம். விரைய ஸ்தானத்தைப் பார்ப்பதால் தொழிலில் சற்று கவனம் தேவை. முன்பின் தெரியாதவர்களிடம் பணம் பொருள் ஆகியவற்றை கொடுத்து ஏமாந்து விடாதீர்கள். சிலருக்கு தூக்கமின்மை, தேவையற்ற மனக்குழப்பங்கள் ஆகியவை ஏற்படலாம். குல தெய்வ வழிபாடு ஓரளவு கைகொடுக்கும். இருப்பினும் முன்னெச்சரிக்கைத் தேவை.

### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாக நட்சத்திரத்தில் சஞ்சாரப் பலன்கள்

சடாட்சர மூர்த்தியின் பிறப்பு நட்சத்திரம் விசாக நட்சத்திரம் சனி பகவான் குருவின் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் இக்கால கட்டத்தில் வண்டி வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தந்தையுடன் பிணக்கு வரும். தெய்வ ஆசி குறைந்து காணப்படும். எடுக்கின்ற காரியங்களில் கவனம் தேவை.

### சனிபகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை புதனின் நட்சத்திரமான கேட்டையில் சஞ்சரிக்கும் காலம்

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சஞ்சரிக்கும்போது புகழ் கூடும். கௌரவம் உயரம், உயர் பதவி கிடைக்கும். தாயின் உடல் நிலையில் சீரான மாற்றம் நிகழும். வண்டி வாகன சேர்க்கையது ஏற்படும். புதிய புதிய வித்தைகளைக் கற்று மகிழ்வீர்கள்.

### சனிபகவான் அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

சனிபகவான் வருகின்ற **29.11.2014** முதல் **26.12.2015** சனியின் நட்சத்திரமான அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும்போது கொடுக்கல் . வாங்கல் சீர் படும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள் வழியில் பல உதவிகள் கிடைக்கப்பெறும்.

## சனி வக்ரப் பலன்கள்

### 15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2016 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்ரத்தில் சஞ் சரிக்கிறார்.

உங்கள் இராசிக்கு 8,9க்கு அதிபதியாக விளங்கிய சனி வக்ரத்தில் 6இல் சஞ்சாரம் செய்கிறார். எனவே புது முயற்சிகள் வீண் அலைச்சலையும், விரையத்தையும் தரும். புதிய தொழில் எதிர்பார்த்த அளவு இலாபத்தை



கொடுக்கும் என்பது சந்தேகமே. எனவே எதிலும் கவனமுடன் செயல்பட வேண்டும்.

*மிதுன இராசியினருக்கு 6இல் விருச்சிக இராசியில் உள்ள சனி பகவான் பல அற்புத நலன்களைத் தருவார். அதில் இன்னும் கூடுதல் பலன் வேண்டும் என்று புதன் ஹோரையில் விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்து பச்சை ஆடை அணிந்து ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவநாடியைப் பூஜித்து வாக்கு கேட்கப்பட்டது. அதில் பின்வரும் பாடல் வந்தது.*

**மைதுனமாம் ராசி**
**தனக்காறில் மந்தன்**
**தாராள நன்மை தர**
**ஏதுவாகும் காலம்**
**எடுக்கின்ற காரியங்கள்**
**தொடுக்கின்ற வெற்றியாகும்**
**எதிரி தொல்லை நீங்கி**
**ஏற்றது மது காணும்**
**எல்லாமே சிறப்பாமே**
**சிறப்பு !**

**பொருள்:** *மிதுன இராசிக்கு 6இல் மந்தன் எனும் சனி வரும் காலம் தாராள நன்மைகள் தருகின்ற காலமாகும். எடுக்கின்ற எல்லா காரியங்களிலும் வெற்றி ஏற்படும். நேர்முக மறைமுக எதிரிகள் யாராக இருந்தாலும் அல்லது எத்தகைய எதிர்ப்பாக இருந்தாலும் தூர ஓடிவிடும். ஏற்றமான காலம் எல்லாமே மிகச் சிறப்பாக இருக்கும் என முருகப் பெருமான் ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவ நாடியில் உரைத்தார்.*

## பரிகாரம்

### மிருகசீருஷம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

**"சீரான நலமுண்டு**
**சிறப்பான வளமுண்டு**
**நன்மைகள் கூடிவர**
**நலமெல்லாம் தேடிவர**
**நாவிரண்டு முறை தவறாமல்**
**சென்று சேவிக்க வேண்டுமது**
**சிக்கலெனும் க்ஷேத்ரம்**
**சிறப்பான வாழ்வும்**
**சிந்தையில் சிறப்பும்**
**மேலோங்குமே**
**ஆசி !"**

**பொருள்:** *சிக்கல் சிங்கார வேலனை 8 முறை சென்று வணங்கி வர 100% சிறப்பான வாழ்வு கிட்டும் என்பதை அனுபவத்தில் உணர்ந்துக் கொள்ளலாம்.*

### திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்

*திருவாதிரை அன்று ருத்ர ஜபம் செய்து ஜீவநாடி படிக்கப்பட்டது பின்வரும் பரிகாரம் வந்தது.*

**"திருப்பது உண்டு**
**திவ்யமது உண்டு**
**தித்திக்கும் வாழ்வும்**
**திறம்படவே உண்டு**
**திருப்பம் பல வர**
**திவ்யமது ஆக**
**திங்களொருமுறை**
**திவ்யமாய் மும்முறை**
**சேவிக்க வேண்டுமே**
**சீர்காழி க்ஷேத்ரம்"**

**பொருள்:** *சீர்காழியில் உள்ள சிவாலயத்தை மூன்று மாதம், மாதம் ஒரு நாள் வீதம் மனதிற்கு பிடித்த நாளில் தரிசனம் செய்து வர 100% யோகம் ஏற்படும்.*

### புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

*குரு ஹோரையில் குபேரனை பூஜித்து நாடி படிக்கப்பட்டது. பின்வரும் பாடல் வந்தது.*

**"குருவருளால்**
**குடும்பத்தில்**
**குதூகலம் கிட்டும்**
**குறைவில்லா**
**நலம் பலவும்**
**கூடி வரும்**
**தேடி வரும்**
**நாடி வரும்**
**சென்று வர**
**வேண்டுமது**
**தட்சிணாமூர்த்திபைரவர்**
**குருகோவில்**
**மடப்புரமே பின்**
**பிரியமான வாழ்வு**
**கிட்டுமே !"**

**பொருள்:** *திருவாரூரில் உள்ள மடப்புரம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சமாதிக் கோவிலுக்கு ஒரு வியாழன் அன்று சென்று பூஜித்து வர 100% நலம் கிட்டுவதுடன் குருவருளால் குடும்பத்தில் பல நல்ல காரியங்கள் நடக்கும்.*




கால புருஷ தத்துவத்தின்படி உங்களின் இராசி நான்காவது இராசி. உங்களின் இராசிநாதன் சந்திரன். அதனால் குளிர்ச்சியான தேகமும், கூடவே சளி, இருமல் போன்ற உடல் உபாதைகளையும் உங்களின் கைகுள் அடங்கும் என்றால் மிகையாகாது. கடக இராசியில் பிறந்தவர்கள் வாழ்வில் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டவர்கள். சுறுசுறுப்பாக செயல்பட்டு எதையும் திறமையுடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். எல்லோரிடத்திலும் அன்பாக பேசி கவர்ந்து இழுக்கும் திறன் படைத்துக் காண்பீர்கள். நான்காவது இராசியானது பெண் இராசியாகும். எனவே எதையும் முன்கூட்டியே யோசித்து செயல்படும் துரித குணம் கொண்டு திகழ்வீர்கள். ஜல இராசி என்பதால் கற்பனைத் திறன் அதிகம் கொண்டவர்களாக இருப்பீர்கள் அதிக இரக்க குணம் கொண்டவர்களாகத் திகழ்வீர்கள் அதனால் பலரின் ஏமாற்றுதலுக்கு ஆளாக நேரிடும். விடாப்பிடியான பிடிவாத குணம் கொண்டு வேண்டியதை தனக்கே சொந்தமாக்கிக் கொள்ளும் குணம் கொண்டவர்கள் நீங்கள். பிறரின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள தயங்கும் நீங்கள் உங்களின் வலுவான கருத்துக்களுக்கே முக்கியத்துவம் கொடுப்பீர்கள். இதனால் விரும்பியவரும் விலகிச் செல்லும் நிலை ஏற்படும்.

**மதிப்பெண்கள்**
**60**
**100**

பொன்னவன், நல்லவன் என்று போற்றப்படும் குருபகவான் ஓராண்டு காலம் உங்கள் இராசியிலே சஞ்சரிக்க உள்ளார். ஜென்ம குரு வன்ம குரு என்ற பழமொழிக்கு ஏற்ப குருவின் இந்த நலமில்லாத சஞ்சார நேரத்தில் பாவ கிரகங்கள் என்று அழைக்கப்படும் சனி பகவான் சுகஸ்தானம் என்று அழைக்கப்படும் 4ஆம் வீட்டிலிருந்து பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் வீட்டிற்கு இடம் பெயருகின்றார். இனி வரும் இரண்டரை ஆண்டுகள் சனி பகவானின் சஞ்சாரம் ஏற்றம் தருமா? மாற்றம் வருமா? என இனிக் காணலாம்.

கடக இராசிக்கு சனி பகவான் 4ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து 5ஆம் வீடான விருச்சிக இராசிக்கு வருகின்ற திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக் கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும், வாக்கியப்படி 16.12.2014 அன்றும் பெயர்ச்சியாகின்றார். சனி பகவானின் இந்த சஞ்சாரம் எவ்வாறு மாற்றங்களை அள்ளி வழங்கப் போகிறது எனப் பார்க்கலாம்.

சுகஸ்தானமான 4ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபவான் இப்போது இராசிக்கு 5ஆம் இடத்தில் பிரவேசிக்கப் போகிறார். இவ்வாறு இராசி மாறி வரும் சனி பகவான் முன்னர் கொடுத்தது போல கடுமையான பலன்களைக் கொடுக்க மாட்டார். ஓரளவு நற்பலன்களையே தருவார். பொருளாதார நிலையில் மிகப்பெரிய முன்னேற்றம் இல்லையென்றாலும் ஓரளவு பொறுப்புகளை நிறைவேற்றும் அளவிற்கு பணம் கைக்கு வரும். இதுவரை உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்த சனி பகவான் தேகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவார். தாயாரின் உடல் நிலையில் தக்க முன்னேற்றம் ஏற்படும். இழுபறியில் இருந்த நிலங்களை விற்க இதுவே தகுந்த நேரம். தொழிலும்கூட தகுந்த 4ஆம் இடம் மாத்ரு ஸ்தானம் ஆதலால் அங்கிருந்து சனி பகவான் விலகிவிட்டதால் உங்கள் தாயாரின் உடல் நிலையில் தகுந்த முன்னேற்றம் ஏற்படும். தந்தையின் உடலிலும் தகுந்த அளவு முன்னேற்றம் ஏற்படும். கூட்டுத் தொழில் மூலம் தகுந்த அளவு முன்னேற்றம் ஏற்படும்.

பணியில் இருப்பவர்களுக்கு பணியில் மாற்றம் ஏற்படும். சனிபகவான் இலாபஸ்தானமான 11ஆம் இடத்தைப் பார்ப்பதால் எதிர்பார்த்த அளவு இலாபம் கிடைப்பது சற்று தடுமாற்ற நிலையே ஏற்படுத்தும். கால்நடை தொழில் செய்பவர்களுக்கு ஜீவன வகைகளை பெருக்கி சுகமான வாழ்க்கை வாழ வழி கிடைக்கும்.

கலைத்துறையில் இருப்பவர்கள் தகுந்த முன்னேற்றத்தின் மூலமே இந்த துறையில் திறம்பட நிலைத்து நிற்க வழி செய்யும். புதிய முயற்சிகள் மேற்கொள்வது அதிக அளவில் ஆதயம் கிடைக்க வழி வகைச் செய்யும்.


மாணவர்கள் சனிபகவான் இளமைக்கல்வியினைக் குறிக்கும் இடமான இரண்டாம் வீட்டை பார்ப்பதால் படிப்பில்

அதிகக் கவனம் தேவை. சற்று முயற்சித்தால் மட்டுமே வெற்றி வாகை நிச்சயம்.

பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். களத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதால் கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் குடும்பத்தில் குதூகலம் கூடும்.

## சனி பகவானின் பார்வைப் பலன்கள்

சனி பகவான் 4ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து 5ஆம் வீடான விருச்சிக இராசிக்கு இரண்டரை ஆண்டுகள் சஞ்சரிக்க உள்ளார். சனி பகவான் தனது பார்வைப் பலன்களாக முறையே 2,7,11ஆம் ஸ்தானங்களைப் பார்க்கின்றார். சிம்மம், மகரம், ரிஷபம் ஆகிய இராசிகளின் மீது தமது பார்வையின் மூலம் பலன்களை வழங்கப் போகின்றார்.




### சனி பகவான் குடும்பஸ்தானமான 2ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

குடும்பம், இளமைக்கல்வி, பேச்சு, வாக்கு ஆகிய ஸ்தானமான 2ஆம் இடத்தை சனி பார்ப்பதால் குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படும். பேச்சிலே தெளிவில்லாத நிலை ஏற்படும். வம்பு . வழக்கு தேவையில்லாமல் சிக்கி தடுமாற நேரிடலாம். நெருங்கிப் பழகுபவர்களே நம்பிக்கை துரோகம் செய்யும் நிலை ஏற்படலாம். இதுவரை இருந்த கடின உழைப்பும், சுறுசுறுப்பும் சற்று குறைந்து மந்த நிலையினையே ஏற்படுத்தும். எதிர்பார்த்த இடத்தில் உதவிகள் கிடைக்காமல் போகலாம்.

### சனிபகவான் களத்திர ஸ்தானமாகிய 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

கூட்டுத்தொழில், நண்பர்களைப் பற்றிக் குறிக்கின்ற ஸ்தானம் 7ஆம் இடம். எனவே நெருங்கிய நண்பர்களும் பகையாகும் நேரம் இதில் கவனம் தேவை. கூட்டுத் தொழிலில் பிரிந்து விலகிச் செல்லும் நிலை ஏற்படலாம். எனவே அனுசரித்து செல்வதன் மூலம் ஓரளவு மாற்றம் ஏற்படும். கணவன் மனைவியிடையே சிறுசிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டு மனக் கசப்பு ஏற்படும். குலதெய்வ வழிபாடு ஓரளவு கைகொடுக்கும்.


### சனி பகவான் இலாபஸ்தானமான 11ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்



அகத்திய ஜோதிட விஞ்ஞானி
பி.எஸ். தேவராஜ்

அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில். 50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால் குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.


Dr.இரா. சுப்பிரமணியம்
அரசு பதிவு பெற்ற
மருத்துவர் பதிவு எண்: 1794

குடியை நிறுத்த!

குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்

கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.

ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று ரூ.5/

பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை

பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.

நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.
(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)

போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800

இலாபம், மூத்த சகோதரன் ஆகியவற்றைக் குறிக்கும் 11ஆம் இடமான ரிஷப இராசியினை சனிபகவான் பார்ப்பதால் தொழிலில் அதிகப்படியான வேலைப் பளு குறையும். மூத்த சகோதரர்களின் ஒத்துழைப்பை பெறுவீர்கள். நீதிமன்ற விவகாரங்களில் சாதகமான தீர்ப்பினைப் பெறலாம். பன்னாட்டுக் கல்வி, வெளிநாட்டு சம்பந்தமான தொழில் போன்றவற்றை திறம்பட நிறைவேற்றிக் கொள்வீர்கள். புதிய சொத்துக்களை வாங்கி பாக்கியத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.



நம்பிக்கை துரோகம் செய்யும் நேரம் எனவே இந்த வக்கர காலங்களில் கவனமுடன் செயல்படுவது நன்மை பயக்கும். இறை நம்பிக்கை இடர்பாடுகளை தடுக்கும்.

கடக இராசிக்கு 5இல் சனி சஞ்சரிப்பது ஓரளவு நல்ல பலன்தான் என்றாலும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் வருகின்ற சனி சிறுசிறு சிக்கல்களை ஏற்படுத்துவார் என்பதால் திங்கள் கிழமை சந்திரஹோரையில் புவனேஸ்வரியை பூஜித்து ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியை வணங்கி ஜீவநாடி படிக்கப்பட்டது. அதில் பின்வரும் பாடல் வந்தது.

**சனி பகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் பலன்கள்**

*குருவின் நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை சஞ்சரிக்கிறார். எதிரிகளை இனம் கண்டு கொள்வீர்கள். தெய்வ பலம் குறையும். கடன் தொல்லை அதிகரிக்கும்.*

**சனி பகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

*27.12.2015 முதல் 24.01.2017 வரை புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம், தைரியம் பெருகும். பத்திரிக்கை தொழில் சிறக்கும். சுப விரையங்கள் ஏற்படும். வண்டி வாகனச் சேர்க்கை ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும்.*

**சனி பகவான் அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

*சனி பகவான்* **29.11.2014** *முதல்* **26.12.2015** *வரை சனியின் நட்சத்திரமான அனுஷம் நட்சத்திரத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம். நீண்ட காலம் கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். கணவன் . மனைவியிடையே ஒற்றுமை பிறக்கும். காதல் கை கூடும். நீண்ட தூரப் பிரயாணங்களை மேற்க்கொள்வீர்கள் அதன் மூலம் சிறுசிறு ஆதாயம் கிடைக்கப் பெற்று மகிழ்வீர்கள்.*

## சனி வக்ரப் பலன்கள்

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2016 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.**

*உங்கள் இராசிக்கு 7,8க்கு அதிபதியாக விளங்கி களத்திரம் மற்றும் கண்டக ஸ்தானத்தின் அதிபதி வக்ரம் பெறுகிறார். எனவே கூட்டுத் தொழிலில் சற்று எச்சரிக்கை தேவை. வண்டி . வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருப்பது நன்மை பயக்கும். நெருங்கிப் பழகுபவர்களே.*

**"நண்டான ராசிக்கு**
**நலமான ஐந்திலே**
**தேள்ராசி தன்னில்**
**தேடிவரும் முடவன்**
**திருப்பது தந்தாலும்**
**பூர்வீகச் சொத்தில்**
**புத்திர வழியில்**
**புதுப்புது சிக்கல்**
**தந்தாலும் நீங்கும்'**
**தரணியில் தரமான**
**பரிகாரம் தேடு!"**
**நலமாகும் ஜெயமாகுமே"**

**பொருள்:** *நண்டு இராசி என்று சொல்லப்படும் கடகஇராசிக்கு 5இல் தேளஇராசி என்று சொல்லப்படும் விருச்சிகத்திற்கு முடவனாகிய சனி பகவான் வருவது திரும்பம் தந்தாலும் பூர்வீக சொத்திலும், புத்திரர்கள் வகையிலும் சிறுசிறு சிக்கல்களைத் தரும். அவ்விதம் தந்தாலும் பெரிய பாதிப்புகள் ஏதும் ஏற்படாது. எனவே முறையான பரிகாரம் தேடினால் நலமாகும் ஜெயமாகும் என்று ஜீவநாடியில் முருகப்பெருமான் உரைத்தார்.*

## பரிகாரம்

**புனர்பூசம் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்**

*குருஹோரையில் நாடி படிக்கப்பட்டது. அதன் பாடல்*

**"பாடலது கொண்ட ஈசன்**
**பாடலீசன் தன்னை**
**பிரதோஷமாக அன்று**
**ஐந்துமுறை அன்புடனே**
**ஆசார பூஜை செய்**
**அற்புத வாழ்வு கிட்டும்**
**அதிசயமது நடக்குமே!"**

**பொருள்:** *கடலூரில் உள்ள திருப்பாதிரிப்புலியூர்*

பாடலீஸ்வரசுவாமியை 5 பிரதோஷம் சென்று வழிபட 100% அதிசய மாற்றம் ஏற்படும் என்பது திண்ணம்.

**பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்**

மகேஸ்வர காலத்தில் பூஜை செய்து நாடி படிக்கப்பட்டது. அதன் பாடல்

**புண்ணியம் பெருகிட**
**புவனத்தில் பெருமை**
**ஓங்கிட புகழ்கூட**
**தொழில் வெற்றி கிட்ட**
**தொல்லைகள் நீங்க**
**உச்சி கணபதியை**
**உயர்வான மூன்றுமுறை**
**நாலாம் திதி தன்னில்**
**நலமாக சேவித்து வா**
**உடன் தாயுமானவனையும்**
**தரமாகும் வாழ்வு**
**தரணிதனிலே சிறப்பாகுமே!"**

**பொருள்:** *திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையாரையும் தாயுமான சுவாமியையும் மூன்று சங்கடஹர சதுர்த்தி தோறும் வழிபட்டு வர வாழ்வில் 100% வசந்தம் வீசும் என்பது ஜீவநாடி வாக்கு.*

**ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்**

புதன் ஹோரையல் நாடி படிக்கப்பட்டது. அதன் பாடல்

**"சீருண்டு சிறப்புண்டு**
**சிறப்பான வாழ்வுண்டு**
**செய்தொழில் மேன்மை**
**சரீர சுக சௌக்ய**
**ஆயுள் பல ஆரோக்ய**
**அதி உன்னத அற்புத**
**பாக்கியம் அதுகிட்ட**
**அரசமரம் சுற்று**
**ஐம் எனும் பீஜம்**
**ஐந்திதழ் தாமரை**
**அதுபோலும் கீறி**
**அட்சரமாக்கு பின்பு**
**புன்னை வன மாரி தன்னை**
**பிரியமுடன் சேவி**
**ஒரு வெள்ளியே"**




**பொருள்:** *இந்த யந்திரத்தை செப்புத் தகட்டில் வரைந்து தாயத்தில் அடைத்து அணிந்துக் கொண்டு அரச மரத்தை ஐம் என சொல்லிக் கொண்டே 27 முறை சுற்றி பின்பு தஞ்சாவூரில் உள்ள புன்னை நல்லூர் மாரியம்மனை ஒரு வெள்ளிக்கிழமை அன்று சேவிக்க 100% அற்புத மாற்றத்தை வாழ்வில் கண்டு வளமடையலாம்.*


**முழுவதும் விந்தையான நினைத்ததை நிறைவேற்றும்**

**அற்புத சித்த மோதிரம் இலவசம்**



அப்படி தாங்கள் ஏதேனும் துயரால் சிக்கியிருப்பின் கவலைப்பட வேண்டாம். உடன் எங்கள் ஆசிரம மோதிரம் பெற்று அணிந்தாலோ அல்லது உடன் வைத்தி ருந்தாலோ நீங்கள் விரும்பும் ஆண் / பெண் இதயத்தை கவரும், யாருடைய பெயரைஉச்சரிக்கின்றீரோஅவர்எத்தனைகல்நெஞ்சம்படைத்தவராயிருப்பினும் தங்கள் காலடியில் வந்து விழுவார். மேலும் தங்கள் விருப்பத்தின்படி பணிந்து நடப்பர், வியாபாரத்தில் லாபம், பரீட்சையில் வெற்றி, மனதுக்கேற்ற திருமணம், புத்திரபாக்யம், லாட்டரி சீட்டில் பரிசு, வீட்டில் சண்டை சச்சரவு, நோய் நொடி, கடன் பிரச்சனை முதலான குறைகளிலிருந்து விடுதலை. ஆரோக்கியத்தில் அனுகூலம், நினைவாற்றல் கூடுதல், வேலையில் பதவி உயர்வு, வழக்குகளில் வெற்றி, இழந்த பொருட்கள் திரும்ப கிடைத்தல், இவ்வாறு நாளொருமேனி பொழுதொரு வண்ணம் முன்னேற்றம் அடைந்து எல்லா காரியம் வெற்றியுடன் நடந்து முடியும். இந்த அற்புத சித்த மோதிரம் தற்போது எங்களது ஆசிரம விசே யாகத்தை முன்னிட்டு சில நாட்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பெற விரும்புவோர் பெயர், விலாசம் மற்றும் ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஓர் எண்ணையும் மறக்காமல் எழுதவும். **தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

**N. SUBRAMANI THANTRIC**
**VENKATAPURAM, GUDIYATHAM (VELLORE) - 632 602.**
**PH : 04171 - 229015, CELL : 98653 71667**

ADVT

# சிம்மம்




அன்பான சிம்மஇராசி அன்பர்களே, காலபுருஷ தத்துவத்தின்படி உங்களது இராசி 5வது இராசி. உங்களின் இராசிநாதன் நவகிரகங்களில் நடு நாயகனாக விளங்கும் சூரிய பகவான். சூரியனைப் போன்று சுட்டெரிப்பீர்கள் எதிரிகளைக் கண்டால். உங்களைத் தேடி நாடி வந்த வரை கை கொடுத்துக் காப்பதில் உங்களுக்கு நிகர் நீங்கள் மட்டுமே என்று சொன்னால் அது மிகையாகாது. நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் உங்களின் ப்ளஸ். சுறுசுறுப்பிற்கு மறுபெயர் நீங்கள் மட்டுமே ஏனெனில் சூரியனின் மூல திரிகோண இராசி சிம்மம் என்பதால், சுக்கிரன் உங்கள் இராசிக்கு பகை. எனவே உங்களின் எதிர் பாலினத்தோடு எப்போதும் தகராறுதான். தெய்வ நம்பிக்கை அதிகம் உள்ளவர்களாக இருப்பீர்கள் நீதி நேர்மைக்கு கட்டுப்பட்டவராதலால் தன்னைப் போலவே அனைவரும் நடந்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பீர்கள். இதனால் நெருங்கிய நண்பர்களும் பகையாளியாகும் நிலை உருவாகும். எடுக்கின்ற காரியங்களில் ஓரிரு தடை ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றி என்பது உங்களுக்கே. சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக்கி விடுவீர்கள்.

சனி பகவான் தைரியஸ்தானமாகிய 3ஆம் வீட்டிலிருந்து சுகஸ்தானமான 4ஆம் இடத்திற்கு பெயர்ச்சியாகிறார். இந்த சனிபகவானின் 4ஆம் இட சஞ்சாரத்தால் ஏற்படும் மாறுதல்கள் என்ன என்பதை இனி காணலாம்.

சிம்ம இராசிக்கு சனிபகவான் துலாம் இராசியான 3ஆம் இடத்திலிருந்து, 4ஆம் இடமான விருச்சிக இராசிக்கு வருகின்ற திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக் கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும் வாக்கியப்படி 16.12.2014 அன்றும் பெயர்ச்சியாகிறார். இதுவரை சனிபகவான் தைரியஸ்தானமான 3ஆம் வீட்டில் இருந்துக் கொண்டு உங்களின் தைரியம், புகழ், மாணவர்களுக்கு இளமைக்கல்வி ஆகியவற்றைப் பாதித்து வந்த சனிபகவான் வருகின்ற மேற்படி தேதிகளில் சுகஸ்தானமான 4ஆம் வீட்டிற்கும் பெயர்ச்சியாகின்றார். குருப்பெயர்ச்சியில் ஓரளவு நன்மை கிட்டினாலும், சனிபகவான் 4ஆம் இடத்திற்கு பெயர்ச்சியாவது அர்த்தாஷ்டம சனி என்று அழைக்கப்படும். எனவே சனியின் இந்த பெயர்ச்சி நலமில்லாத நிலையே என்று சொன்னால் அது மிகையாகாது.

சுகத்தில் பாதிப்பு ஏற்படும். சகோதர சகோதரிகளிடையே சொத்துத் தகராறுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு. தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை செலுத்துவது நன்மை பயக்கும். நெருங்கிய உறவினர்களும் பகையாளிகளாக மாறி காட்சியளிப்பர். புதிய வீடு கட்டவோ, வாங்கவோ முடியாது. வண்டி வாகனம் விபத்துக்கு உள்ளாகும் நிலை ஏற்படும். எனவே எதிலும் கவனமுடன் செயல்படுவது நன்மை பயக்கும். 4ஆம் வீட்டில் சனி பகவான் அர்த்தாஷ்டம சனியாக மாறி நலமில்லாத நிலையினையே ஏற்படுத்தும்.

**மதிப்பெண்கள்**

**40 / 100**

அன்னியர் தலையிட்டால் சொந்த தொழில் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படும். கொடுக்கல் வாங்கல் சீர்படும். புதிய நண்பர்கள் சேர்க்கை ஓரளவு மனநிம்மதியை தரும். இருப்பினும் கவனமுடன் செயல்படுவது நன்மை பயக்கும்.

பணியில் உள்ளவர்களுக்கு உடன் பணிபுரிபவர்களிடமிருந்து போட்டி பொறாமை ஏற்படும். மேலதிகாரிகள் ஒருசிலரால் பணி நெருக்கடி ஏற்படும். உடல் அவ்வப்போது வேலை பளுவில் அசதி பெறும். கவனமுடன் செயல்பட்டால் வீண் பிரச்சனைகளைத் தவிர்கலாம்.


மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் என்ற வாக்கிற்கு இணங்க கவனமாக படித்தால் அதிக மதிப்பெண் பெற முடியும். மேற்படிப்பில் சிறுதடைகள் வந்தாலும் கூட வெளிநாடு செல்லும் வாய்ப்பு கைக்கூடும்.

பெண்களுக்கு தொழில் முறையில் முன்னேற்றம் ஏற்படும். குழந்தை பாக்கியம் கூடும். குடும்பத்தில் சமூக உறவு பலப்படும். புதிய வண்டி வாகனம் வாங்குவதில் குழப்பம்

ஏற்படும். தாயின் உடல்நிலையில் அதிக அக்கறை தேவை. உறவினர்களிடையே சுமூக உறவு பலப்பட அனைவரையும் அனுசரித்து செல்வது நல்லது.

## சனி பகவானின் பார்வைப் பலன்கள்

சனி பகவான் 3ஆம் வீடான துலாம் இராசியிலிருந்து அர்த்தாஷ்டமசனியாக 4ஆம் வீடான விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகி இரண்டரை ஆண்டுகள் சஞ்சரிக்க உள்ளார். மேலும் தமது 3,7,10ஆம் பார்வையாக விருச்சிக இராசியிலிருந்து 10ஆம் பார்வையாக தான் இருக்கும் சிம்ம இராசியினையும் 3ஆம் பார்வையாக மகரராசியினையும், 7ஆம் பார்வையாக ரிஷப இராசியினையும் பார்த்து பலன்களைத் தரப்போகின்றார். ஆக 1,6,10 ஆகிய வீடுகளைப் பார்வை செய்கிறார்.




### சனிபகவான் குணத்தைக் குறிக்கும் ஸ்தானமாகிய 1ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

கால புருஷப்படி பூர்வ புண்ணியத்தைக் குறிக்கும் 5ஆம் இடமான சிம்மஇராசியினை சனிபகவானின் தனது முதல் பார்வையாக விருச்சிக இராசியிலிருந்து பார்ப்பதால் தெய்வ அருள் கூடும். குண நலன்களில் மாற்றம் ஏற்படும். தனக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற தலைக்கண எண்ணத்தால் நெருங்கிய உறவினர்களும் பகையாகக் கூடும். எனவே பொது இடங்களில் பேசுவதில் அதிகக் கவனம் தேவை.

### சனிபகவான் 6ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

விருச்சிக இராசியிலிருந்து சனிபகவான் தனது 3ஆம் பார்வையாக மகர இராசியினைப் பார்க்கிறார். 6ஆம் வீடான நோய், கடன், எதிரிகள், வம்பு வழக்குகள் ஆகியவற்றைக் குறிக்கும் வீட்டினை சனிபகவான் பார்ப்பதால் இதுவரை இருந்து வந்த கடன் தொல்லைகள் விலகும். நோய் தொல்லைகள் நீங்கி ஆரோக்கியம் கூடும். வம்பு வழக்குகள் முடிவிற்கு வரும்.

### சனிபகவான் தொழில் ஸ்தானமாகிய 10ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

தொழில் ஸ்தானமான 10ஆம் வீட்டை சனிபகவான் பார்ப்பதால் தொழிலில் மந்தமான சூழ்நிலை உருவாகும். வேலையாட்கள் மூலம் அடிக்கடி இடையூறுகள் ஏற்படலாம். வேலைப்பளு அதிகமாகும். புதிய தொழில் வாய்ப்புகள் தேடிவருவதில் தடைகள் ஏற்படலாம். அதிக கவனம் தேவை.

### சனி பகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் பலன்கள்

ஆறுமுகப் பெருமானின் பிறப்பு நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனி பகவான் **2.11.2014** முதல் **28.11.2014** வரை சஞ்சரிக்கின்றார். எனவே குழந்தை பாக்கியம் தடைபடும். பூர்வீக சொத்துக்களில் வில்லங்கம் ஏற்படும். குலதெய்வ ஆசி குறையும் வண்டி வாகன விபத்துக்கள் ஏற்படும். கண்டங்கள் உருவாகும். எனவே எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது

### சனி பகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் பலன்கள்

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனிபகவான் **27.12.2015** முதல் **24.01.2017** வரை சஞ்சரிக்கின்றார். கண் சம்பந்த நோய்கள் ஏற்பட வாய்ப்பு அதிகம். சொன்ன சொல்லை காப்பாற்ற முடியாமல் தடுமாறுவீர்கள். மாணவர்களுக்கு இளமைக்கல்வி தடைபடும். இலாபங்கள் குறைந்து நஷ்டங்கள் அதிகமாகும்.

### சனி பகவான் அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் பலன்கள்

சனிபகவான் தன் சொந்த நட்சத்திரமான அனுஷ நட்சத்திரத்தில் **29.11.2014** வரை **26.12.2015** வரை சஞ்சரிக்கின்றார். நண்பர்களும், எதிரிகளைப் போன்று காட்சியளிப்பார். கணவன் மனைவிக்கு இடையே ஒற்றுமை குறைந்து காணப்படும். முன்பின் தெரியாதவர்களுக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்க்கவும். கூட்டுத் தொழிலில் கருத்து வேறுபாடு உருவாகும்.

## சனி வக்ரப் பலன்கள்

### 15.3.2015 முதல் 2.8.2015 வரையும், 26.3.2016 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கரத்தில் சஞ்சரிக்கின்றார்.

உங்கள் இராசிக்கு 6.7க்கு அதிபதியான சனிபகவான் களத்திரம் மற்றும் வம்பு, வழக்கு விபத்தினை குறிக்கும் ஸ்தானத்தின் அதிபதி 4இல் வக்கிரம் அடைகின்றார். எனவே குடும்பத்தில் மகிழ்ச்சி குறையும். வியாபாரம், வீடு மாற்றங்கள், உடல்நிலை ஆகியவற்றில் அதிக அக்கறை தேவை. எதிரிகளை இணங்கண்டுக் கொள்ள வைப்பார். கொடுக்கல் வாங்கலில் பிரச்சனைகள் ஏற்படும்.

சிம்ம இராசிக்கு 4ஆம் இடமான சுகஸ்தானத்தில்

*சனி பகவான் வந்து அத்தார்ஷ்டமச் சனியாக சஞ்சாரம் செய்வதால் ஏராளமான தடைகள் ஏற்படும். எனவே சிம்ம இராசியினர் நலமாக வாழ வேண்டும் என்பதற்காக சூரிய ஹோரையில் சிம்மம் வைத்து பூஜித்து ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. பின் வரும் பாடல் வந்தது.*

**"சிங்கமது தனது**
**சுகத்திலே மந்தன்**
**சஞ்சாரம் செய்யும்**
**சமயமது சமயம்**
**சுகம் கெடும் யோகம்**
**மண்ணோடு மனையும்**
**யோகமது காணாது**
**வண்டியது வாகன**
**சேர்க்கையது ஆகாது**
**தாய்மீதும் கவனம்**
**தன் மீதும் கவனம்**
**உத்தியோகம் தன்னில்**
**உயர்வான கவனம்**
**அதுவேணும் முறையான**
**பரிகாரம் தேடு என்பேன்**
**ஆசி!**

**பொருள்:** *சிம்ம இராசிக்கு 4இல் சஞ்சரிக்கும் சனி சுகத்தைக் கெடுக்கும். வீடு, வாகனம், நிலம் போன்றவற்றால் வருகின்ற ஆதாயம் குறைக்கும். தாய் மீதும், தனது உடல் ஆரோக்கியத்தின் மீதும் அதிக அக்கறை தேவை. முறையான பரிகாரம் தேட வேண்டும் என்று ஜீவநாடியில் முருகப்பெருமான் உரைத்தார்.*

## பரிகாரம்

### மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்

*மகம் நட்சத்திரம் அன்று ஸ்ரீ வாராஹிவை பூஜித்து ஜபம் செய்து ஹோமம் செய்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது அதன் பாடல்*

**"வகுத்ததொரு நிலையாக**
**வாழ்கின்ற முறையாக**
**வசதிகள் பெருகிடவும்**
**வளங்கள் கூடிடவும்**
**சேவிக்க வேண்டுமது**
**செங்கோட்டு வேலனை**
**சரியாக மூன்று முறை**
**சஷ்டியன்றே**
**சிறப்பான வாழ்வும்**
**சீரான செல்வமும்**
**தேடிவரும் நாடி வருமே!**
**ஆசி!"**

**பொருள்:** *திருச்செங்கோடு சென்று அங்குள்ள செங்கோட்டு வேலனை மூன்று முறை சஷ்டி திதியில் வழிபட்டு வர சிறப்பான வாழ்வு அமையும் என்கிறது ஜீவநாடி அனுபவத்தில் 100% இதை உணர முடியும்!*

### பூரத்தில் பிறந்தவர்களுக்கு

*பூரம் நட்சத்திரம் அன்று சுக்கிர ஹோரையில் நாடி கேட்கப்பட்டது அதன் பாடல்*

**"வகையருளும் முறையான**
**வளமான வேல் உண்டு**
**ஈறாரு பன்னிரண்டும்**
**வேறொரு ஒன்றும் சேர**
**பதினெட்டு அடியாக**
**வேல் உண்டு அந்தியது**
**சாயும் ஊர் அருகே**
**உண்டு ஆலயம் அங்கு**
**எட்டான இரவு எட்டு**
**திங்கள் மூவான ஒன்பது**
**முழு சுற்றி சுற்றி வந்து**
**சேவிக்க சிறப்பான**
**வாழ்வு நிச்சயமாம்**
**சத்தியம்"**

**பொருள்:** *ஈரோடு மாவட்டம் பவானி அருகில் அந்தியூர் உள்ளது. அங்கிருந்து புதுக்காடு எனும் கிராமம் விலலங்குட்டை எனும் ஊரில் ஸ்ரீ ஞான ஸ்கந்த மூர்த்தி ஆலயம் உள்ளது. மலைக்காரன் தோட்டம் எனும் பகுதியில் உள்ளது. அங்கு 18 அடி வேல் உள்ளது. அந்த ஆலயத்தை எட்டு அமாவாசையை தவறாமல் 27முறை சுற்றி வழிபட வழிபட அனைத்து கர்ம வினைக்கும் தீர்ந்து சிறப்பான வாழ்வு அமையும் என்பது 100% சத்தியம்.*

### உத்திரம் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்

*உத்திரம் நட்சத்திரம் அன்று சூரிய உதயத்தில் நாடி படிக்கப்பட்டது. அதன் பாடல்*

**"உறுதியான நலமும்**
**உயர்வான வாழ்வும்**
**உண்டுண்டு ஆனாலும்**
**கோள்சாரம்**
**குணமில்லை**
**என்பதால் குணமுடன்**
**சென்று சேவிக்க**
**வேண்டுமது**
**கொல்லூரில் உள்ள**
**மூகாம்பிகை தன்னை**
**ஒருமுறையாகவே**
**நலமாகும் நலம்**
**ஜெயமாகும் ஜெயம்**
**சுபமாகுமே சுபம்"**

**பொருள்:** *கொல்லூர் மூகாம்பிகையை ஒருமுறை சென்று தரிசனம் செய்து வர 100% அற்புத மாற்றம் வரும் என்று ஜீவநாடி சொல்கிறது. கர்நாடக மாநிலம் மங்களூர் அருகில் உள்ளது கொல்லூர்*

**கனகதாரா வெல்த் கிரியேட்டர்ஸ்** பெருமையுடன் வழங்கும்

# செல்வ வளம் கொழிக்கும் ரகசிய சூட்சுமங்கள் சிறப்புப் பயிற்சி

1. திருமகளின் கருணைப் பார்வையை அடையும் பொருட்டு நீங்கள் செய்ய வேண்டிய செயல்பாடுகள் பற்றிய அபூர்வ செய்திகள்.
2. நீங்கள் உங்களது தினசரி செயல்பாடுகளில் உங்களுக்குத் தெரியாமல் செய்யும் சிறுசிறு தவறுகளினால் செல்வத் திருமகள் உங்களை விட்டு விலகிச் செல்வது உங்களுக்குத் தெரியுமா? அவற்றை அறிந்து திருத்திக் கொள்ள வேண்டாமா?
3. கடன்காரர்களையும், கோடீஸ்வரர்களாக்கும் மூல இரகசிய சித்த சூட்சுமங்களை அறிவீர்களா? எந்தெந்த காலங்களில் எந்தெந்த ஆலயங்களில், எவ்வாறு வழிபாடு செய்தால் நீங்கள் குபேரனாக வாழலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?
4. மனோரீதியாக நீங்கள் முழுமையான செல்வ வளத்தினை அடையும் பொருட்டு செய்ய வேண்டிய பயிற்சி பற்றி நீங்கள் அறிவீர்களா?
5. **தீபாவளிக்கு மறுநாள் வரும் பிரதமைதிதியின் போது செய்யும் குபேர பூஜையின் ரகசியத்தினையும், அதன் மகத்துவத்தினையும் அறியும் ஆவல் உள்ளவரா நீங்கள்?**
6. ஒரு வருட கால அவகாசத்திற்குள் பொருளாதாரத் தன்னிறைவை அடையும் ஆசை கொண்டவரா நீங்கள்? ஆம் எனில் இப்பயிற்சியில் அவசியம் கலந்து கொள்ளுங்கள்.

**முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படும்**

பயிற்சி அளிப்பவர்: **பிருகு. பிரபாகரன்,** பழநி - 99422 08349

## பயிற்சி கட்டணம் : ரூ.1500/ மட்டும்.

(பயிற்சி குறிப்பேடு, முதல்நாள் வருபவர்களுக்கு இரவு தங்குமிடம், இருவேளை தேனீர், மதிய உணவு உட்பட)

பயிற்சி நேரம்: **காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை.**

**திருப்பூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் சலுகை கட்டணத்தில் இப்பயிற்சியை பெற உடனே ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொண்டு அவசியம் முன் பதிவு செய்யவும்.**

| திருப்பூர் | சென்னை | திருச்சி |
|---|---|---|
| **21.09.2014** - ஞாயிறு<br>**காமாட்சி அம்மன் திருமண மண்டபம்**<br>பழைய பஸ் ஸ்டாண்ட் பின்புறம், திருப்பூர் | **05.10.2014** - ஞாயிறு<br>**ஆஷா நிவாஸ்**<br>9, ரட்லேண்ட் கேட் 5வது தெரு, தாஜ்கோரமண்டல் ஹோட்டல் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை – 600 006 | **12.10.2014** - ஞாயிறு<br>**ரவி மினி ஹால்**<br>24, கரூர் பைபாஸ் ரோடு, கலைஞர் அறிவாலயம் அருகில், சத்திரம் பேருந்து நிலையம் திருச்சி – 2 |
| ஒருங்கிணைப்பாளர்<br>திரு **எஸ்.சுந்தரராஜன்**<br>**97894 52737** | ஒருங்கிணைப்பாளர்<br>பிருகு. **பிரபாகரன்**<br>**99422 08349** | ஒருங்கிணைப்பாளர்<br>திரு **ஆர். குமார்**<br>**94433 27046** |

குறிப்பு: 1. நபர் ஒருவருக்கு பயிற்சிக் கட்டணம் ரூ.1500/ மட்டும்
2. 13 வயதிற்கு குறைவான குழந்தைகளுக்கு பயிற்சிக்கு அனுமதி இல்லை.
3. நிகழ்ச்சியின் இறுதியில் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு அற்புதப் பரிசு உண்டு. அந்த குறிப்பிட்ட அதிர்ஷ்டசாலி நீங்கள் தானே!!




அன்பான கன்னி இராசி அன்பர்களே, புதன் உங்களின் இராசி நாதன் அதனால் வசீகரித்து இழுக்கும் வன்மை உங்களுக்கே உரியது என்றால் மிகையாகாது. புதனின் ஆதிக்கத்தால் அமைதி கொண்டு எளிமையாக எவரிடமும் பழகும் விதம், அறிவுப் பூர்வமாக சந்தித்துச் செயல்படும் பாங்கு, எந்தவொரு விஷயம் பற்றிக் கேட்டாலும் அதைப்பற்றி விரிவாக தெரிந்து வைத்திருக்கும் அறிவு, புத்திசாலித்தனம், நகைச்சுவை கலந்த பேச்சு, நயவஞ்சகம் செய்வோரை எளிதில் இணம்கண்டு விடும் அறிவு சமயோஜித புத்தி, புத்தகத்தின் மீது இனம் புரியாத ஆர்வம் இப்படி புதனின் ஆதிக்கம் பெற்று விளங்கும் கன்னி இராசி நண்பர்களே, நடைமுறை விஷயங்கள் அனைத்தையும் மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்வதில் அதிக ஆர்வம் உள்ளவர்களாகத் திகழ்வீர்கள். அடுத்தவரை கஷ்டப்படுத்தும் நிலையினை எண்ணி மனம் வருந்தும் மனப்பாங்கு உடையவர்கள் நீங்கள் குறித்த வேலையினை குறித்த நேரத்தில் முடிக்கும் மனப்பாங்கு கொண்டவர்கள் நீங்கள்

| மதிப்பெண்கள் |
| --- |
| 80 |
| 100 |

பொன்னவன், தேவன், வேந்தன் என்று போற்றப்படும் குரு பகவான் உங்கள் இராசிக்கு முழுப்பலனைக் கொடுத்தாலும் சனி பகவான் இதுவரை உங்கள் இராசிக்கு 2ஆம் வீடான குடும்பஸ்தானத்திலிருந்து பெயர்ச்சியாகி, தைரியஸ்தானமான 3ஆம் வீட்டிற்கு பெயர்ச்சியாகின்றார் 7½ சனி விலகி நன்மை பயக்கும் இக்காலத்தில் சனியின் இந்த 3ஆம் இட சஞ்சாரத்தில் இலாபங்கள் என்ன? பார்வை பலன்கள் என்ன எனக் காணலாம்.

சனி பகவான் 2ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து 3ஆம் இடமான விருச்சிக இராசிக்கு வருகின்ற திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும், வாக்கியப்படி 16.12.2014 அன்றும் தைரியஸ்தானம் என்று போற்றப்படும் 3ஆம் வீட்டிற்கு பெயர்ச்சியாகிறார்.

குடும்பஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சரித்த சனி பகவான் குடும்பத்தில் சச்சரவுகள், கல்வியில் தடுமாற்ற நிலை, வாக்கிலே தெளிவின்மை, மனதில் சஞ்சலங்கள் போன்ற பிரச்சனைகளைக் கொடுத்து வந்த சனிபகவான் இனி தைரியம், புகழ், கீர்த்தி, ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமான 3ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சியாகின்றார். இதுவரை இருந்து வந்த பிரச்சினைகளை ஓரளவு தைரியத்துடன் எதிர் கொள்வீர்கள். பிரச்சனைகள் குறையும். மனதிலே தெளிவு ஏற்பட்டு சுயமாக சிந்தித்து முடிவுகளை எடுப்பீர்கள். விலகி சென்ற நண்பர்கள் நெருங்கி வந்து நட்பு பாராட்டுவார்கள். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். தொழிலில் விருத்தி ஏற்படும். பணத் தட்டுப்பாடுகள் குறையும்.

சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு தொழிலிலே அதிக முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் நெருங்கி வருவார்கள். புதிய தொழிற் தொடங்க அரிய வாய்ப்புகள் தேடி நாடி வரும். வேலையாட்களிடமிருந்து வேண்டிய ஒத்துழைப்பு கிடைக்கும். பணத்தட்டுப்பாடு நீங்கி அதிக இலாபம் கிடைக்க வழிவகை ஏற்படும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும்.


பணியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் நேரம் இது. பலரும் தேடி வந்து உதவுவார்கள். சக ஊழியர்கள் நட்புடன் உதவ முன்வருவார்கள். வேண்டிய இடத்திற்கு மனதிற்கு பிடித்தவாறு பணி மாற்றம் கிடைக்கும். பணவரவு உண்டாகி புதிய வண்டி, வாகனச் சேர்க்கை ஏற்படும்.

கலைத்துறையில் உள்ளவர்களுக்கு இது பொன்னான காலம் என்றே கூறலாம். இதுவரை தடைபட்டு வந்த தொழிலில் முன்னேற்றமே மேலோங்கி நிற்கும். பலராலும் புகழ்ந்து பேசப்படுவீர்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் சிறுசிறு தடைகள் ஏற்படும். இருப்பினும் அதிக முயற்சி செய்தால் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள் பள்ளியில் நடைபெறும் போட்டிகள் ஆகியவற்றில் நீங்களே முதலிடம் பெறுவீர்கள். தெய்வ நம்பிக்கை கை கொடுக்கும். தேர்வு நேரங்களில் உடல் நலக்குறைவு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். எனவே கவனம் தேவை.


பெண்களுக்கு குழந்தைப் பேறு உண்டாகும்.

இதுவரை தடைபட்டு வந்த திருமணங்கள் இனி தடையில்லாமல் மனதிற்கு ஏற்றவாறு அமையும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். கணவன், மனைவியிடையே அன்பு கிடைக்கும். சொத்துக்கள், வீடுகள் வாங்கி மகிழ்வீர்கள். சகோதரர்கள், சகோதரி வழியே நல்ல ஆதாயம் கிடைக்கப்பெற்று மகிழ்வீர்கள். குடும்பத்துடன் குலதெய்வ வழிபாடு செய்து மகிழ்வீர்கள்.



## சனி பகவானின் பார்வைப் பலன்கள்

சனி பகவான் 2ஆம் வீடான துலாம் இராசியிலிருந்து 3ஆம் வீடான விருச்சிக இராசிக்கு இடம் பெயருகின்றார். மேலும் சனி பகவானின் பார்வைகள் 3,7,10 முறையே கன்னி இராசியிலிருந்த சனி பகவான் 5ஆம் இடமான மகர இராசியினையும், 9ஆம் இடமான ரிஷப இராசியினையும், 12,11ஆம் இடமான சிம்ம இராசியினையும் பார்வையிடுகின்றார். சனி பகவான் நவிலும் பலன்கள் என்னவென்று இனிக்காணலாம்.




**சனி பகவான் 5ஆம் பார்வையாக பூர்வ புண்ணிய ஸ்தானத்தைப் பார்பதால் ஏற்படும் பலன்கள்**

பூர்வ புண்ணிய ஸ்தானமான 5ஆம் இடத்தை உங்கள் இராசியிலிருந்து, மகர இராசியினை பார்வையிடுகிறார். இதனால் பூர்வீக சொத்தில் பிரச்சனைகள் மற்றும் வில்லங்கமும் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். நீண்ட நாட்களாக குழந்தையில்லாமல் இருப்பவர்களுக்கு குழந்தைப்பேறு உண்டாகும். குலதெய்வ வழிபாடு ஓரளவு பிரச்சனையிலிருந்து விலக உதவும். உறவினர்கள் ஒத்துழைப்பு கொடுக்கும்.

**சனிபகவான் 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்**

சனி பகவான் 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தை பார்ப்பதால் தடைப்பட்டு வந்த திருமணங்கள் கைகூடும். கூட்டுத்தொழிலில் அதிக இலாபம் ஏற்படும். நண்பர்கள் வழியில் உதவி கிடைக்கப்பட்டு மகிழ்வீர்கள். பக்தியில் முன்னேற்றம் உருவாகும். பித்ருக்கள் ஆசி கிட்டும்.

**சனிபகவான் 12ஆம் இடமான விரைய ஸ்தானத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்**

விரையம், தூக்கம், வெளிநாடு ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமான 12ஆம் வீட்டை சனிபகவான் பார்ப்பதால் தொழிலில் நல்ல இலாபங்கள் கிடைக்கப்பெறும். மனதில் இருந்த கவலைகள் நீங்கி தெளிவு பிறக்கும். சிலருக்கு வெளிநாடு மற்றும் வெளியூர் சம்பந்தமான இடம் மாற்றம் கிடைக்கப்பெற்று மகிழ்வார்கள்.

**சனிபகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

குருவின் நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனி பகவான் **20.11.2014** முதல் **28.11.2014** வரை சஞ்சரிக்கின்றார். கடன் தொல்லை அதிகரிக்கும். வண்டி ,வாகனம் விபத்துக்களும் சகோதரர்கள் வகையில் சொத்துப் பிரச்சனை உருவாகும். விரும்பியவர்களும் விலகிச் செல்லும் நிலை உருவாகும்.

**சனி பகவான் அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

சனியின் நட்சத்திரமான அனுசம் நட்சத்திரத்தில் சனிபகவான் **29.11.2014** முதல் **26.12.2015** வரை சஞ்சரிக்க உள்ளார். சுகம் கூடும். புத்திரபாக்கியம் உண்டாகும். வண்டி, வாகனச் சேர்க்கை உண்டாகும். பூர்வீகசொத்துக்களில் உள்ள தகராறுகள் நீங்கும்.

**சனிபகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

**27.12.2015** முதல் **24.01.2017** வரை சனிபகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம். விரையங்கள் குறையும். பக்தி கூடும். பாரினில் பல நல்ல வாய்ப்புகள் தேடி வரும். படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்கும். நித்திரை சுகம் கூடும்.

## சனி வக்ரப் பலன்கள்

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2015 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கின்றார்.**

உங்கள் இராசிக்கு 5,6க்கு அதிபதியான சனி பகவான் பூர்வ புண்ணிய மற்றும் நோய் எதிரிகள் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானத்தின் அதிபதி இரண்டுமுறை வக்கிரம் அடைகின்றார். எனவே இக்கால கட்டத்தில் வண்டி, வாகன சேர்க்கை கூடாது. சொத்துக்களில் வில்லங்கம்

ஏற்படும். வியாபாரத்தில் நஷ்டங்கள் அதிகரிக்கும். புத்திரர்களால் ஒருசில இடையூறு ஏற்படும்.

கன்னி இராசிக்கு சனி பகவான் தனது 7½ சனி தாக்கத்தைப் பூர்த்தி செய்துக்கொண்டு 3ஆம் இடமான முயற்சி ஸ்தானத்திற்கு செல்வது எப்படி இருக்கும் என அம்பாளை பூஜித்து சௌந்தர்யலகரி பாராயணம் செய்து ஸ்ரீ ஞான ஸ்கந்தர் ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது வந்த பாடல்

**மாந்தியின் தந்தையவன்**
**மகிழ்ந்து மூன்றிலே**
**முந்தி வரும் காலமது**
**முழுதும் நட்பாம்**
**பெயர் கிட்டும், புகழ்கிட்டும்**
**புண்ணியமதுவும் கிட்டும்**
**புவனமதில் பல வெற்றி**
**பூரிப்பாய் கிட்டுமது**
**பிரியமான வாழ்வாம்**
**பூரண நலமதாம்**
**பக்குவம் உண்டாகும்**
**பரிசுத்தம் உருவாகும்**
**வெற்றியது வெற்றியே!**
**ஆசி!ஆசி!ஆசி!**

**பொருள்:** மாந்தியின் தந்தையான சனிபகவான் மகிழ்ச்சியாக 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் நேரம் முழுமையான நட்பான பலன்களைத் தரும். நல்ல பெயர் ஏற்படும். எல்லாவற்றிலும் புகழ்கூடும். செய்கின்ற காரியங்களில் புண்ணியம் கூடும். இந்த உலகத்தில் எடுக்கின்ற காரியங்களில் வெற்றி ஏற்படும். மனதிற்கு மகிழ்ச்சியான வாழ்வு ஏற்படும். பரிபூரண நலம் கிட்டும். அனுபவம் அதிகமாக பக்குவம் உண்டாகும். பரிசுத்தம் உருவாகும். மொத்தத்தில் வெற்றியும் இறைவனின் ஆசியும் ஏற்படும் என முருகப்பெருமான் ஜீவ நாடியில் உரைத்தார்.

## பரிகாரம்

### உத்திரம் 2,3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

உத்திரம் நட்சத்திரம் சூரிய உதயத்தில் ஜீவநாடியில் பரிகாரம் கேட்கப்பட்டது. அந்த பாடல்

**"இன்பமுடன்**
**இனிமையது**
**இன்னுமதுஓங்க**
**இளையனார் வேலூரும்**
**சென்று வர வேண்டுமது**
**வேலுண்டு வேலனுண்டு**
**சுவாமிநாத சித்தருண்டு**
**சேவித்துவா மாற்றம் பல**
**வரும் மகிழ்ச்சி வரும்**
**மலர்ச்சியது வருமே!"**

**பொருள்:** காஞ்சிபுரத்தில் உள்ள இளையனார் வேலூர் என்கிற ஆலயத்தை தரிசனம் செய்ய வேண்டும். அங்கு வேல் விழுந்த இடத்தில் கல் வேல் உண்டு. முருகன் உண்டு. சுவாமிநாதசித்தர் சமாதியும் உண்டு. வழிபட்டு வர வாழ்வில் 100% வளம் ஏற்படும் என்கிறது ஜீவநாடி.

### அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்

அஸ்தம் நட்சத்திரத்தன்று சூரிய உதய காலத்தில் நாடி படிக்கப்பட்டது. அப்போது உதித்த பாடல்

**"தப்பாமல் வாழ்வு**
**தரணிதனில் உயரும்**
**தரமாகும் வாழ்வு**
**முறையாகும் பாரு**
**மூன்று முறை சென்று**
**முழுமையாய் சேவி**
**முன்னோர்கள் ஆசியால்**
**முழு நன்மை கிட்டும்**
**நீரான ஸ்தலத்தில் உள்ள**
**நிம்மதி தெய்வம்**
**அச்சம் நீக்கும்**
**அகிலாண்டநாயகியை**
**அன்புடன் சேவி ஆசி!"**

**பொருள்:** திருச்சி — திருவானைக்காவில் உள்ள வாராகி அம்சமான அகிலாண்டேஸ்வரியையும் ஜெம்புகேஸ்வரர் சுவாமியையும் மனதிற்கு பிடித்த நாளில் மூன்று முறை சென்று வழிபட முழு நன்மை 100% கிட்டும் என்கிறது ஜீவநாடி பாடல்.

### சித்திரை 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

செவ்வாய்க் கிழமை செவ்வாய் ஹோரையில் சஷ்டிக் கவசம் 36 முறை பாராயணம் செய்து நாடி படிக்கப்பட்டது. அப்போது உதித்த பாடல்

**அல்லலது நீங்கும்**
**ஆனந்தம் கிட்டும்**
**இன்பம் ஓங்கும்**
**இனிமையது கிட்டும்**
**உண்மையிது பாரு**
**வமைபாலன் கூற்று**
**உத்தமர் கோவிலை**
**உள்ளன்போடு**
**ஒன்பது முறை சேவி"**

**பொருள்:** சித்திரை நட்சத்திரம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் திருச்சி டோல்கேட் அருகில் உள்ள உத்தமர் கோவிலை ஒன்பது முறை மனதிற்கு பிடித்த நாளில் வழிபட வேண்டும். வாழ்வில் இதுவரை இருந்து வந்த அல்லல்கள், அவலங்கள், தொல்லைகள், துயரங்கள் தொலைதூரம் ஓடி தூய வாழ்வு ஏற்படும். இந்த ஆலயத்தில் 1/2 மணி நேரம் யார் அமர்ந்து தியானம் செய்தாலும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரனின் பரிபூரண ஆசிக்கு பாத்திரமாவார்கள். என்பது ஜீவநாடி வாக்கு இதை அனுபவத்தில் 100% உணரலாம்.




அன்பான துலாம் இராசி அன்பர்களே, உங்கள் இராசிநாதன் சுக்கிரன், உங்கள் இராசியிலேயே சனி உச்சம் என்பதால் அளவு அறிந்து செயல்படுவீர்கள். நீதியையும், நேர்மையையும், நிலைநாட்ட அதிக அளவில் பாடுபடுவீர்கள். வசீகரித்து இழுக்கம் திறமையும், கவர்ச்சியான பேச்சாற்றலும் கொண்டவர்களாகத் திகழ்வீர்கள். எவ்வளவு பெரிய சோகமாக இருந்தாலும் கூட முக மலர்ச்சியோடு காணப்படும் பாவனையே உங்களது ப்ளஸ். வாக்கு சாமர்த்தியம் கொண்டு திகழ்வீர்கள். தோல்விகளைக் கண்டு துவலாதவர்கள். தெளிவான எண்ணம் கொண்டவர்கள். முற்போக்கு சிந்தனையாளர்கள். உங்கள் இராசி தராசு தட்டுக்களை ஏந்திய அடையாளம் கொண்ட இராசி. எனவே நீதி வழங்குவதில் நேர்மையாக செயல்படுவீர்கள். ஆய கலைகள் 64லும் அனைத்துக் கலைகளையும் தெளிவாக கற்றுத் தேர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் நீங்கள் கலை, ஓவியம், கவிதை, நடனம் ஆகியவற்றை கண்ணியமாக இரசிக்கும் பாங்கு கொண்டவர்களாகத் திகழ்வீர்கள்.

சனிபகவான் கடந்த ஆண்டுகள் மற்றும் இனிவரும் 5 ஆண்டுகளும் சேர்த்து 7½ சனியாக உங்கள் இராசியில் சஞ்சரிக்கப்போகின்றார். சனி பகவான் உங்கள் ஜென்ம இராசியிலிருந்து 2ஆம் வீடான விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகின்றார். கடந்த ஆண்டுகளை விட பாத சனி தொடங்குகின்ற இந்த காலத்தில் ஓரளவு முன்னேற்றம் வருமா? மாற்றம் வருமா? என இனி காணலாம்.

சனிபகவான் ஜென்ம இராசியான துலாம் வீட்டிலிருந்து 2ஆம் இடமான விருச்சிக இராசிக்கு திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும் வாக்கியப்படி 16.12.2014 அன்றும் பெயர்ச்சியாகின்றார்.

துலாம் இராசிக்கு சனி பகவானால் இந்த 7½ ஆண்டுகளும் நலமில்லாத நிலையே என்று சொன்னால் அது மிகையாகாது. கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட துன்பங்கள் குறைந்த நிலையிலும் இந்த சனிபகவானின் இடமாற்றத்தால் ஓரளவு மட்டுமே நற்பலன்களை எதிர் பார்க்க முடியும். உடல் நலனில் அதிகக் கவனம் தேவை. மருத்துவச் செலவு அதிகரிக்கும். ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சை செய்யும் நிலை ஏற்பட்டாலும் ஐயமில்லை. வீண் அலைச்சல் உருவாகும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை குறையும். கொடுத்த வாக்கினை காப்பாற்ற முடியாமல் தடுமாற்றம் அடைவீர்கள்.

சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு தொழிலில் எதிர் பார்த்த அளவு முன்னேற்றம் கிடைப்பது கஷ்டம். பொருளாதார பற்றாக்குறை ஏற்படும். எனவே புதிய முயற்சிகள் சற்று தாமதமாக எடுப்பது நன்மை பயக்கும். கொடுக்கல் வாங்கலில் பகை ஏற்படும். வியாபாரத்தில் முன்னேற அதிக அளவில் போட்டிகளைச் சமாளிக்க நேரிடும்.

**மதிப்பெண்கள்**
**40/100**


பணியில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் உருவாகும். நித்திரை சுகம் கெடும். பணியில் நேர்முக மறைமுக எதிர்ப்புகள் உருவாகலாம். வெளிநாட்டில் இருந்து பல நல்ல தகவல்கள் வரும். கூட்டு வழிபாட்டில் கலந்துக் கொள்வது பல நன்மையினைத் தரும்.

மாணவர்கள் உடனுக்குடன் பாடங்களைப் படிக்காவிட்டால் தேர்வுக்கு சிரமப்படுவர். மாணவர்கள் ஆசிரியரும் சுமூக போக்கு இருந்தால் தான் படிப்பில் நன்மை ஏற்படும். சில தீய நண்பர்களின் சேர்க்கை உங்களைச் சிரமத்தில் மாட்டிவிடலாம். படிக்கும் நேரத்தில் அணுவளவும் நேரத்தை வீணாக்கக் கூடாது.

குடும்ப பெண்கள் தங்கள் உடல்நலத்தை சரிவர கவனித்துக் கொள்ள வேண்டும். எடுத்த காரியத்தை சிரமத்துடன் முடிக்க முடியும். குடும்ப செலவுக்கே தேவையான பணம் கிடைக்கும். ஆடம்பர பொருள் வாங்குவதை தவிர்க்கவும். இதனால் கடன் தொல்லை குறையும். பணி புரியும் பெண்களைக் கடுமையான வேலை சிரமம் படுத்தும்.

## சனிபகவானின் பார்வைப் பலன்கள்

*சனி பகவான் துலாம் இராசியிலிருந்து 2ஆம் இடமான விருச்சிக இராசிக்கு மேற்படி தேதிகளில் இடம் பெயருகின்றார். மேலும் சனிபகவான் பார்வைப் பலன்களாக முறையே 4ஆம் வீடான மகர இராசியினையும் 8ஆம் இடம் வீடான ரிஷப இராசியினையும், 11ஆம் இடமான சிம்ம இராசியினையும் பார்வையிடுகின்றார்.*




**சனி பகவான் சுகஸ்தானமாகிய 4ஆம் வீட்டை பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்**

*சுகம், வண்டி வாகனம், வீடு, வியாபாரம் உறவினர் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமாகிய 4ஆம் வீட்டை பார்ப்பதால் சுகம் கெடும். வியாபாரத்தில் அதிக போட்டி பொறாமைகளும் கஷ்டத்தையும் ஏற்படுத்தும். சகோதரர்களின் மூலம் ஒரு சில ஆதாயங்கள் கூடிவரும். சிறுசிறு பிரயாணங்கள் மூலம் நல்ல வருமானங்கள் கிடைக்கும்.*

**சனி பகவான் ஆயுள் ஸ்தானமான 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்**

*விபத்து, கண்டம், வழக்கு ஆகியவற்றைக் குறிக்கின்ற ஸ்தானத்தை சனி பகவான் பார்ப்பதால் ஓரளவு நன்மையே கெட்டவர் கெட்டிடில் நன்மையே என்ற ஜோதிட மொழிக்கு ஏற்ப ஆயுளில் ஆரோக்கியம் கூடும். வம்பு வழக்குகள் இழு பறியில் இருந்தது முடிவுக்கு வரும். வண்டி வாகன சேர்க்கை ஏற்படும்.*

**சனிபகவான் இலாபஸ்தானமான 11ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்**

*சனி பகவான் இலாபம், சகோதர உறவுகள், ஆகியவற்றை குறிக்கும் ஸ்தானமான 11ஆம் வீட்டை பார்ப்பதால் தொழிலில் மந்த நிலை ஏற்படும். விவசாயத்திற்காக விண்ணப்பித்த கடன் தொகை கிடைக்கும். சாகுபடி செலவு அதிகரிக்கும். வீடு, மனைகள் வாங்கவும், விற்கவும் உரிய காலம் அன்று. ஆள் பற்றாக்குறை ஏற்பட்டு தொழிலில் பிரச்சனை ஏற்படும். சிக்கனத்தைக் கடைபிடித்து பணத்தட்டுப்பாட்டைக் குறைக்கலாம்.*

**சனிபகவான் விசாக நட்சத்திரத்தில சஞ்சரிக்கும் காலம்**

*குருவின் நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனிபகவான்* **2.11.2014** *முதல்* **28.11.2014** *வரை சஞ் சரிக்கிறார். பூர்வீக சொத்துக்கள் தேடிவரும். குலதெய்வ ஆசி கிட்டும். கூட்டுத்தொழில் சிறக்கும். நண்பர்கள், உறவினர்கள் தேடி, நாடி உதவி புரிவார்கள். தாயின் உடல் ஆரோக்கியத்தில் சீரான மாற்றம் வரும்.*

**சனிபகவான் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

*சனியின் நட்சத்திரமான அனுசம் நட்சத்திரத்தில்* **29.11.2014** *முதல்* **26.12.2015** *வரை சஞ்சரிக்க உள்ளார். மந்திர சித்தியது கிடைக்கும். எதிரிகளை இனம் காணும் வாய்ப்பு ஏற்படும். நோய்கள் நீங்கும். மருத்துவ செலவுகள் குறையும். குலதெய்வ ஆசி கிட்டும்.*

**சனிபகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**

**27.12.2015** *முதல்* **24.01.2017** *வரை புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலம். புகழ் ஓங்கும். தொழில் விருத்தியாகும். ஆரோக்கியம் கூடும். பொதுக்காரியங்களில் வெற்றி கிட்டும். அரசியல் அனுகூலம் கிடைக்கும்.*

## சனி வக்ரப் பலன்கள்

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2015 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ் சரிக்கின்றார்.**

*உங்கள் இராசிக்கு 4,5க்கு அதிபதியான சனி பகவான் மேற்கண்ட இரண்டு முறை வக்ரத்தில் சஞ்சரிக்கிறார். சனிபகவான் சுகஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தின் அதிபதி 2இல் வக்ரம் அடைகின்றார். சக ஊழியர்கள் தொல்லை தருவார்கள் சிலருக்கு நிலையான வேலை கிடையாது. வீண் அலைச்சல் விரயம் செலவு உண்டாகும். வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படும். புதிய முயற்சி முற்றிலும் தவிர்க்க வேண்டும். எதிரிகளால் மனபாதிப்பு உண்டாகும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்க தடை ஏற்படலாம்.*

*துலாம் இராசிக்காரர்களுக்கு 2இல் சஞ்சரிக்கும் சனிபகவான் 7½ சனியாக உள்ளார். எனவே அந்த 7½ சனியாக உள்ளார். எனவே அந்த ½ சனியின் தாகத்தில் இருந்து விடுபட துலாம் இராசிக்காரர்கள் நலமுடன் வாழ சுக்கிர ஹோரையில் இலஷ்மி தேவியை பூஜித்து ஸ்ரீ சூக்தம் பாராயணம் செய்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது உதித்த பாடல்*

**"மந்தனது நிலையது**
**மகிழ்ச்சி தராத காலமிது**
**மனமகிழ்ச்சி குறையும்**
**மணவாழ்வு கெடும்**

**மக்களால் தீது**
**மாசு உண்டு**
**உழைப்பு வீண்**
**அலைச்சலது திரிச்சல்**
**அடுக்கான துன்பம்**
**என்றாலும் ஆசி**
**உண்டுஎன்பதாலே**
**உற்றதொரு பரிகாரம்**
**உரியமுறை தேடு**
**உத்தமமாய் வாழ்வு**
**உறுதியாய் மாறுமே**
**உண்மையிது உண்மை**
**ஆசி!ஆசி!ஆசி!"**

**பொருள்:** *7½ சனியால் மகிழ்ச்சி குறையும். கணவன் மனைவி உறவு சீர்கெடும். புத்திர வழியில் சிக்கல் வரும். எவ்வளவு உழைத்தாலும் பணம் வராது அலைச்சல்கள் அதிகரிக்கும். அளவிலாத துன்பம் ஏற்படும் என்றாலும் முருகனது ஆசி இருப்பதால் ஜீவநாடியில் வருகின்ற பரிகாரத்தை உரியபடி தேடினால் உத்தம வாழ்வு அமையும் என்கிறது ஜீவநாடிப் பாடல்*

## பரிகாரம்

### சித்திரை 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

*சித்திரை நட்சத்திரத்தில் சூரிய உதய காலத்தில் சூரியனை வணங்கி ஆதித்ய ஹ்ருதயம் பாராயணம் செய்து நாடி படிக்கப்பட்டது அந்த பாடல்*

**"சுகமுண்டு**
**நலமுண்டு**
**சூட்சுமமும்**
**உண்டுண்டுகேள்**
**சூரனை வதைத்த**
**சுப்ரமண்யனை**
**செந்தூரிலே சென்று**
**சேவிக்க சிறப்பாகும்**
**சீராகும் நலமாகும்**
**வளமாகும் நல்லதொரு**
**எதிர்காலம்**
**சிறப்பாகுமே**
**சிறப்பு**
**ஆசிர்வாதம்!"**

**பொருள்:** *திருச்செந்தூரில் தென்மேற்கு பகுதியில் சூரனை வதைக்கும் கோலத்தில் சூரசம்ஹார மூர்த்தி உள்ளது. அதை சென்று வழிபட வாழ்வு சிறக்கும் என்கிறது ஜீவநாடி. இதை 100% அனுபவத்தில் உணர முடியும் என்பது சிறப்பு*

### சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்

*சுவாதி நட்சத்திரத்தன்று நரசிம்ம சுவாமியைப் பூஜித்து மிளகு சாதம் நைவேத்யம் செய்து நாடி படிக்கப்பட்டது. அப்போது உதித்த பரிகாரப் பாடல்*

**"சூளுகின்ற நலமும்**
**சுந்தரமாய் வாழ்வும்**
**சுகம் தரும் நிலையும்**
**சூழ்ந்து வரும் காலம்**
**சுகம்தரவே நலம் தரவே**
**சுக்கிர வாரம் எட்டு**
**சுகமாக சேவி**
**சுகப்பிரம்மரிஷி பூஜித்த**
**சுகவனேசனை**
**சுகமாகுமே வாழ்வு**
**ஆசி!"**


**பொருள்:** *சேலத்தில் உள்ள சுகவனேஸ்வர சுவாமியை எட்டு வெள்ளிக்கிழமை வழிபாடு செய்ய வளமான வாழ்வு அமையும். ஜீவநாடி இதை சொல்வதால் அனுபவத்தில் இதை 100% உணர்ந்துக் கொள்ள முடியும்.*

### விசாகம் 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்

*விசாகம் நட்சத்திரமன்று வேல் விருத்தம் 8 முறை பாராயணம் செய்த வேலுக்கு பன்னீர் அபிசேகம் திரிமதுரம் நைவேத்யம் செய்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது வந்த பாடல்*

**"அற்புதம் நடக்க**
**ஆனந்தம் கிட்ட**
**அதிசயம் காண**
**அல்லல்கள் நீங்க**
**அவதிகள் குறைய**
**அறுகோணம் கீறி**
**அம்சம் என எழுது**
**செம்பிலே கீறி**
**சிறப்பாக அணிந்து**
**சிவன்மலை வேலனை**
**சிவவாக்கிய சித்தனை**
**சிறப்புடன் வழிபட**
**சீராகும் வாழ்வு**
**சிறப்பாகுமே**
**சிறப்பு"**

**பொருள்:** *திருப்பூர் மாவட்டம் காங்கயம் பகுதியில் அமைந்துள்ளது சிவன் மலை. அங்கு சிவவாக்கிய சித்தர் சமாதியும் உண்டு உத்தரவு பெட்டி எனும் அற்புதம் உண்டு அங்கு சென்று 8 முறை விரும்பும் நாளில் வழிபட வேண்டும். அதற்கு முன் பின்வரும் யந்திரத்தை செம்புத்தகட்டில் வரைந்து அணிந்துக் கொள்ள வேண்டும்.*




### யந்திரம்

*இது விசேஷயந்திரம் ஜீவநாடியில் வந்தது. விசாகம் 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் மட்டும் இதை அணிய வேண்டும்.*

# விருச்சிகம்




அன்பான விருச்சிக இராசி அன்பர்களே உங்களின் இராசிநாதன் செவ்வாய். கால புருஷ தத்துவத்தின்படி உங்களின் இராசி எட்டாவது இராசி. தேளின் சின்னத்தைக் கொண்ட இராசி உங்களின் இராசி எனவே எதற்க்கெடுத்தாலும் கோபமும், சுறுசுறுப்பையும் உங்களின் கைக்குள் அடங்கும். பார்ப்பதற்கு எளிதான தோற்றம் உடையவராக இருந்தாலும் மூர்த்தி சிறியது ஆனாலும் கீர்த்தி பெரியது என்ற பழமொழி வாக்கிற்கு இணங்க அனைத்து காரியங்களையும் ஆராய்ந்து உற்று நோக்கி தெளிவான முடிவெடுப்பதில் உங்களுக்கு நிகர் நீங்கள் மட்டுமே. எவ்வளவு பெரிய புத்திசாலியாக இருந்தாலும் எளிதில் மடக்கி விடும் சுபாவம் உங்களுக்கே உரிய ஒன்றாம். உங்களின் இராசியின் அதிபதி செவ்வாய் என்பதால் எடுப்பான தோற்றமும், கம்பீரமான பேச்சும் உங்களுக்கு ப்ளஸ் ஆக உடன் இருக்கும். குறும்புத் தனமும், சுதுர்க்கமாக பேசும் சாதுர்யமும் பெற்றுத் திகழ்வீர்கள். அதிகாரத் தோனியும், பிடிவாதக் குணமும், எதிலும் குறை கண்டு பிடிக்கும். ஞானமும், குற்றம் களைவதில் குதூகல மகிழ்ச்சியும் கொண்டிருப்பீர்கள்.

இதுவரை உங்கள் இராசிக்கு விரையஸ்தானம் என்று அழைக்கப்படும் 12ஆம் இடத்திலிருந்து சனி பகவான் இனி ஜென்ம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். சனி பகவான் 2½ ஆண்டுகள் மிக கடுமையான பலன்களையே அள்ளி வழங்கினார். இனி ஜென்ம ஸ்தானத்தில் இந்த இரண்டரை ஆண்டுகளும் மகிழ்ச்சி அளிப்பாரா? உற்சாகம் பொங்குமா? என பார்க்கலாம்.

விருச்சிக இராசிக்கு சனி பகவான் 12ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து, ஜென்ம ஸ்தானமான விருச்சிக இராசிக்கு திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக் கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும் வாக்கியப்படி 16.12.14 அன்றும் பெயர்ச்சியாகின்றார்.

சனி பகவான் முதல் இரண்டரை ஆண்டுகள் கடுமையான பலன்களை தந்தாலும், இரண்டாவது இரண்டரையில் அதாவது ஜென்ம ஸ்தானத்தில் சனி பகவானின் சஞ்சாரம் ஓரளவு தொழில் முறையில் முன்னேற்றத்தை குரு பார்வையில் ஏற்படுத்தினாலும் கூட, உடல் நிலையில் அதிக அளவு பாதிப்பினை ஏற்படுத்துவார். குடும்பத்தில் பலவிதமான பிரச்சனைகள் ஏற்படும். ஆன்மிகத்தில் நாட்டம் குறைந்து காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கம் விலகி ஓரளவு நிம்மதி பிறக்கும். திருமணம் தடைபட்டு நிறைவேறும். கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை உருவாகும். மருத்துவ செலவுகள் அதிகமாகும். அறுவை சிகிச்சை செய்யும் நிலை கூட ஒரு சிலருக்கு ஏற்படலாம். செல்வாக்கு குறையும். அரசு அனுகூலம் தடைபடும். பொது இடங்களில் பேச்சினை குறைத்து அளவாக பேசினால் சுற்றத்தாரிடம் வரும் மனக் கசப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

| மதிப்பெண்கள் |
|---|
| 30 |
| 100 |

சொந்த தொழில் செய்பவர்களுக்கு தொல்லைகள் ஏற்படும். தூர தேச பிரயாணங்களால் அலைச்சல் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படும். தொழிலாளர்களுக்கு பிரச்சனைகள் ஏற்படும். தொழிலில் மந்த நிலை ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும்.

பணியில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகமாகும். மேலதிகாரிகளுடன் வாக்குவாதம் ஏற்படும். சிலருக்கு பணி மாற்றம் ஏற்படலாம். உயர்பதவி கிடைப்பதில் சிறுசிறு தடங்கள் ஏற்படலாம். வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு சிறு தடைகள் ஏற்படும்.


மாணவர்களுக்கு படிப்பில் மந்த நிலை ஏற்படும். மருத்துவம், இன்ஜினியரிங், சட்டம் தொடர்பான கல்வியினை பயிலும் மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் தேவை. இல்லையெனில் எதிர்பார்த்த அளவு மதிப்பெண்கள் பெறுவது கடினம்.

பெண்களுக்கு எதிர்ப்பார்த்த முறையில் வரன் அமைந்து திருமணம் நடப்பதில் தாமதம் ஏற்படும். அண்டை அயலாருடன் மற்றும் குடும்பத்தில் இருப்பவர்களிடத்திலும் அனுசரித்து செல்வதன் மூலம் ஓரளவு சண்டை சச்சரவுகள் குறைவதற்கு வாய்ப்புகள் உண்டு. கணவன் மனைவியிடையே சிறுசிறு மனக்கசப்புகள் வந்து விலகும். விட்டுக் கொடுத்தச் செல்வது நன்மை பயக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கையில் அதிக அக்கறையற்றுக் காணப்படுவீர்கள். உடல் நிலையில் கர்ப்பபை தொடர்பான பிரச்சினை அடிக்கடி ஏற்படும். தகுந்த

மருத்துவ ஆலோசனை மேற்கொள்வதன் மூலம் அறுவை சிகிச்சையிலிருந்து தப்பலாம். பணியில் உள்ள பெண்களுக்கு சக ஊழியர்களிடமிருந்து போட்டி, பொறாமை போன்ற எண்ணம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அனைத்து வேலைகளிலும் கவனமுடன் செயல்படுவது நன்மை பயக்கும்.

## சனிபகவானின் பார்வைப் பலன்கள்

சனிபகவான் தான் முதல் இரண்டரை ஆண்டுகள் துலாம் இராசியிலும் அடுத்த இரண்டாவது இரண்டரை ஆண்டுகள் விருச்சிக இராசியிலும், மூன்றாவது இரண்டரை ஆண்டுகள் தனுசு இராசியிலும் சஞ்சரிக்க உள்ளார். சனிபகவான் 12ஆம் இடத்திலிருந்து இரண்டாவது 2½ ஆண்டான ஜென்ம நட்சத்திரமான விருச்சிக இராசியில் சஞ்சரிக்க உள்ளார். மேலும் சனிபகவான் தனது 3,7,10ஆம் பார்வையாக மகர இராசியினையும், ரிஷப இராசியினையும், சிம்ம இராசியினையும் பார்த்து பலன்களைத் தரப்போகிறார்.




### சனி பகவான் தைரியஸ்தானமான 3ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

தைரியம், புகழ், கீர்த்தி ஆகியவற்றைக் குறிக்கின்ற ஸ்தானம் 3ஆம் இடமாகும். சனிபகவான் இந்த 3ஆம் இடத்தைப் பார்ப்பதால் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். புகழ், செல்வாக்கு குறையும். சகோதர சகோதரரிகளிடையே மனக் கசப்பு உருவாகும். சொத்து விவகாரங்களில் பிரச்சனைகள் ஏற்படும். பொதுக்காரியங்கள் தடைபடும்.

### சனிபகவான் களத்திர ஸ்தானமான 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

கூட்டுத் தொழில், நண்பர்கள், திருமணம் போன்றவற்றைக் குறிக்கின்ற ஸ்தானமான 7ஆம் இடத்தை சனிபகவான் பார்ப்பதால் திருமணத்தில் சிறுசிறு தடைகள் ஏற்படும். கூட்டுத் தொழில் எதிர்பார்த்த அளவு இலாபம் ஈட்டுவது கடினம். செலவுகள் அதிகரிக்கலாம். தெய்வ பலம் தேவை. பொறுமை மிகமிக அவசியம். வீண் வாக்குவாதங்கள் தவிர்ப்பது நல்லது.

### சனிபகவான் தொழில் ஸ்தானமான 10ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

தொழிலினைக் குறிக்கும் 10ஆம் இடத்தைப் பார்ப்பதால் தொழிலில் கவனம் தேவை. புது முயற்சிகள் போதிய அளவு இலாபத்தினைக் கொடுக்காது. எனவே கைவிடுவது நல்லது. தனலாபம் குறையும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்பட்டு மனநிம்மதி இழக்க நேரிடும். முன்பின் தெரியாதவர்களுக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்க்கவும். கூட்டு வழிபாட்டில் கலந்துக் கொள்வதன் மூலம் ஓரளவு மனநிம்மதி கிடைக்கும்.

### சனி பகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

வள்ளி மணாளனின் பிறப்பு நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனி பகவான் **2.11.2014** முதல் **28.11.2014** சஞ்சரிக்கும் காலம் இளமைக் கல்வியில் அதிக முன்னேற்றம் ஏற்படாது. தைரியம் குறையும். தன்னம்பிக்கை குறையும் உறவுகள் வழியில் சிறுசிறு தொந்தரவு ஏற்படும்.

### சனி பகவான் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

சனிபகவான் **29.11.2014** முதல் **26.12.2015** வரையில் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம். வெற்றி வாய்ப்புகள் குறையும். சகோதர, சகோதரரிகளிடையே ஒற்றுமை குறையும். குலதெய்வ ஆசி குறையும். பூர்வீக சொத்துக்களில் வில்லங்கம் ஏற்படும்.

### சனி பகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

**27.12.2015** முதல் **24.01.2017** வரை கேட்டையில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலம், இலாபங்கள் குறைந்து காணப்படும். விபத்துக்கள் அதிகமாகும். மருத்துவச்செலவுகள் கூடும். ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சை செய்யும் நிலையும் ஏற்படலாம். எனவே இக்காலகட்டத்தில் எச்சரிக்கையாய் இருப்பது நன்மை பயக்கும்.

## சனி வக்ரப் பலன்கள்

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2015 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ் சரிக்கின்றார்.**

உங்கள் இராசிக்கு 3,4,க்கு அதிபதியான சனிபகவான் சுகஸ்தானம் மற்றும் தைர்ய ஸ்தானம் ஆகியவற்றைக் குறிக்கும். ஸ்தானத்தின் அதிபதி மேற்படி தேதிகளில் இரண்டு முறை ஜென்மத்தில் வக்ரம் அடைகின்றார். ஆரோக்கியம் கெடும். வாகன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். நெருங்கிய உறவினர்களிடம் சண்டை சச்சரவுகள் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாட்டின் மூலம் ஓரளவு நன்மை கூடும்.

விருச்சிக இராசிக்கு 7½ சனியில் ஜென்ம சனி காலம் இது. இந்த ஜென்ம சனியின் தாக்கம் எப்படி இருக்கும் என்றும், இதில் இருந்து விடுபட என்ன வழி என்றும் அமாவாசை நாளில் வாராஹிக்கு ஹோமமும் நடுஇரவு 12 மணிக்கு குருதி அபிசேகமும் செய்து பூஜித்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது உதித்த பாடல்

**"தேள் ராசிதனக்கு**
**தேடி வரும் மந்தன்**
**தேன் என்றும்**
**தித்திக்கும் பாகென்றும்**
**பரைசாற்ற வில்லை**
**பரிசுத்தமடைய**
**பக்குவமது ஆக**
**புடம் போடும் தங்கம்**
**அதுபோலும் போடுமது**
**போடும் போதுமது**
**போதும் என்று சொல்ல**
**பலன் அமையுமே பாரு**
**ஆசியது இருப்பதால்**
**அன்புடனே பரிகாரம்**
**அது தேடு ஆசி!"**

**பொருள்:** *விருச்சிக இராசிக்கு சனி வரும் இந்த காலம் இனிக்கும் தேன் போன்ற காலம் என்றோ, தித்திக்கும் பாகு போன்ற நேரம் என்றோ சொல்ல முடியாது. தங்கத்தை எப்படி புடம் போடுவார்களோ அதுபோல போதும் போதும் என்று சொன்னாலும் விடாது போடுபோடு என போட்டு பக்குவமடைய வைக்கும். பரிசுத்தம் ஆக வைக்கும் ஆனாலும் முருகனது ஆசியிருப்பதால் பரிகாரம் செய்ய ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம் என்கிறது ஜீவநாடி.*

## பரிகாரம்

### விசாகம் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு

*சூரிய உதயத்தில் ஜீவநாடியில் வந்த பாடல்*

**"ஜென்ம சனி**
**வன்ம சனி**
**வகை வகையாய்**
**வாட்டமது தரும்**
**வளமாக வேணும்**
**எனில்**
**வாராஹிதன்னை**
**வளமான பஞ்சமி**
**பஞ்ச முறை சென்று**
**பெரிய கோவிலில்**
**சேவித்த வா**
**ஜெயமாகும்**
**ஜென்மசனியால்**
**வரும் பகை விலகும்**
**பாங்கான வாழ்வும்**
**பணக்கார யோகமும்**
**பக்குவத்தோடு**
**பாரினில் கிட்டுமே**
**ஆசி!"**

**பொருள்:** *ஜென்ம சனியின் பகை குறைந்து நற்பலன் ஏற்பட ஐந்து முறை பஞ்சமி திதி தவறாமல் தஞ்சாவூர் பெரியகோவிலில் உள்ள ஸ்ரீ வாராஹியை வழிபட வேண்டும். இது மிகச் சிறப்பான வழிபாடாகும். தஞ்சை மன்னன் போருக்கு செல்லும் முன்பு பூஜித்த போர்த் தெய்வம் வாராஹி . பிராப்தம் இருப்பவர்களே ஐந்து பஞ்சமி தவறாமல் அங்கு சென்று வழிபட முடியும். அப்படி வழிபட்டு விட்டால் 100% நலம் கிட்டும் என்பது நிதர்ஸனம்.*

### அனுசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு

*அனுசம் நட்சத்திரமன்று சுக்கிர ஹோரையில் இலட்சுமி திரிசதி செய்து ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியை பூஜித்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது வந்த பாடல் இங்கு தரப்படுகிறது.*

**"ஏழரைச் சனி காலம்**
**ஏராள சோதனைகள்**
**தாராள வேதனைகள்**
**தர நினைத்தாலும்**
**தரணிதனில் தப்பிக்க**
**தப்பாமல் எட்டுமுறை**
**தன்மையுடன் சேவிக்க**
**வேனுமது வேனும்**
**வசிஷ்டேசன் சுவாமி**
**திட்டையதைத்தானே**
**திட்டமது வெல்லும்**
**திரும்பமது கிட்டும்**
**திவ்யமது வருமே!"**

**பொருள்:** *7½ சனியால் வருகின்ற சோதனைகளைச் சாதனையாக மாற்ற தென் குடித்திட்டை வசிஷ்டேஸ்வரை எட்டுமுறை விரும்பும் நாளில் தரிசனம் செய்ய வேண்டும். இது தஞ்சாவூரில் உள்ளது. குருஸ்தலம் ஆகும். இதை செய்தால் 100% நலம் கிட்டும் என்பது ஜீவநாடி வாக்கு.*

### கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு

*புதன் கிழமையில் புதன் ஹோரையில் இலட்சுமி ஹயக்ரீவரை பூஜித்து 8 ஏலக்காயை வாயில் அடக்கி தியானித்து நாடியில் அருள் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது உதித்த பாடல்*

**"மந்தனது சஞ்சாரம்**
**மாசான நிலையாக**
**முடவனின் சஞ்சாரம்**
**மோசமான நிலை காண**
**மாந்தியின் தந்தையவன்**
**மகிழ்ச்சியை குறைக்க**
**சரியில்லை முறையில்லை**
**என்றாலும் மும்முறை**
**ஏகாதசி தவறாமல்**
**வெண்காடு சென்று**
**வேண்டி வா**
**வினை தீரும்**
**விரும்பிய வாழ்வமையும்**
**விருப்பமுடன்**
**திருப்பமது ஆகுமே!"**

**பொருள்:** *சனியின் ஜென்ம சஞ்சாரம் சரியில்லை என்றாலும் நமக்கு அதன் பாதிப்பு ஏற்படாமல் நலம் கிட்ட, நன்மைகள் ஏற்பட மூன்று முறை ஏகாதசி திதியன்று தவறாமல் புதனின் ஸ்தலமான திருவெண்காடு சென்று வழிபட்ட வர வளமான வாழ்வு கிட்டும் என்கிறது ஜீவநாடி. இதை தப்பாமல் கடைபிடிப்பவர்கள் 100% நலன் அடைவார்கள் என்பது அனுபவம்*




காலபுருஷப்படி 9ஆம் இடமான பாக்கியஸ்தானத்தை இருப்பிடமாகக் கொண்ட தனுசு இராசி நண்பர்களே. விண்வெளியில் வில்லம்பை ஏந்தி ஒரு கட்டமாக அமைந்த நட்சத்திர கூட்டமே தனுசு இராசியாகும். தற்பெருமை அதிகம் உடையவர்கள் நீங்கள். தன்னலம் கருதாது அனைவருக்கும் உதவும் மனப்பாங்கு கொண்டிருப்பீர்கள். வாயு புத்திரனான ஹனுமன் பகவானின் மூலம் நட்சத்திரம் ஆய கலைகளுக்கு அதிபதியாக விளங்கும் சரஸ்வதி தேவியின் மூலம் நட்சத்திரம் எனவே தனுசு இராசிக்காரர்கள் கொடை வள்ளல் போன்று செயல்படும் குணம் உங்களுக்கே அதிகம். தீய பழக்கவழக்கங்கள் உங்களின் நிழலைத் தொடக் கூட பயக்கும். பக்தியில் சிறந்து விளங்குவீர்கள். குருவிடம் சிறந்த பக்தி உள்ளவர்களாக நடந்துக் கொள்வீர்கள். அன்பாக பழகினால் தனது சொத்து முழுவதையும் கூட கொடுத்து விட்டு வந்து விடும் சுபாவம் உங்களின் மைனஸ் இதனால் தேவையில்லாமல் பிரச்சனையில் மாட்டிக்கொள்வீர்கள். தியாகம் செய்வதில் உங்களுக்கு இணை நீங்கள் தான். நீதி, நேர்மை கொண்ட நெஞ்சம் உடையவர்கள். உங்களின் இராசியின் அதிபதி குரு. குரு பகவானின் ஆசி நிரம்பப் பெற்ற இராசி உங்கள் இராசி, தரமான சிந்தனை குணம் கொண்டவர்கள் நீங்கள். தர்மத்திற்காகவும், நீதிக்காகவும் சதாசர்வ காலமும் போராடுவீர்கள். அரசியலில் சிலர் அதிக விருப்பம் உடையவராகத் திகழ்வீர்கள்.

பொன்னவன், நல்லவன் என்று போற்றப்படும் குருபகவான் ஓராண்டு காலம் நற்பலன்களை நவிழ்ந்தாலும் கூட சனி பகவான் பெயர்ச்சியாகும் இந்த இரண்டரையாண்டு காலம் என்னவாறு பலன்களைத் தரப்போகிறார். மாற்றங்களை ஏற்படுத்தப்போகிறார் என இனிக் காணலாம்.

இதுவரை உங்கள் இராசிக்கு 11ஆம் இடமான துலாம் இருந்த இருந்த சனிபகவான் விரையஸ்தானமான விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார் திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும் வாக்கியப்படி 16.12.2014 அன்று பெயர்ச்சியாகின்றார்.

இதுவரை உங்கள் இராசிக்கு 11ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் பெயர்ச்சியாகி விரைய ஸ்தானமான 12ஆம் இடத்தில் சஞ்சரிக்க உள்ளார். உங்கள் இராசிக்கு இது 7½ சனி ஆரம்பமாகும் காலகட்டமாகும். 7½ சனி ஆரம்பிக்கும் காலகட்டத்தில் எதிர்பார்த்த அளவு நற்பலன்களை எதிர்பார்க்க முடியாது. 7½ சனி ஆரம்பிக்கும் காலகட்டத்தில் முதல் இரண்டரையாண்டுகள் விரையச் சனியாக செயல்படுவார். எனவே தொழிலில் அதிக விரையம் ஏற்படும். கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். கணவன் மனைவியிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்படும். உடல் நிலையில் அதிக அக்கறை தேவை. மேற்படிப்பு, மேலை நாடு சம்பந்தமான விவகாரங்களில் தடைகள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் வழியில் ஓரளவு நிம்மதி ஏற்படும். அதிக முதலீடு செய்வதன் மூலம் தொழில் முன்னேற்றம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை ஏற்படும். புதிய வண்டி, வாகன சேர்க்கை ஏற்படும்.

**மதிப்பெண்கள்**

**45**
**100**

சொந்த தொழில் செய்பவர்களுக்கு விரையச்சனி எந்த வகையிலும் இலாபத்தை கொடுக்கமாட்டார். எதைத் தொடங்கினாலும் நஷ்டத்தையே ஏற்படுத்தும். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்காது. ஒரு சில நேரங்களில் மட்டும் இலாபங்கள் கிட்டும். புதிய முயற்சிகளை தற்போதைய காலகட்டங்களில் தொடங்காமல் இருப்பது நல்லது.

பணியில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு கூடும். வேலை கிடைத்தாலும் கூட படிப்பிற்கு ஏற்ற வேலையாக அமையாது. வீண் அலைச்சல் உருவாகும். மேலதிகாரிகளுடன் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படும். வரவுகளை விட செலவுகள் அதிகமாகும்.


மாணவர்களுக்கு படிப்பில் போதிய அளவு அக்கறை காட்டாமல் மந்த நிலையினை ஏற்படுத்துவார் சனிபகவான். மேற்படிப்பில் தடைகள் ஏற்படும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புகள் போதிய அளவு நற்பலன்

கிடைக்காது. நித்திரை சுகம் கெடும். மனதில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படும். பொறுமையும், புத்திசாலித்தனமாக செயல்பட்டால் ஓரளவு நற்பலன் கிடைக்கும். உடல் நலத்தினில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட படிப்புகளில் தடைகள் ஏற்படும்.

கலைத்துறையில் இருப்பவர்களுக்கு ஒரு சில தடைகள் முன்னேறுவதில் ஏற்படும். அதிக உழைப்பினை முதலீடு செய்யும் நிலை ஏற்படும். இருந்தாலும் கூட எதிர்பார்த்த அளவு நற்பலன்களைப் பெறுவது என்பது கடினமே.

## சனி பகவானின் பார்வைப் பலன்கள்

சனிபகவான் இலாபஸ்தானமான துலாம் இராசியிலிருந்து 12ஆம் வீடான விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார். தனுசு இராசிக்கு 7½ சனியானது ஆரம்பிக்கும் முதல் இரண்டரை ஆண்டுகள் ஆகும். இந்த இரண்டரை ஆண்டுகள் சனி பகவான் விருச்சிக இராசியான உங்கள் இராசிக்கு விரையஸ்தானமான 12ஆம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளார். மேலும் தமது பார்வை பலன்கள் முறையே 2ஆம் பார்வையாக மகர இராசியினையும், 7ஆம் பார்வையாக ரிஷப இராசியினையும், 10ஆம் பார்வையாக சிம்ம இராசியினையும் பார்வையிடுகிறார்.




### சனிபகவான் குடும்பஸ்தானமாகிய 2ஆம் வீட்டை பார்வையிடுவதால் ஏற்படும் பலன்கள்

சனிபகவான் தனது 3ஆம் பார்வையாக மகர இராசியினை பார்வையிடுகிறார். எனவே குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். கணவன் மனைவியிடையே சுமூக உறவு தடைபடும். மாணவர்களுக்கு இளமைக்கல்வியில் தடைகள் ஏற்படும். வாக்கினிலே தெரிவில்லாத நிலை ஏற்படும். எனவே கொடுத்த வாக்கினை காப்பாற்று முடியாமல் போராடும் நிலை ஏற்படலாம். பணம் பற்றாக்குறை ஏற்பட்டு கடன் வாங்கும் சூழ்நிலைக்கு தள்ளப்படலாம். எனவே ஆடம்பரச் செலவுகளை குறைத்துக் கொள்வதன் மூலம் ஓரளவு பணத் தட்டுப்பாட்டை குறைக்கலாம்.

### சனிபகவான் தனது 7இம் பார்வையாக 6இம் ஸ்தானத்தை பார்வையிடுவதால் ஏற்படும் பலன்கள்

சனிபகவான் தனது 7இம் பார்வையாக ரிஷப இராசியினை பார்வையிடுகிறார். காதல் விவகாரங்களில் எச்சரிக்கையுடன் நடந்துக் கொள்வது நன்மை தரும். கூட்டுத் தொழிலில் ஓரளவு இலாபம் எதிர்பார்க்கலாம். நண்பர்கள் மூலம் ஓரளவு ஆதாயம் ஏற்படும். முன்கோபத்தை குறைத்துக்கொள்வதன் மூலம் சண்டை சச்சரவுகளைத் தடுக்கலாம்.

### சனி பகவான் தனது 10ஆம் பார்வையாக பாக்யஸ்தானத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்

சனிபகவான் 9ஆம் இடமான ரிஷப இராசியினை பார்வையிடுவதால் தொழிலில் அதிக கவனம் தேவை. புதிய முயற்சிகள கண்டனர்கள் போன்ற தொழில் சாதனப் பொருட்களை நன்கு ஆராய்ந்து ஆலோசனை செய்து வாங்குவது நன்மை தரும். வேலையாட்கள் மூலம் பிரச்சனைக்ள உருவாகும். செலவுகள் அதிகமாகும். கொடுக்கல் வாங்கலில் சுமூகமான நிலை ஏற்படும். வீடு புதிய மனைகள் வாங்க ஏற்ற காலம் அன்று .

### சனிபகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

குருவின் நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனிபகவான் **2.11.2014** முதல் **28.11.2014** வரை சஞ்சரிக்கின்றார். ஆரோக்கியம் குறையும். சுய கௌரவம் குறையும். தாயின் உடல் நிலையில் ஆரோக்கியம் குறையும். வண்டி வாகன சேர்க்கை குறையும்.

### சனி பகவான் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

சனிபகவான் **29.11.2014** முதல் **26.12.2015** வரை சனியின் நட்சத்திரமான அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம். மேற்படிப்பிற்கான முயற்சிகள் தடைபடும். மாணவர்கள் படிப்பில் அதிக அக்கறை தேவை. தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். வாக்கிலே தெளிவின்மை, சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமல் தடுமாற்றம் ஏற்படும்.

### சனிபகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனிபகவான் **27.12.2015** வரை சஞ்சரிக்கும் காலம். தொழிலிலே மந்தநிலை ஏற்படும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை குறையும். நண்பர்களும் பகையாளராக மாறும் காலம் சற்று உஷார் தேவை.

## சனி வக்ர பலன்கள்

### 15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2015 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கரத்தில் சஞ் சரிக்கிறார்.

உங்கள் இராசிக்கு 2,3க்கும் அதிபதியாக விளங்கும் சனிபகவான் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே நம்பிக்கையின்மை ஏற்படும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். கௌரவத்திற்கு பங்கம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும். மனைவியின் உடல் நலத்தில் அதிக அக்கறை தேவை. எண்ணங்களுக்கு ஏற்றவாறு நடைபெற

முடியாமல் போகும் சூழ்நிலை ஏற்படும். எனவே அதிக கவனம் தேவை.

தனுசு இராசிக்கு சனியின் சஞ்சாரம் 12ஆம் இடத்தில் வருவது 7½ சனியின் ஆரம்ப காலமாகும். எனவே ஆரம்ப கட்ட 7½ சனியின் தாக்கத்தில் இருந்து ஏற்படும் பலன்களைத் தெரிந்து கொள்ள ஏகாதசி ருத்ரஜபம் செய்து பிரதோஷ வேளையில் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியைப் பூஜித்து வாக்கு கேட்கப்பட்டது. அப்போது உதித்த பாடல்

**"வில்லதிலே உதித்தவர்க்கு**
**விபரமது சொல்லுவோம்**
**சொல்லதிலே கவனம்**
**சுகத்திலும் கவனம்**
**செல்லுமது வழியிலும்**
**கவனமது கவனம்**
**வாங்கலது கொடுக்கல்**
**கடன் போலும் வரும்**
**வந்தாலும் வசதி கூடும்**
**சேமிப்பு உயர வழியில்லை**
**என்றாலும் வழி தேடு**
**பரிகார முறை தேடு**
**சுகமாகுமே ! சுபமாகுமே !**
**சுபம் ! ஆசி !"**

**பொருள்:** தனுசு இராசியில் பிறந்தவர்கள் வாக்கில் கவனமாக இருக்க வேண்டும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வண்டி வாகனங்களை இயக்கும் போதும் பயணிக்கும் போதும் கூடுதல் உஷார் தேவை. கடன் கூடும். வருமானம் வந்தாலும் சேமிப்பு கூடாது. இது எல்லாம் மாறி நலம் விளைய பரிகாரம் தேடு என்கிறது ஜீவநாடி.

## பரிகாரம்

### "மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு

சூர்ய உதயத்தில் படிக்கப்பட்ட பாடல்

**ஆரம்ப சனிகாலம்**
**ஆபத்து தர நினைக்க**
**விபத்தாலும் விபரீதம்**
**விளையும் என இருக்க**
**தவிர்க்கும் தீயதை**
**தரமான வழிதேட**
**எட்டு முறை சென்று**
**எட்டுக்குடி முருகனை**
**ஏகாந்தமாய் வழிபட்டு**
**வா ! வளம் ஆகுமே !"**
**நலம் ஆகுமே**
**நல்லதோர் எதிர்காலம்**
**நலம் ஆகுமே**
**நன்மையது ஆகுமே**
**நலம் !"**

**பொருள்:** 7½ சனியின் ஆரம்ப காலம் அவதிகள் பல தரும் என்பதால் அதில் இருந்து தப்பிக்க எட்டு முறை எட்டுக்குடி சென்று முருகனை வழிபட்டு வர வேண்டும். 100% நலம் கிட்டும். என்பது ஜீவநாடி அருள்வாக்கு. எட்டுமுறை என்பது சனி விருச்சிகத்தில் இருக்கும் 2½ ஆண்டுக்குள் எட்டு முறை என அர்த்தம்.

### பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு

பூராடம் அன்று சப்தமாதாவிற்கு பூஜை செய்து கதோலை கருகுமணி படைத்து வேண்டி நாடி படிக்கப் பட்டது. அப்போது உதித்த பாடல்

**"தப்பாது நலம் பலவும்**
**தரணிதனில் கிட்டிடவே**
**பொன்னோடும் பொருளோடும்**
**மண்ணோடும் மனையோடும்**
**மகத்துவம் பல கிட்ட**
**மருதமலை முருகனை**
**மாயவனின் மருகனை**
**மனதார இரண்டுமுறை**
**மகிழ்ச்சியோடு தொழுதுவா**
**தொல்லைபோம்**
**துயரம்போம்**
**தூயது ஆகுமே ஓம் !"**

**பொருள்:** 7½ சனியின் தாக்கம் குறைந்து நலம் ஏற்பட கோயம்புத்தூரில் உள்ள மருதமலை முருகனை இரண்டு முறை சென்று தொழ துயரங்கள் நீங்கி தூய வாழ்வு கிட்டும் என்கிறது ஜீவநாடி. இதை கடைபிடித்தால் 100% நலம் கிட்டும். இரண்டு முறை என்பது 2½ ஆண்டுகள் போகலாம். விருப்பமான நாளில் போகலாம்.

### உத்திராடம் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு

உத்திராடம் நட்சத்திரம் அன்று சூரிய ஹோரையில் சிவ பூஜை செய்து சிவபுராணம் பாராயணம் செய்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது வந்து உதித்த வாக்கு பாடல் வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

**"வகையருளும் முறையாகி**
**வளம் பலவும் கிட்டிடவும்**
**வசதிகள் வாய்ப்புகள்**
**வளமாகக் கூடிடவும்**
**வம்புகள் தீர்ந்திடவும்**
**வழக்குகள் ஓய்ந்திடவும்**
**வல்லமை கூடிடவும்**
**மகிமை புகழ்**
**மஞ்சுநாத சுவாமி உண்டு**
**மங்களாபுரங்ம தன்னிலே**
**நவதீர்த்தம் தனில் நீராடி**
**வருகின்ற கங்கை நீரை**
**கால் மண்டலம் குடித்து வா**
**குறைபோம் !"**

**பொருள்:** மங்களூரில் உள்ள மஞ்சுநாதர் கோவில் சென்று அங்குள்ள நவ தீர்த்தத்தில் நீராடி சிம்மத்தின் வாயில் வரும் காசி தீர்த்தத்தை பிடித்து வந்து 12 நாள் குடிக்க குறைகள் அனைத்தும் நீங்கி நிறைகள் அனைத்தும் தேடி வரும். இது மிகவும் பிரமிப்பாக 100% நிச்சய நலன் தரும்.




அன்பான மகர இராசி அன்பர்களே, உங்களின் இராசிநாதன் சனிபகவான். மேலும் சனி பகவான் ஆட்சி பெறுகின்ற இராசியும் உங்களுடையது. விருந்து, விழா, வளம், வாய்ப்பு சந்தோஷம், போன்ற குதுகலங்களில் எதிலும் நாட்டமில்லாமல், ஆன்மிகம், தெய்வகாரியங்கள், பூஜை, புனஸ்காரங்கள் ஆகியவற்றிலே குதுகலம் காணும் பக்தி மார்கம் உடையவர்கள் நீங்கள் குருபகவான் நீசம் பெற்ற இராசி உங்கள் இராசி நல்ல நடத்தை, மற்றும் பழக்கவழக்கங்களில் முதலிடம் பெற்றுத் திகழ்வீர்கள். கலைத்துறையிலும் சரி, மொழி நடையிலும் சரி உங்களுக்கே முதலிடம் சகோதர, சகோதரிகளிடம் அதிக அன்பும், அதிக அளவில் பற்றும் கொண்டு இருப்பீர்கள். மதி நுட்பம் அதிகம் பெற்ற நீங்கள் சோதனைகளையும், சாதனைகளாக மாற்றும் குணம் கொண்டு திகழ்வீர்கள். கடல் கடந்து போகும் வாய்ப்புகள் தேடி வரும். நேர்வழியில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உயரிய குறிக்கோளைக் கொண்டு திகழ்வீர்கள். தாயின் மீதும் உறவுகள் மீது அதிக பற்றும் பாசமும் கொண்டு திகழ்வீர்கள். பகட்டான வாழ்விற்கு சிறிதும் ஆசைப்படாதவர்கள் நீங்கள் குதிரையினை சின்னமாகக் கொண்ட இராசி மகர இராசி என்பதால் வேகமும், விவேகமும் உங்களுடனே இருக்கும் என்று சொன்னால் மிகையாகாது. பகையாளியை கூட உங்கள் பேச்சினால் எளிதில் நட்பு பாராட்ட வைத்து விடுவீர்கள். உங்களுக்கு எதிரி நீங்கள் மட்டுமே என்று சொன்னால் மிகையாகாது.

சுப கிரகம் என்றும், பொன்னவன், நல்லவன் என்று போற்றப்படும் குருபகவான் ஓராண்டு காலம் நற்பலன்களை நல்கினாலும், பாவகிரகங்கள என்று கூறப்படும். சனிபகவானின் இந்த இரண்டரை ஆண்டு கால பெயர்ச்சி எவ்வாறு நற்பலனையும், மாற்றத்தையும் ஏற்படுத்தப்போகிறது என பார்க்கலாம்.

இதுவரை சனி பகவான் 10ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து, 11ஆம் இடமான இலாபத்தைக் குறிக்கும் ஸ்தானமான விருச்சிக இராசிக்கு திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணியளவிலும் வாக்கியப்படி 16.12.14 அன்றும் பெயர்ச்சியாகின்றார்.

இதுவரை உங்கள் இராசிக்கு தொழிலைக் குறிக்கும் ஸ்தானமான துலாம் இராசியிலிருந்து 10ஆம் வீட்டிலிருந்து, இலாபம் சகோதர சகோதரரிகளைக் குறிக்கும் ஸ்தானமான 11ஆம் வீட்டிற்கு அதாவது விருச்சிக இராசிக்கு இடம் பெயருகின்றார். எனவே தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். இந்த இரண்டரை ஆண்டு காலம் நல்ல முன்னேற்றத்தினை எதிர் பார்க்கலாம். தேக பலம் கூடும். மருத்துவத்தினை எதிர் பார்க்கலாம். தேக பலம் கூடும். மருத்துவச் செலவுகள் குறையும். வாழ்க்கை தரம் உயரும். சோம்பல் உங்களை விட்டு திரும்பி பார்க்காமல் ஓடும். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். ஏற்றம் வரும். வாழ்வில் புத்துணர்ச்சி ஏற்படும். கவலைகள் கூட மறையும். தன இலாபம் கூடும் பணத்தட்டுபாடு குறையும்.

தொழில் செய்பவர்களுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய புதிய கான்டிராக்டுகளில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். அரசு வழியில் புதிய அனுகூலம் கிட்டும். பணவரத்து பல வழிகளில் வந்தடையும். மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.

**மதிப்பெண்கள்**
**90**
**100**

பணியில் உள்ளவர்களுக்கு உத்யோக உயர்வு கிடைக்கும். ஏற்றப் பாதையில் செல்வீர்கள். மேலதிகாரிகளிடம் நட்புடன் நடந்துக் கொள்வீர்கள். சம்பள உயர்வு ஏற்படும். பூர்வீக சொத்துக்களால் இருந்து வந்த வில்லங்கம் விலகும். சொந்த மனை மற்றும் வீடு கட்ட நினைத்த ஆசை நிறைவேறும். குடும்பத்தில் குதுகலம் ஏற்படும். முன்பின் தொடர்பாக நண்பர்களால் ஆதாயம் ஏற்படும்.

கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நல்ல ஆதாயம் ஏற்படும். தங்களது துறையில் காலுன்ற பொன்னான நேரம். பல வகையில் பிரபலங்களின் அறிமுகம் ஏற்பட்டு நல்ல ஆதாயம் கிடைக்கும்.


மாணவர்களுக்கு படிப்பில் அதிக ஆர்வம் ஏற்பட்டு மந்த நிலையில் உள்ளவரும் அதிக மதிப்பெண் பெறும் நேரமிது மனதை ஒரு முகப்படுத்துவதன் மூலம் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்புள்ளது. பெற்றோர் ஆசிரியர்களிடையே நல்ல இணக்கமான சூழல்

ஏற்பட்டு படிப்பில் அதிக கவனம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மகிழ்ச்சி நிலவும் சூழ்நிலையே அதிகம்.

பெண்களுக்கு ஆடை ஆபரணம் சேர்க்கை ஏற்பட்டு மகிழ்வீர்கள். குடும்பத்தில் குதூகலம் கூடும். 3 நபராக எந்தவொரு காரியத்திலும் செல்லாமல் இருந்தால் வீண் அவமானங்கள் குறையும். உறவுகளிடையே சுமூகம் ஏற்பட்டு மனதில் மகிழ்ச்சி பொங்கும். வசதிகளைப் பெருக்கும். மின் சாதனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். குழந்தை பாக்கியம் கிட்டும்.

## சனி பகவானின் பார்வைப் பலன்கள்:

இதுவரை சனிபகவான் தொழில்ஸ்தானமான 10ஆம் இடத்திலிருந்து, லாபஸ்தானமான 11ஆம் இடத்தில் சஞ்சரிக்க உள்ளார். மேலும் சனி பகவானின் பார்வை பலன்கள் முறையே ஜென்மஸ்தானமான மகர இராசியினையும், 10ஆம் பார்வையாக சிம்ம இராசியினையும் பார்த்து பலன்களைத் தரப் போகிறார். சனி பகவான் 1,5,8 ஆகிய இடங்களைப் பார்க்கிறார்




### சனிபகவான் ஜென்ம ஸ்தானமான 1ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சனிபகவான் குணஸ்தானமாகிய ஜென்ம இராசியினை பார்வையிடுவதால் புகழ் கூடும். உங்களுடைய நடையில் உற்சாகம் பிறக்கும். பேச்சிலே வளம் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்றும் நிலை ஏற்படும். புதிய புதிய நபர்களை சந்தித்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் கணவன் மனையிடையே ஒற்றுமை ஏற்படும். வீண் அலைச்சல் குறையும்.

### சனி பகவான் பூர்வ புண்ணியஸ்தானமான 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சனிபகவான் பூர்வ புண்ணியஸ்தானமான 5ம் வீட்டைப் பார்ப்பதால், பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகி ஓடும். குல தெய்வ ஆசி கிடைக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். நெருங்கிய உறவுகள் வழியில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.

### சனி பகவான் ஆயுள் ஸ்தானமான 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

விபத்து, கண்டம் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமான 8ஆம் வீட்டை சனி பார்ப்பதால், எதிர் கொண்ட சிக்கல் யாவும் தன்னால் விடுபடும். மந்த நிலை மாறி சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். வெளியூரில் இருக்கிறோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல நண்பர்கள் அமைவார்கள். ஆயுள் விருத்தி ஏற்படும். குடும்பத்தில் நிலவி வந்த வாட்டம், கருத்து வேற்றுமைகள் போன்றவை விலகும். உத்யோகம் பார்ப்பவர்களின் கடின உழைப்பை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். கண்டங்கள் விலகும். வம்பு வழக்குகள் சுமூகமாக முடியும்.

### சனிபகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

வேல் முருகக் கடவுளின் பிறப்பு நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனிபகவான் **2.11.2014** முதல் **28.11.2014** வரை சஞ்சரிக்கின்றார். மகர இராசிக்கு 3,12க்கு அதிபதி எனவே சுப விரையங்கள் ஏற்படும். மனதில் இருந்த கவலைகள் நீங்கி நித்திரை சுகம் கூடும். தைரியம், தன்னம்பிக்கை அதீதமாகும்.

### சனிபகவான் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனிபகவான் **29.11.2014** முதல் **26.12.2015** வரை சனியின் நட்சத்திரமான அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம். செல்வாக்கு, சொல்வாக்கு புகழ், கௌரவம் கூடும். எங்கு சென்றாலும் தங்களுக்கு முதலிடம் என்ற நிலையினை அடைவீர்கள். கஷ்டங்கள் விலகும் மகிழ்ச்சி பிறக்கும்.

### சனிபகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனிபகவான் **27.12.2015** முதல் **24.01.2017** வரை சஞ்சரிக்கும் காலம் பக்தி கூடும். நோய்கள் நீங்கும். சொத்துக்களால் உள்ள வில்லங்கம் நீங்கும். தந்தையின் உடல்நிலையில் மாற்றம் ஏற்படும். வாகன சேர்க்கை ஏற்படும்.

## சனி வக்கிரப் பலன்கள்:

### 15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2015 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கரத்தில் சஞ் சரிகின்றார்.

உங்கள் இராசிக்கு, 1,2க்கு அதிபதியாக விளங்கும் சனிபகவான் இரண்டு முறை வக்கரத்தில் சஞ்சரிக்கின்றார். ஜென்மஸ்தானம் மற்றும் குடும்பஸ்தானத்தின் அதிபதி 11இல் வக்கரம் அடைகிறார். இதனால் கல்வியில் அதிக கவனம் தேவை. வாக்கினிலே தெளிவின்மையால் கொடுத்த வாக்கினை காப்பாற்ற முடியாமல் தடுமாறுவீர்கள். பணத்தட்டுப்பாடுகள் ஏற்படும். கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். எனவே கவனம் தேவை.

மகர இராசிக்கு இலாபஸ்தானமான 11இல் சனி சஞ்சரிப்பது என்ன நன்மை தரும் என

திருவோணம் நட்சத்திரத்தில் சந்திர ஹோரையில் திருப்பதி வெங்கடாஜலபதியை துளசியால் அர்ச்சித்து ஞானஸ்கந்தர் ஜீவநாடி படிக்கப்பட்டது. அப்போது உதித்த பாடல்:

**"மட்டமொடு மகிடமென**
**மகர ராசி தனக்கும்**
**மகிழ்வான காலமிது**
**மாசு நீங்கும்**
**காசு பெருகும்**
**கச்சிதமாய் வெற்றி கிட்டும்**
**தொழில் ஓங்கும்**
**தொந்தரவு அது நீங்கும்**
**புது வாய்ப்பு புலப்படவும்**
**புண்ணியங்கள் பெருகிடவும்**
**அருளுண்டு பொருளுண்டு**
**அற்புதமது உண்டு சொல்**
**ஆசி! "ஆனாலும்**
**பரிகாரம் தேடு ஆசி!"**

**பொருள்:** *மகர இராசிக்கு சனி 11ல் வருவது மகிழ்வான காலமாகும். மாசு நீங்கி பணப் புழக்கம் அதிகரிக்கும். எடுக்கின்ற காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். தொழிலில் மேன்மை ஏற்படும் தொந்தரவு நீங்கி புதிய புதிய வாய்ப்புகள் பெருகி இறையருள் கூடி பணக்கார யோகம் ஏற்படும். ஆனாலும் நன்மைகள் மேலும் கூட பரிகாரம் தேடுவது அவசியம்.*

### உத்திராடம் நட்சத்திரம் 2,3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

*உத்திராடம் நட்சத்திரமன்று ஆறு முறை சண்முகக்கவசம் பாராயணம் செய்து நாடி படிக்கப்பட்டது அப்போது வந்த பாடல்*


**"சீருண்டு சிறப்புண்டு**
**சிக்கலது தீரும்**
**சிரமமது குறையும்**
**திருப்பமது காணும்**
**விருப்பமது கூடும்**
**தேன்போலும் வாழ்வு**
**தேடி வந்து இனிக்கும்**
**நாடி வந்து நலம் பலவும்**
**நலமுடனே கூடும்**
**சென்று வா சேவித்து வா**
**கமலசிலை தேவியை**
**பிராமி துர்க்கா பரமேஸ்வரியை**
**பிரியமான வாழ்வு**
**பாரினில் உண்டு சத்தியம்.**

**பொருள்:** *கர்நாடகா உடுப்பி மாவட்டம் கொல்லூர் மூகாம்பிகை கோவிலுக்கு அருகில் வனாந்தரத்தில் உள்ளது கமலநிலை கோவில் 100% பிராப்தம் இருந்தால் மட்டும் இங்கு செல்ல முடியும். சென்று 2 இரவு தங்கி வந்தால் தரமான வாழ்வு தரணியில் 100% உண்டு என்பது அனுபவ உண்மை.*

### திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு:

*திரு ஓணம் நட்சத்திரம் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் தியானித்து நாடி படிக்கப்பட்டது. அப்போது பின்வரும் பாடல் வந்தது.*

**"ஓணமீன் கொண்டு**
**ஓம்காரம் எழுப்பி**
**தேடிவரும் நன்மை**
**ஓடிவரும் தூய்மை**
**நாடி வரும் நலம்**
**நன்மைகள் விளைய**
**நலம் பலவும் கிட்ட**
**நாராயண மந்திரம்**
**நூறோடு எட்டு**
**நூறு நாள் தொடர்ந்து**
**வட்டமது வரைந்து**
**ஹரி ஓம் எழுதி**
**கதிர்வீச்சு காட்டி**
**செம்பிலே கட்டி**
**தரிசித்து பா தலம்**
**ஸ்ரீரங்க பட்டினமும்**
**நிமிசாம்பாளையுமே**
**நலம்! நலம்! நலம்! "**




**பொருள்:** *இந்த யந்திரத்தை செம்புத் தகட்டில் வரைந்து 100நாள் ஓம் ஹரி ஹரி ஓம் என ஜெபித்து (108 முறை) அணிந்து கொண்டு பெங்களூரு to மைசூர் வழியில் உள்ள ஸ்ரீரங்க பட்டினம் ரங்கநாதரை சேவித்து அருகில் உள்ள நிமிஷாம்பாளை வழிபட்டு வர வாழ்வில் வளம் பலவும் தேடி வரும். என்பது 100% உண்மை.*

### அவிட்டம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு:

*செவ்வாய்க் கிழமை செவ்வாய் ஹோரையில் சுப்பிரமணிய புஜங்கம் ஓதி செந்நிற ஆடை பூண்டு குங்குமம் தரித்து பூஜித்து செந்நிற மலர்கள் சாற்றி ஜீவநாடியில் பரிகாரம் கேட்கப்பட்டது. அதன் பாடலும் விளக்கமும் தரப்படுகிறது.*

**பலமான பதினொன்றில்**
**பல நன்மை தந்திடவே**
**பாங்கான மந்தன் வர**
**பரிசுத்த வாழ்வுண்டு**
**பல வளமும் பல நலமும்**
**பாரினில் தேடி வர**
**பணக்கார வாழ்வதுவும்**
**பக்குவமும் சித்திக்க**
**குற்றாலமருகில் உள்ள**
**சிறப்பான தலமான**
**சிவசைலம் சென்று**
**சடையனை சேவித்துவா**
**சீராகும்! சிறப்பாகும்!**
**சித்திக்குமே அருள்! ஆசி!**

**பொருள்:** *குற்றாலம் அருகில் உள்ள சிவசைலம் ஆலயத்தில் இருக்கும் சடையப்பன் ஈசனை தொழ வினைகள் தீரும். நலன்கள் வரும் 100% சிறப்பு கிட்டும் என்பது ஜீவநாடி அருள்வாக்கு.*




அன்பான கும்ப இராசி நண்பர்களே, உங்கள் இராசிநாதன் சனிபகவான் எனவே வீரமான தோற்றமும், விவகாரமான சிந்தனையும், விவேகமான ஞானமும், பகைத்து நிற்பவர்களையும் பாசத்தோடு தர வேண்டும். நல்ல உள்ளமும், உங்களை கண்டவுடனே வசீகரித்து தங்கள் பின்னால் வைத்துக் கொள்ளும் சாத்வீகமும் கொண்டவராய் திகழ்வீர்கள். அமைதியான குணத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்குவீர்கள். என்று சொன்னால் மிகையாகாது. ஆன்மிகத்தில் அதிக நாட்டம் மிக்கவராய் திகழ்வீர்கள். சுயமாக முடிவு எடுக்கத் தடுமாறுவீர்கள். மற்றவர்களின் மீது அதிக இரக்கம் காட்டுவீர்கள். தான, தர்மம் செய்வதில் மிகுந்த ஆர்வமுடையவர்களாக திகழ்வீர்கள். அடுத்தவர்கள் அல்லல்படுவதில் விருப்பமில்லாமல் தேடி வந்து உதவிகளை செய்வீர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை மூச்சாகக் கொண்டவர்களாகத் திகழ்வீர்கள். நியாயத்திற்காக போராடும் குணம் கொண்டவர்கள். எந்தவொரு விஷயமாக இருந்தாலும் அலசி ஆராய்ந்து நடுநிலமையாக இருந்து தீர்ப்பினை வழங்கும் குணம் உள்ளவர்கள் என்று சொன்னால் மிகையாகாது. சோகத்திலும் கலங்கி நிற்காமல் தைரியமாக முடிவெடுக்கும் தைரியம் படைத்தவர்கள் நீங்கள் எடுத்த காரியத்தில் ஜெயத்தினைக் காணாமல் ஓய மாட்டீர்கள். அடுத்தவர்களை எடுத்தெறிந்து பேசும் குணமும், கோபமும் தான் உங்கள் முதல் எதிரி நகைச்சுவை கலந்த பேச்சு தான் உங்களில் ப்ளஸ் கலைகளை இரசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாகத் திகழ்வீர்கள். கேளிக்கைகளில் அதிக நாட்டம் இல்லாதவர்களாக திகழ்வீர்கள். ஆடம்பரம் அறவே ஆகாது என்று நினைப்பீர்கள்.

சனிபகவான் இதுவரை உங்கள் இராசிக்கு பாக்கியஸ்தானமான 9ஆம் இடத்திலிருந்து, தொழில்ஸ்தானமான 10ஆம் வீட்டிற்கு இடம் பெயறுகின்றார். திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும், வாக்கியப்படி 16.12.2014 அன்றும் பெயர்ச்சியாகிறார்.

சனிபகவான் தருமஸ்தானம், பக்திஸ்தானம், பாக்கியஸ்தானம் என்று போற்றப்படும் 9ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து தொழிலைக் குறிக்கும் ஸ்தானமான 10ஆம் வீடான விருச்சிக இராசிக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார். 10இல் சனியின் சஞ்சாரம் தொழிலை பாதிக்கும். மனதில் குழப்பங்கள் மேலோங்கும். கனவுகள் நனவாகும். சண்டை சச்சரவுகள் உறவினர்களிடமும், நண்பர்களிடமும் ஏற்படும். எனவே பொது இடங்களில் கவனமுடன் செயல்படுவது நன்மை பயக்கும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். எனவே ஆடம்பர செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. ஆரோக்கியம் கூடும். பாக்கியஸ்தானத்தை விட்டு சனி இடம் பெயருவதால் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தந்தையின் உடல் நிலையில் தக்க முன்னேற்றம் ஏற்படும். பக்தி அதிகரிக்கும் குடும்பத்துடன் பல புண்ணியஸ்தலங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். நல்ல குரு கிடைக்கப் பெற்று ஆன்மிகத்தில் முன்னேற உபாசனை மார்க்கத்தில் செல்வீர்கள். குடும்பத்தில் புதிய அனுகூலம் ஏற்படும். தொந்தரவுகள் புதிதாக முளைக்க வாய்ப்பிருக்கிறது. வண்டி வாகனம் மாற்றுவதில் கவனம் தேவை. நண்பர்கள் மற்றும் உறவினர்களால்அதிக ஆதாயம் ஏற்படும்.

**மதிப்பெண்கள்**
**50**
**100**

சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு தொழில் ஸ்தானமான 10ஆம் வீட்டை சனிபகவான் பார்ப்பதால் தொழில் மந்த நிலையே ஏற்படும். முயற்சியினால் ஓரளவு பணத்தட்டுப்பாட்டினை சமாளிக்கலாம். கொடுக்கல் வாங்குகலில் ஓரளவு சுமூகம் ஏற்படும். திருமணம், காதணி விழாக்கள் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். பணக்கட்டுப்பாடுகள் குறையும்.

பணியில் இருப்பவர்கள் இடமாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு ஏற்படும். மேல் அதிகாரிகளிடம் ஒற்றுமை ஏற்படும். வீண் அலைச்சல் ஏற்படும். வேலை கிடைக்காமல் தடுமாறி வந்த இளைஞர்களுக்கு நலல வேலைகள் கிடைக்கும். வெளியூர் பயணத்தால் இலாபம் கிடைக்கும்.


மாணவர்களுக்கு வெளியூர், பயணயோகம் கிட்டும். சிலர் மேல் படிப்புக்காக வெளிநாடு செல்வீர்கள். உங்களுக்கு புகழ் கூடும். அதிக மதிப்பெண்கள் பெற்று வாழ்வினில் வலம் பெறுவீர்கள்.

கலைத்துறையில் இருப்பவர்களுக்கு மந்தமான சூழ்நிலையே நிலவும் என்று கூறினால் அது மிகையாகாது. சனிபகவான் 10ஆம் இடமான தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறார். எனவே புதிய புதிய ஒப்பந்தங்களால் கையெழுத்திடுவதற்கு முன் சற்று யோசித்து செயல்பட்டால் நன்மை பயக்கும்.

பெண்கள் ஆடைஆபரணங்கள் புதியதாக வாங்கி அலங்கரித்து மகிழ்வீர்கள். கணவன் மனைவியிடையே ஒற்றுமைகளும் குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். பொது இடங்களில் பேச்சில் கவனம் தேவை. உத்யோகத்தில் இருக்கும் பெண்மணிகளுக்கு ஒரு சில பிரச்சனைகள் மேலதிகாரிகளில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சற்று கவனம் தேவை. பிள்ளைகளால் சில ஆதாயம் ஏற்படும். குடும்பத்துடன் குலதெய்வ வழிபாடு குதூகலமூட்டும்.

## சனி பகவான் பார்வைப் பலன்கள்:

சனி பகவான் பாக்கியஸ்தானமான 9ஆம் இடத்திலிருந்து துலாம் இராசியிலிருந்து 10ஆம் இடமான தொழில்ஸ்தானம் என்று அழைக்கப்படும் விருச்சிக இராசிக்கு இடம் பெயருகின்றார். மேலும் சனிபகவான் பார்வைப் பலன்கள் முறையே தனது இராசியிலிருந்து முறையே 4ஆம் இடமான ரிஷப இராசியினையும், 7ஆம் இடமான சிம்ம இராசியினையும், 12ஆம் இடமான மகர இராசியினையும் பார்த்து பலன்களைக் கொடுக்கிறார்.




### சனிபகவான் சுகஸ்தானம் ஆன 4ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சுகம், வண்டி, வாகனம், பூமி, வீடு, வியாபாரம் ஆகியவற்றைக் குறிக்கும் 4ஆம் இடத்தை பார்ப்பதால் ஆரோக்கியம் கெடும். வண்டி வாகன விபத்துக்கள் ஏற்படும் எச்சரிக்கை தேவை. நிலம் வாங்குதல், விற்பதில் சிரமங்கள் ஏற்படும். தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை தேவைப்படும். மருத்துவச் செலவுகள் அதிகமாகும். நண்பர்கள், நெருங்கிய உறவினர்கள் மூலம் பல ஆதாயங்கள் கிடைக்கப் பெற்று மகிழ்வீர்கள்.

### சனிபகவான் களத்திரஸ்தானமான 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சனிபகவான் திருமணம், நண்பர்கள், கூட்டுத்தொழில் ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமான 7ஆம் வீட்டைப் பார்ப்பதால், சிலருக்கு திருமணங்கள் நடைபெறுவதில் ஒரு சில தடைகள், கால தாமதம் ஆகும். விரும்பிய நண்பர்களும் விலகிச் செல்லும் நிலை ஏற்படும். கூட்டுத் தொழிலில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்படும். இதனால் மன உளைச்சல் ஏற்பட்டு விலகிச் செல்லும் நிலை வரலாம். வீண் பிடி வாதத்தினை தவிர்ப்பதன் மூலம் நிலமையை ஓரளவு சரி செய்யலாம்.

### சனிபகவான் விரையஸ்தானம் ஆன 12ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

விரையம், தூக்கம், மறுபிறவி ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமான 12ஆம் வீட்டை சனிபகவான் பார்ப்பதால் தொழிலில் நல்ல இலாபங்கள் ஏற்படும். இதுவரை இருந்த மனக்குழப்பங்கள் நீங்கி நித்திரை சுகம் கூடும். வருமானம் பெருகி புதியதாய் வண்டிவாகனச் சேர்க்கை ஏற்படும். ஒரு சிலருக்கு வெளியூர், பயணம் உண்டாக வாய்ப்பு உள்ளது. நீங்கள் எதிர்பார்த்த உதவி உங்களுக்கு கிடைக்கப் பெற்று மகிழ்வீர்கள். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் அரசியலில் உங்கள் செல்வாக்கு கூடும். திடீர் தன வரவு உண்டாகும். சில மகான்களின் தரிசனங்கள் கிடைக்கப் பெற்று மகிழ்வீர்கள். இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் சம்பந்தமான வியாபாரிகளுக்கு ஓரளவு இலாபம் கிடைக்கப் பெற்று மகிழ்வீர்கள். சகோதரர்கள் வழியில் உதவிகள் கிடைக்கப்பெறும்.

### சனிபகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் பலன்கள்:

பொன்னவனின் நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனி பகவான் **2.11.2014** முதல் **28.11.2014** வரை சஞ்சரிக்கிறார். தனம், வாக்கு, குடும்பம், பட்டம், குடும்பம், வலதுகண், ஆகியவற்றில் சிறு சிறு சங்கடங்கள் ஏற்பட்டு விலகும். இலாபம் குறையலாம் உஷார்.

### சனிபகவான் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

**29.11.2014** முதல் **26.12.2015** சனிபகவான் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம். வெளிவட்டார பழக்கவழக்கங்களில் சிறுசிறு சிக்கல் ஏற்படலாம். சுய கௌரவம் பாதிக்கப்படாமல் வீண் விரயங்கள் ஏற்படுவதை தவிர்க்க சிக்கனத்தை கடைபிடிப்பது நல்லது.

### சனிபகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

**27.12.2015** முதல் **24.01.2017** வரை புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம் குலதெய்வ வழிபாடு அடிக்கடி சென்று வழிபடுவது நல்லது. பூர்வீக சொத்தில் புது வில்லங்கம் ஏற்படலாம். புத்திரர்கள் வழியில் பிரியத்தைக் கூட்டுவது நலம்.

## சனி வக்ர பலன்கள்:

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2015 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கரத்தில் சஞ்சரிகின்றார்.**

*உங்கள் இராசிக்கு 1,12க்கு அதிபதியாக விளங்கும் சனிபகவான் இரண்டு முறை வக்கரத்தில் சஞ்சரிக்கின்றார். விரையஸ்தானம் மற்றும் ஜென்மஸ்தானத்தின் அதிபதி சனி 10இல் வக்கரம் அடைவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி குறையும். தொழில் விரையங்கள் ஏற்படலாம். நித்திரை சுகம் கெடும். புகழ், கௌரவம் குறைய வாய்ப்புகள் அதிகம் எனவே அதிக கவனம் தேவை.*

*கும்ப இராசிக்கு சனிபகவான் 10இல் சஞ்சாரம் செய்வது எப்படி இருக்கும்? நலம் தருமா? நன்மை செய்யுமா? என ஸ்ரீராஜமாதங்கி மூல மந்திரத்தை சுக்கிர வாரம் சுக்கிர ஹோரையில் வெண்ணிற ஆடை பூண்டு வெள்ளைமலர்களால் அர்ச்சித்து ஸ்ரீஞானஸ்கந்த மூர்த்தியை வணங்கி ஸ்ரீஜீவநாடி வாசிக்கப்பட்டது பின்வரும் பாடல் வந்தது.*

**"குடத்திலே உதித்த போக்கு**
**குணமான பலன் உரைப்போம்**
**பத்திலே மந்தன் பாங்காக அமர**
**சொத்திலே சிக்கல் வந்திடும் பாரு**
**அரசாங்கம் தன்னிலும்**
**சுயதொழில் தன்னினும்**
**சுத்தமாய் கவனம் வேணுமது வேணும்**
**அடிமை பணி தன்னிலும்**
**வியாபாரம் தன்னிலும்**
**விபரமது வேணும்**
**வில்லங்கம் வருமே**
**ஆனாலும் ஆசி**
**அவசியம் தேடு பரிகாரமே!"**

**பொருள்:** *கும்ப இராசிக்கு 10இல் சனி வருவதால் சொத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக பூர்வீக சொத்தில் ஏதேனும் புது வில்லங்கம் வரும் வாய்ப்பு உள்ளதால் மிகக் கவனம் வேண்டும். அரசு வகையில் அனுகூலம் குறைவதால் கூடுதல் எச்சரிக்கை தேவை. சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு இது அனுகூலமில்லாத காலம் என்பதால் மிகக் கவனம் தேவை. உத்தயோகத்தில் இருப்பவர்களும் சற்று உஷாராய் இருப்பது நல்லது. வியாபாரமும் சற்று டல்லடிக்கலாம். எனவே நிலமையை சமாளிக்கும் யோசனை செய்ய வேண்டியது. அவசியம் ஆனாலும் நட்சத்திர ரீதியாகச் சொல்லப்படும் பரிகாரங்களை கடைபிடித்தால் ஓரளவு நன்மைகள் ஏற்படும். ஜோதிட சாஸ்திரத்தில் 10இல் சனி வர தொழிலைக் கெடுக்கும் என்றும், 10ஆம் இடம் உபஜெய ஸ்தானம் கெடுக்காது என்றும் இரண்டு கூற்று உள்ளது. ஆனாலும் பரிகாரம் செய்ய 100% நன்மை கிட்டும் என்பது நிதர்ஸன உண்மையாகும்.*

## பரிகாரம்

### அவிட்டம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு

*குரு வாரம் 8 சந்நியாசிகளுக்கு பூஜை செய்து அன்னம் அளித்து ஜீவநாடி படிக்கப்பட்டது. அதன் பாடல் இங்கு தரப்படுகிறது.*

**"பகட்டான வாழ்வை**
**பாரினில் வாழ்ந்திட**
**பணம் வர**
**பக்குவம் கிட்ட**
**பல தொல்லைகள் நீங்கிட**
**பாங்காகவே**
**மகேஸ்வர பூஜை தன்னை**
**மகிழந்து செய்**
**மலர்ச்சியாகும் வாழ்வு!"**

**பொருள்:** *திருவண்ணாமலை ஸ்ரீதயவு சித்தாஸ்ரமத்தில் 51 அடியார்களுக்கு அன்னம் அளித்து வருடம் மும்முறை மகேஸ்வர பூஜை 3 வருடங்கள் செய்ய அனைத்து கர்ம வினைகளுக்கும் விடை கொடுத்து வளர்ச்சி ஏற்படும் என்பது 100% உண்மையாகும். திருவண்ணாமலை தயவு சித்தாஸ்ரமத்தின் ஸ்ரீசரவணன் சுவாமிகள் கைப் பேசி எண்: 99448 00220 வசதி இல்லாதவர்கள் ஒரு முறையாவது வாழ்வில் இப்பூஜை செய்ய வேண்டும்.*

### சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு:

*சதயம் நட்சத்திரத்தன்று சத்ரு சம்ஹார பூஜை செய்து நாடி படிக்கப்பட்டது அதன் பாடல்:*

**"வளமது ஆக**
**வசந்தம் தெரிய**
**குணமது ஆக**
**குவலயம் போற்ற**
**குபேரன் அருளும்**
**குன்றாமல் கிட்ட**
**சென்று சேவி**
**திருமலை சிவகாமி சமாதியே"**

**பொருள்:** *குற்றாலம் அருகில் பண்பொழில் கிராமத்தில் உள்ளது திருமலை முருகன் கோவில் அங்கு சிவகாமி அம்மையார் சமாதி உண்டு. அந்த சமாதியில் 50 பேர்க்கு அன்னதானம் செய்ய அபூர்வ மாற்றம் ஏற்படும் என்பது ஜீவநாடி அருள்வாக்கு தொடர்பு கொள்ள: செல்வம் கைப்பேசி எண் சூர்ய உதய காலத்தில் நாடி படிக்கப்பட்டது.*

### பூரட்டாதி 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு

**"வாட்டமது நீங்க**
**வளமது ஆக**
**சென்று வா**
**சேவித்து வா**
**புனவாசல் வாழும்**
**குடவரைக் காளியை**
**குவலயத்தில்**
**குபேரனாய் வாழ்வாய் ஆசி!"**

**பொருள்:** *புதுக்கோட்டையில் உள்ள திருப்புனவாசல் சென்று அங்குள்ள குடவரைக் காளியை வழிபட குபேரன் அருள்கிட்டும் என்பது 100% உண்மையாகும். இது ஜீவநாடி அருள்வாக்கு சத்தியம்.*




அன்பான மீன இராசி அன்பர்களே, கால புருஷ தத்துவத்தின்படி உங்களது இராசி கடைசி இராசி 12வது இராசி. உங்கள் இராசியின் அதிபதி குரு. புதன் நீசம், சுக்கிரன் உச்சம் ஆவது உங்கள் இராசியில் தான். பொன்னவன், நல்லவனாம் குருபகவானின் ஆசி அதிகம் பெற்றவர்கள் நீங்கள் கவர்ச்சியான தோற்றமும் வசீகரித்து இழுக்கும் பேச்சுத் திறமையும் கொண்டவர்கள் நீங்கள் நகைச்சுவையாக பேசும் சுபாவத்தினை இயற்கையிலேயே கொண்டிருப்பீர்கள். எதிர் பாலினத்தை வெகுவாகக் கவர்ந்து விடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களிடம் மிகுந்த பாசமுடன் நடந்துக் கொள்வீர்கள். சுக்கிரன் உசசம் என்பதால் ஆடம்பர வாழ்வில் அலாதிப் பிரியம் கொண்டவர்களாகத் திகழ்வீர்கள். கேளிக்கை, சினிமா, விழாக்கள், சுபநிகழ்ச்சிகள் ஆகியவற்றிலும் ஆடை ஆபரண சேர்க்கையிலும் அதிக அக்கறை காட்டுவீர்கள். தான, தர்மம் செய்வதில் அதிக ஈடுபாடு கொண்டிருப்பீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகம் உடையவராகத் திகழ்வீர்கள். ஏதாவது ஒன்றை சாதித்தே ஆக வேண்டும். என்ற ஏற்றத்தையே எண்ணமாகக் கொண்டு செயல்படும் விதமும், என்னதான் சாதித்தாலும் எதற்கும் அலட்டிக் கொள்ளாமல் இருக்கின்ற நிலையும் எதைப் பற்றிக் கேட்டாலும் அதைப் பற்றி ஆணித்தரமாக கூறுகின்ற அறிவும், பொசுக்கென்று கோபித்துக் கொள்கின்ற முன் கோபமும், கொண்டு தனித்திறமாக விளங்குவீர்கள். இரட்டைப் படை இராசி, பெண் இராசி, பாரம்பரியத்திலும், இசையிலும், பாடுவதிலும் வல்லமையாளராகத் திகழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

| மதிப்பெண்கள் |
|---|
| 80 |
| 100 |

சனிபகவான் இதுவரை உங்கள் இராசிக்கு 8ஆம் இடமான அஷ்டமச்சனியாக விளங்கி உங்களை அல்லல்படுத்திக் கொண்டு இருந்தார். இனி பாக்கியத்தைக் குறிக்கும் 9ஆம் இடத்திற்கு பெயர்ச்சியாகி என்னவாறு அன்பையும், ஆனந்தத்தையும் தரப் போகிறார் என்று இனிப் பார்க்கலாம்.

சனி பகவான் உங்கள் இராசிக்கு 8ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து 9ஆம் இடமான விருச்சிக இராசிக்கு திருக்கணிதப்படி 2.11.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8.45 மணிக்கும், வாக்கியப்படி 16.12.2014 அன்றும் பெயர்ச்சியாகின்றார்.

இதுவரை சனிபகவான் 8ஆம் இடத்தில் அஷ்டமசனியாய் விளங்கி 2½ ஆண்டு காலம் உங்களை அல்லல்படுத்திய சனிபகவான், பாக்கியஸ்தானத்திற்கு பெயர்ச்சியாகிறார். மேற்படி தேதிகளில் இதுவரை தொழிலில் கஷ்டம், தேவையற்ற வம்பு வழக்குகளில் தவித்தல், குடும்பத்தில் கருத்து வேற்றுமை, இடம் விட்டு இடம் பெயருதல் போன்ற எதிலெடுத்தாலும் கஷ்டம், எதைத் தொட்டாலும் நஷ்டம் என்று அடுக்ககடுக்காய் அல்லல் பட வைத்த சனிபகவான் இனி தலை கீழாக மாறும் காலம் இனி வரும் 2½ ஆண்டுகளும் அன்பையும், ஆனந்தத்தையும், வசதிகளையும, வாய்ப்புகளையும் அடுக்கடுக்காய் பொழியப் போகின்றார். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் இருக்கும். இது உங்களுக்கு பொற்காலம் என்றே கூறலாம். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். கணவன் மனைவியிடையே சச்சரவுகள் நீங்கி மகிழ்ச்சி பிறக்கும். உறவினர்களால் நற்பலன் குல தெய்வ ஆசி கிட்டும். சுறுசுறுப்பும் உற்சாகமும் பெருகும். உங்கள் நடையில் கூட ஒரு துள்ளல் இருக்கும். சோர்வு, தளர்வு எல்லாம் ஓடிப்போய் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

சொந்த தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த அளவு இலாபம் கிட்டும். புதிய புதிய முயற்சிகள் செய்வதற்கு இதுவே முக்கியத் தருணமாகும். ‘காற்றுள்ள போதே தூற்றிக் கொள்’ என்ற பழமொழிக்கு ஏற்ப சுப நிகழ்ச்சிகள், வீடு, மனை, வாங்குதல் போன்றவற்றைச் செய்து முடிக்கும் தருணம் இதுவே. பணவரவு அதிகமும். பொருள் வரவும் கூடிடும்.


பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளினால் பாராட்டு கிடைக்கும். சிலருக்கு விரும்பியவாறு இடம் மாற்றம் கிடைக்கும். சக ஊழியர்களால் ஆதாயம் ஏற்படும். தொல்லைகள் நீங்கும் உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். தன இலாபம் கூடும்.

மாணவர்களுக்கு தான் விரும்பியவாறு சூழல் ஏற்பட்டு படிப்பில் ஆர்வம் ஏற்படும். விரும்பிய மதிப்பெண்களைப் பெறுவீர்கள். ஞாபக சக்தி கூடும். ஆசிரியர் மாணவர்கள் உறவில் சுமூகம் ஏற்படும்.

பெண்களுக்கு ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். பணியில் உள்ள பெண்களுக்கு பணிச் சுமை குறையும். விலகிச் சென்ற உறவினர்களும், நெருங்கி வந்து நண்பர்களாகும் சூழ்நிலை உருவாகும். மற்றவர்கள் மதிக்கக் கூடிய உன்னத நிலையும் உண்டாகும். அரசு வழியில் அனுகூலம் உண்டாகும். குழந்தைப்பேறு கிடைக்கும். திருமணங்கள் இதுவரை தடைப்பட்டு வந்த சூழ்நிலை மாறி சுபநிகழ்ச்சிகள் நடைபெற்று மகிழ்வீர்கள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் புதிய புதிய விஷயங்களில் ஈடுபடுவீர்கள்.

## சனி பார்வைப் பலன்கள்:

சனி பகவான் இதுவரை 8ஆம் இடமான துலாம் இராசியிலிருந்து இனி 9ஆம் இடமான விருச்சிக இராசிக்கு இடம் பெயருகின்றார். மேலும் சனி பகவான் பார்வைப் பலனாக 3ஆம் பார்வையாக மகர இராசியினையும், 7ஆம் பார்வையாக ரிஷப இராசியினையும், 10ஆம் பார்வையாக சிம்ம இராசியினையும் பார்வையிடுகிறார். 3,6,11ஆம் இடங்களைப் பார்வை செய்கிறார்.




**சனி பகவான் தைரியஸ்தானமான 3ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

சனிபகவான் தைரியஸ்தானம், புகழ்ஸ்தானம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமான 3ஆம் வீட்டைப் பார்ப்பதால் தைரியம், கூடும், புகழ், கௌரவம் அதிகமாகும். சகோதர, சகோதரிகளிடம் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். அவர்களிடம் வேண்டிய உதவிகள் கிடைக்கப்பட்டு மகிழ்வீர்கள். சொத்து வகையில் இருந்த பிரச்சனைகள் நீங்கி சொத்துக்கள் குவியும் நேர்முகமறைமுக எதிர்ப்புகள் விலகும். விபரீத இராஜயோகம் ஏற்படும். அறிமுகமில்லாத நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறும்.

**சனிபகவான் 6ஆம் இடத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

நோய், கடன், எதிரி, வழக்கு ஆகியவற்றைக் குறிக்கும் ஸ்தானமான 6ஆம் இடத்தை சனிபகவான் பார்வை இடுவதால் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சி பெறுவீர்கள். தன இலாபம் கூடும். எதிரிகளை இணங் கண்டு விடுவீர்கள். தொழிலில் புதிய முயற்சிகள் ஏற்பட்டு தன லாபம் பெருகும். கடன் தொல்லை நீங்கும். வம்பு வழக்குகள் சுமூகமான நிலைக்கு வரும். கொடுக்கல் வாங்கலில் சீர்படும். கூட்டுத் தொழிலில் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**சனி பகவான் 11ஆம் இடமான லாபஸ்தானத்தைப் பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

சனிபகவான் இலாபஸ்தானம், தனஸ்தானம் என்று போற்றப்படும் 11ஆம் இடத்தை சனிபகவான் பார்ப்பதால் இலாபம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் கை கொடுக்கும். சகல வகையிலும் முன்னேற்றம் ஏற்படும். மெய்வருத்த கூலி தரும். பல சுப நிகழச்சிகள் நடைபெறும். எடுத்த காரியங்கள் அத்துணையும் வெற்றி பெறும். மருத்துவ செலவுகள் கட்டுப்படும். பிள்ளைகள் மூலம் பல நன்மை கிட்டும். குல தெய்வ அருள் கூடும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். மந்திர சித்திகள் கை கூடும். அதிர்ஷ்டம் ஏற்படும். உற்சாகம் பிறக்கும்.

**சனிபகவான் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

குருபகவானின் நட்சத்திரமான விசாக நட்சத்திரத்தில் சனிபகவான் **2.11.2014** முதல் **28.11.2014** வரை சஞ்சரிக்கின்றார். எடுக்கின்ற காரியங்கள் யாவும் வெற்றியாகும். தொழில் சிறக்கும். தொல்லைகள் நீங்கும். கடன் குறையும் கையிருப்பு கூடும். எல்லாப்பிரச்சனைக்கும் தீர்வு கிட்டும்.

**சனி பகவான் அனுஷம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

**29.11.2014** முதல் **26.12.2015** வரை அனுஷம் நட்சத்திரத்தில் சனிபகவான் சஞ்சரிக்கும் காலம். வெளியூர் வெளிநாட்டு பயணம் வெற்றியாகும். வெளியூரிலிருந்து சுபச் செய்தி வரும். ஆடை அலங்கார பொருள் மீது ஆர்வம் அதிகமாகும். அரசியலில் அனுகூலம் உண்டாகும். மொத்தத்தல் நல்ல காலம் என்றே சொல்லலாம்.

**சனிபகவான் கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

**27.12.2015** முதல் **24.01.2017** வரை கேட்டையில் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம் வண்டி வாகனம் சிறக்கும். வசதிகள் கூடும். சுகம் கூடும். சூழுகின்ற நலம் கிட்டும். வம்பு நீங்கும். வாய்ப்புகள் பல உருவாகும்.

## சனி வக்ர பலன்கள்

**15.3.2015 முதல் 2.8.2015 வரையும் 26.3.2015 முதல் 12.8.2016 வரையும் இரண்டு முறை வக்கரத்தில் சஞ் சரிக்கின்றார்.**

உங்கள் இராசிக்கு 11,12க்கு அதிபதியாக விளங்கும் சனிபகவான் இரண்டு முறை வக்கரத்தில் சஞ்சரிக்க உள்ளார். இலாபஸ்தானம் மற்றும்

விரையஸ்தானத்தின் அதிபதி சனி 9இல் வக்ரம் அடைவது நலமில்லாத நிலையே. எனவே தொழிலில் அதிக கவனம் தேவை. வெளிநாடு, வெளியூர் பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது எனவே கவனமுடன் செயல்படுவது நன்மை பயக்கும்.

மீன இராசிக்கு அஷ்டமச் சனி விலகி 9இல் சனி பகவான் சஞ்சரிக்கும் காலம் எப்படி இருக்கும் என குரு அஷ்டகம் படித்து ஸ்ரீஇராகவேந்திர சுவாமியை பூஜித்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அப்போது வந்துதித்த பாடல்

**"கடைராசி தனக்கு**
**கச்சிதமாய் உரைப்போம்**
**கஷ்டமது நீங்கும்**
**காலமது கனியும்**
**நஷ்டமது ஓடும்**
**நன்மையது விளையும்**
**நான்கு பேர் மெச்சும்**
**நல்வாழ்வு அமையும்**
**நலமது கிட்டும்**
**நலமே நலம்!**
**நன்மைகள் கூட**
**பரிகாரம் தேடு"**

**பொருள்:** மீன இராசி கடைசி இராசி அந்த கடைசி இராசியில் பிறந்தவர்களுக்கு அஷ்டமச் சனி விலகுவதால் 9இல் சனி வர எல்லா கஷ்டம், நஷ்டம் நீங்கி பேரும் புகழுடன் நலமாக வாழும் நிலை கிட்டும் என்கிற ஜீவநாடி கூடுதல் நன்மை ஏற்பட பின்வரும் பரிகாரங்களை நட்சத்திர அடிப்படையில் கடைபிடிப்பது நல்லது.

### பூரட்டாதி 4ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு:

பூரட்டாதியன்று குரு ஹோரையில் குரு காயத்ரி ஜபித்து பூஜித்து ஜீவநாடியில் வாக்கு கேட்கப்பட்டது. அந்த பாடல்:

**"எட்டிலே மந்தன்**
**ஏமாற்றம் தந்தன்ம**
**நவமேறி இங்கு**
**நலமெல்லாம் தரவே**
**பூரண சுகமாம்**
**புண்ணியமாம்**
**பூரிப்பாம் புவனத்தில்**
**கூடிடவே தேட**
**நாடிவா நட்பு**
**நலமெல்லாமல் அருளும்**
**ஞான ஸ்கந்தனை**
**நவமான இருட்டில்**
**சேவித்துவா சிறப்பு"**

**பொருள்:** ஈரோடு மாவட்டம் பவானி அருகில் உள்ளது அந்தியூர். அந்தியூரிலிருந்து 10 கி.மீ தொலைவில் உள்ள புதுக்காடு கிராமம் விலாங்குட்டை எனும் ஊரில் மலைக்காரன் தோட்டம் எனும் பகுதியில் உள்ள ஸ்ரீஞானஸ்கந்த மூர்த்தி ஆலயத்தை 9 மாதம் அமாவாஸை அன்று இரவு நடக்கும் பூஜையில் கலந்துக் கொண்டு வழிபட சிறப்பு பலன் இரட்டிப்பாகும். என்கிறது ஜீவநாடி.

**குறிப்பு:** நமது ஜீவநாடி இந்த ஆலயத்தில் எப்போதும் பூஜிக்கப்படுகிறது. என்பதும், இந்த ஜீவநாடியில் சொல்லும் முருகன் கோவில் இது என்பதும் அடியேன் பூஜை செய்யும் ஆலயம் என்பதும் கூடுதல் சிறப்பு. செல்: 98658 48488

### உத்திரட்டாதியில் பிறந்தவர்களுக்கு:

உத்திரட்டாதி அன்று உமா மகேஸ்வரி உள்ளன்போடு தியானித்து அபிராமி அந்தாதி பாராயணம் செய்து ஜீவநாடி படிக்கப்பட்டது. அதன் பாடல்

**"உண்மையாய்**
**உறுதியுடன்**
**உளமதில்**
**உவகையுடன்**
**தேடி வா நாடி வா**
**சேவித்து வா**
**சேஷாத்ரிதனின்**
**ஜீவிதக் கோவிலை**
**நலமுடனே**
**நட்புடனே**
**நான்குமுறை நல் நிலவிலே**
**நவின்றேன்**
**நலமடைவாய்**
**நலம்! ஆசி"**

**பொருள்:** திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் அக்னிலிங்கம் அருகில் உள்ளது ஸ்ரீசேக்ஷாத்ரி சுவாமிகள் ஆஸ்ரமம் அங்கு சென்று நான்கு பௌர்ணமியில் வழிபட்டு வர நலம் யாவும் தேடி வரும் வளம் யாவும் கூடி வரும் என்பது 100% நடக்கும் என்று ஜீவநாடி சொல்கிறது. திருவிளையாடல்களின் மன்னன் ஸ்ரீசேக்ஷாத்ரி சுவாமிகள் ஆசிரம தொலைபேசி எண் 04175 236999

### ரேவதியில் பிறந்தவர்களுக்கு

ரேவதி நட்சத்திரத்தன்று 27 முறை அரசமரத்தைச் சுற்றி மூலம் மந்திரம் ஜபித்து வழிபட்டு ஜீவநாடி படிக்கப்பட்டது. அதன் பாடல்:

**"அன்புடனே ஆசார பூஜை**
**பண்புடனே செய்திடவும் கூடும்**
**அற்புதங்கள் அத்துணையும்**
**அடைந்திடவும் கூடிடவும்**
**ஆச்சர்யமான பலன் கிட்டவும்**
**அதிசய மாற்றமது கண்டிடவும்**
**கண்டு வா சென்று வா**
**கச்சிதமாய் பேரையூர்**
**நாகநாத ஈசனையே**
**நலமாகுமே நலம்"**

**பொருள்:** புதுக்கோட்டைக்கு அருகில் உள்ளது பேரையூர் இராகு கேது ஸ்தலம். அங்குள்ள நாக நாத சுவாமியைச் சென்று வழிபட அனைத்து நலன்களும் அன்புடனே 100% தேடி வரும் என்பது ஜீவநாடி அருள்வாக்கு.

— சுபம் —